# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 30 ஞாயிற்றுக்கிழமை (13.06.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 199


12 JUN 2010

## பிரதேச நிர்வாகமுறையை ஒழித்து

# புதிய அதிகாரங்களுடன் மக்கள் சபைகள் வரும்!

## இந்தியப் பஞ்சாயத்தை ஒத்திருக்கும் என்கிறார் விமல்

கொழும்பு,ஜூன்13

பிரதேச சபைகள் நிர்வாக முறை ஒழிக்கப்படும். அவற்றுக்குப் பதிலாக கூடுதல் அதிகாரங்கள் கொண்ட கிராம மட்டத்திலான மக்கள் சபைகள் நிறுவப்படும். அவை இந்தியப் பஞ்சாயத்து சபைகளை ஒத்தவையாக இருக்கும். கிராம மட்டத்தில் அதிகாரங்களைப் பரவலாக்கும் புதிய பொறி முறையாக இது அமையும்.



தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னர் ஜனதா விமுக்தி பெரமுனையின் முதன்நிலைத் தலைவரும் வீடமைப்பு மற்றும் பொறியியல் தொழில்நுட்ப அமைச்சருமான விமல் வீரவன்ஸ இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

உத்தேச புதிய உள்ளூராட்சி நிர்வாக முறை குறித்து அவர் மேலும் விவரித்த அம்சங்கள் வருமாறு:-

* அரசமைப்பு சட்டத்தில் மேற்கொள்ளப்பட இருக்கும் மூன்றாம் கட்டத் திருத்தத்தில் - மாற்றங்களில் - பிரதேச நிர்வாகக் கட்டமைப்பு முறை முற்றாக ஒழிக்கப்படும். (28ஆம் பக்கம் பார்க்க)

## பொருளாதார கட்டமைப்புகள், முதலீடுகளுக்கு சீனாவின் உதவிகள் தொடர்ந்தும் கிடைக்கும்

### அந்நாட்டின் துணைப் பிரதமர் மஹிந்தவிடம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 13

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு சீனா தொடர்ந்தும் உதவும். பெரும் முதலீடுகள், பெரிய பொருளாதாரக் கட்டமைப்புக்கள் ஆகியவற்றுக்கு சீனா உதவிகளைத் தாராளமாக வழங்கும்.

இலங்கை வந்துள்ள சீனாவின் துணைப் பிரதமர் சாய்ங் டிஜியாங் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நேற்று காலை உணவுடன் கூடிய சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இப்படிக் கூறினார்.

உயர்மட்ட அதிகாரிகள் சகிதம் இலங்கை வந்துள்ள அவர், ஜனாதிபதியை நேற்று ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துப் பொருளாதார அபிவிருத்தி மற்றும் இருதரப்பு உறவுகள் குறித்துப் பேச்சு நடத்தினார்.

கொழும்பு - கட்டுநாயக்கா (28ஆம் பக்கம் பார்க்க)

## நிக்கோபார் தீவுகளில் கடும் பூகம்பம் இலங்கையை சுனாமி தாக்கலாம் என எச்சரிக்கை

### கரையோர மக்களை வெளியேறத் தயாராகுமாறு அறிவுறுத்து

கொழும்பு,ஜூன் 13

இலங்கையை சுனாமி எந்த நேரத்திலும் தாக்கக் கூடும் என்று இன்று அதிகாலை 1.45 இற்கு கொழும்பு வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்தது.

அந்தமான், நிக்கோபார் தீவுகளில் 7.7 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் - பூகம்பம் நேற்று நள்ளிரவுக்குப் பின்னர் உண் டாகியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று நள்ளிரவு (28ஆம் பக்கம் பார்க்க)

## விழுப்புரத்தில் ரயில் தண்டவாளம் குண்டுவைத்துத் தகர்ப்பு!

## 2,000 பயணிகள் நூலிழையில் உயிர் தப்பினர்!!

### மஹிந்தவின் விஜயத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து விடுதலைப்புலிகள் ஆதரவாளர்கள் கைவரிசை

சென்னை,ஜூன்13

தமிழ் நாட்டில் விழுப்புரத்துக்கு அருகே நேற்று அதிகாலை இடம்பெற்ற ரயில் தண்டவாளக் குண்டு வெடிப்பில் இரண்டாயிரம் பயணிகள் நூலிழையில் உயிர் தப்பினர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது :-

திருச்சியில் இருந்து சென்னை நோக்கி அதிகாலை 2.30 மணிக்கு வேகமாக வந்து கொண்டிருந்தது ''ராக்போட்'' கடுகதி ரயில். அதனைக் கவிழ்ப்பதற்காக விழுப்புரம் அருகே உள்ள விக்கிரவாண்டி சித்தனியில் ரயில் தண்டவாளம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

குண்டு வெடிப்பினால் 3 மீற்றர் நீளமான ரயில் தண்டவாளம் சேதம் அடைந்ததுடன், 4 அடி ஆழத்தில் பள்ளமும் உண்டாகியது. அதனால் வேகமாக வந்துகொண்டிருந்த ரயில் தடம்புரண்டு பலரின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை இருந்தது.

ஆனால் இந்தக் குண்டு வெடிப்புத் தொடர்பாக முன்னரே தகவல் தெரிந்ததால் ராக்போட் ரயில், குண்டு வெடிப்பு நடந்த இடத்தில் இருந்து பதினைந்து மீற்றர் தூரத்துக்கு அப்பால் நிறுத்தப்பட்டது. அதனால் ஏற்படவிருந்த பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டது.

இந்த ரயில் தண்டவாளம் தகர்ப்புக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்பினரே காரணம் என்றும் இது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே நடத்தப்பட்டது என்றும் பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

குண்டு வெடிப்பு நடந்த இடத்திற்கு அருகில் இருந்து கையினால் எழுதப்பட்ட கடிதம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதில் ''இந்திய அரசே இரத்த வெறி பிடித்த ஓநாய் ராஜபகஷவின் இந்திய வருகையைக் கண்டிக்கின்றோம். தமிழின அழிப்புக்குத் துணைபோன இந்திய அரசையும் தமிழக அரசையும் கண்டிக்கின் றோம். தமிழா.... இனியும் மௌனம் சாதித்தால் புரியாது நமது மௌன வலி. இவ்வண்ணம் பிரபாகரனின் தம்பிகள்'' என்று எழுதப் பட்டிருந்தது.

இதுகுறித்து (28ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவோருக்கு தமிழ்நாட்டில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்


### மத்திய அமைச்சர் நாராயணசாமி எச்சரிக்கிறார்

சென்னை,ஜூன்13

தமிழ்நாட்டில் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவாகச் செயற்படும் அரசியல் குழுக்களுக்கு எதிராக உடன் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

மத்திய அரசின் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான ராஜாங்க அமைச்சர் வி. நாராயணசாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களின் (28ஆம் பக்கம் பார்க்க)

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் அடகுச்சேவை

- 365 நாள் வங்கிச் சேவை
- நீடித்த வங்கி நேரங்கள்
- அதிகபட்ச பாதுகாப்பும் நம்பகத்தன்மையும்
- முன்னறிவித்தல் இன்றி மீட்கலாம்
- பகுதி பகுதியான மீட்பு வசதி

யாழ்ப்பாணக் கிளை: 35, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 4 920 283 - 5

அடகுச்சேவை வவுனியா மற்றும் மட்டக்களப்பிலும் பெற்றுக்கொள்ளலாம்


Nations Trust Bank Nations Gold Advances

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பி எல் சி - PQ 118

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை



SINGER

யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக் கழக மாணவனும்
கலாவித்தகர் கிருபா அனந்தகோபன் அவர்களின் மாணவனுமான
# செல்வன் ஸ்ரீதரன் டிலுக்சன் அவர்களின்
(யா/யாழ்.மத்திய கல்லூரி தரம் 11 மாணவன்)
# மிருதங்க அரங்கேற்றம்
இடம்: இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார் கல்யாண மண்டபம்
காலம் : 13.06.2010 பி.ப. 2.30



திரு. திருமதி ஸ்ரீதரன் தம்பதிகளின் புதல்வனும்
உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழக ஆசிரியர் கலாவித்தகர் திரு. கிருபா
அனந்தகோபன்(B.Sc) அவர்களின் மாணவனுமாகிய செல்வன் ஸ்ரீதரன் டிலுக்சன்
அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் இன்று(13.06.2010)
ஞாயிறு பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

தலைவர்:
செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்
(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)
பிரதம விருந்தினர்:
பேராசிரியர் கே.கந்தசாமி
(தலைவர், பௌதிகவியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்கள்:
சங்கீத வித்துவான் A.K.கருணாகரன்
(தலைவர், ஆலாபனா சங்கீத சபா, கொழும்பு)
கலாநிதி N.V.M.நவரட்ணம்
(இசைத் துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)
ஆ.சி.நடராசா (முகாமையாளர், தினக்குரல்)

அணி செய் கலைஞர்கள்
பாட்டு:
சங்கீதரத்னா, இளம் இசைத் தென்றல் நெடுமரம்
சி.முத்தழகு(தமிழ்நாடு)
வயலின்: வித்துவான் அ.ஜெயராமன்
மிருதங்கம்: செல்வன் ஸ்ரீதரன் டிலுக்சன்
கஞ்சிரா: கலாவித்தகர் க.நந்தகுமார்
கடம்: வித்துவான் கு.ரவிசங்கர்
முகர்சிங்: கலாவித்தகர் சி.செந்தூரன்
தம்புரா: செல்வன் தே.தனுஜன்



# விற்பனை மேற்பார்வையாளர்கள், விற்பனை முகவர்கள் தேவை

25 கோடிக்கும் அதிகமான மக்களின் ஆயுட் காப்புறுதியைப் பெற்றுள்ள உலகின் மிகப்பெரிய சக்திவாய்ந்த ஆயுள் காப்புறுதி நிறுவனத்தில் நீங்களும் இணைந்துகொள்ள இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்.

வடமராட்சிப் பிரதேசத்தில் எமது ஆயுள் காப்புறுதி விற்பனையை அதிகரிக்க தகுதியும் திறமையும் உள்ள ஆண், பெண் விற்பனை மேற்பார்வையாளர்கள் மற்றும் காப்புறுதி முகவர்கள் தேவை.

**விற்பனை மேற்பார்வையாளர்கள்**
தகுதி : வயது 21 இற்கு மேல்
* க.பொ.த. உயர்தரம் அல்லது அதற்கு சமமானது
* வழிநடத்தல் திறமை
* இரு மொழிகளில் தேர்ச்சி
* விற்பனை முகவர்களை நெறிப்படுத்துவதில் குறைந்தது 2 வருட அனுபவம்
* மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல்

ஊதியம் : விற்பனைக் கொடுப்பனவு

**விற்பனை முகவர்கள்**
தகுதி : 18 வயதிற்கு மேல்
* க.பொ.த. சாதாரண தரம் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
* தொடர்பாடல் திறன்

ஊதியம் : திறமைக்கு ஏற்ப

தொழில் திறமைகளை வளர்க்கும் பயிற்சிகள், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வழங்கப்படும் திறமைசாலிகள் நல்ல ஊக்குவிப்புகளுக்கும், சன்மானங்களுக்கும் உரித்தாவர்.
10 நாள்களுக்குள் தங்கள் சுயவிவரக் கோவையை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

ஆயுள் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை
பருத்தித்துறை அபிவிருத்தி நிலையம்
இல. 327, A பிரதான வீதி,
பருத்தித்துறை.
0777427495 (99448)

LIC
Life Insurance Corporation (Lanka) Ltd.


# மரண அறிவித்தல்கள்

## எஸ்தாக்கி வரதராஜா



உயரப்புலம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த எஸ்தாக்கி வரதராஜா நேற்று (12.06.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எஸ்தாக்கி - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், திரேசம்மாவின் அன்புக் கணவரும், கிளமென்ற், மனுவல், காலஞ்சென்றவர்களான பாவிலு, பேதுரு, விசிறித் தம்மா, டெய்சி ஆகியோரின் சகோதரனும், திரேஸ் மஞ்சுளா, திரேஸ் வசந்தி, திரேஸ் மாலினி, திரேஸ் வசந்தராணி, முருகதாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவநேசன், வின்சன்டர், வின்சலோஸ், மாஜோரி ஆகியோரின் மாமனாரும், சுதன், சுமன், சாந்தன், கிறிஸ்ரியானா, வின்சியா, ஜெனிபர், செரீனா, செகீனா, ஜீலியான் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (13.06.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக ஆனைக்கோட்டை கத்தோலிக்க சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.*
தொ.பே.: 0773243319 (99446)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி பசுபதி விஜயலட்சுமி(சின்னக்கிளி)



கொட்டடி முத்தமிழ் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவரும் அனலைதீவைச் சேர்ந்தவருமான திருமதி பசுபதி விஜயலட்சுமி 09.06.2010 புதன் கிழமை அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி ஐயம்பிள்ளை (அனலைதீவு) - சின்னம்மா (கொட்டடி) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ம.சவரிமுத்து - ஆச்சிமுத்து தம்பதியரின் பாசமிகு பெறாமகளும் காலஞ்சென்றவர்களான ந.மாரிமுத்து, நாகமுத்து ஆகியோரின் மூத்த மருமகளும் காலஞ்சென்ற மாரிமுத்து பசுபதியின் அன்பு மனைவியும் கனகராஜா (ரவி - ஆசிரியர்), இரத்தினராசா(சேகர்), ஆனந்தராசா(ஜோச்), சந்திரன், ஜெயக்குமாரி (ஜெயா), பிறேமகுமாரி (பிறேமா, முத்தமிழ் சிறுவர் பாடசாலை ஆசிரியை), விஜயகுமாரி(யாழினி), இராஜகுமாரி (ஜெசிந்தா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுமந்தா, சாந்தமனோகரி, சீ.செல்வம், க.தயாபரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரோசன், மௌனிசன், விபீசன், றபீனா, லவன் செயன், ரிசிகேஷன், துசிகேஷன் (க.பொ.த.உயர்தரம், யாழ். மத்திய கல்லூரி), சிவதி (யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), கனுசாந்(யாழ்.மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் க.பரமானந்தம்(ஆத்திசூடி வீதி) சு.நவரத்தினம்(காந்தி), அமரர்கள் சுமத்திரை(கொக்குவில்), கந்தசாமி மற்றும் பாலசிங்கம், வள்ளியம்மை, அமரர் மணி, அமரர் புலேந்திரராசா மற்றும் லீலா, கலா, தனபாலசிங்கம் (காசாளர், தெ.ப.கூ.சங்கம், யாழ்ப்பாணம்), வைரமுத்து, மகாலிங்கம், விசுவலிங்கம், சின்ராசா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் அமரர் சரஸ்வதி மற்றும் தங்கம்மா, அமரர் சிவராசா மற்றும் கனகசபை(சின்னண்ணை), கண்மணி, சற்குணம் (தேவி), பாக்கியம்(கோகிலா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல. 11, முத்தமிழ் வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.*
தொ.இல. 021 2228017 (99416)

தகவல்:
குடும்பத்தினர்.


# செயல்திறன் அரங்க இயக்கம்
நடத்தும்
நாடகமும் அரங்கியலும் உயர்தரப் பரீட்சை
## வழிகாட்டல் கருத்தரங்கு
விடைத்தாள் திருத்துவதில் அனுபவசாலிகளான விரிவுரையாளர்கள், பிரபல ஆசிரியர்கள் முன்நடத்தலில்...
26, 27/06/2010
காலை 9 - 1 பி.ப.
யாழ். மத்திய கல்லூரி (தம்பர் மண்டபம்)
பதிவுக்கான இறுதித் திகதி - 17.06.2010
(மாணவர் எண்ணிக்கை மட்டுப்பட்டது)
தொடர்பு:
'அருளகம்' ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
மேலதிக விவரங்களுக்கு: 0213216222, 0778995403, koothharangam@gmail.com



# விற்பனைக்கு
பளை, பெரிய பளை, A9 வீதிக்கு அண்மையில் 20 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு
T.P: No: 0771546709, 0776669086


## மக்கள் மன்றம் 9ஆம் பக்கத்தில்

உள்ளே 09ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள மக்கள் மன்றம் பத்தியின் தலைப்பு ''மார்பு நோயாளர்களுக்கான விடுதி'' என்றிருக்கவேண்டும். தயவுசெய்து திருத்தி வாசிக்கவும்.

## சாவகச்சேரிப் பகுதியில் பெருங்குடி மக்கள் கைது

யாழ்ப்பாணம்,ஜூன்13

சாவகச்சேரி நகர் பகுதியில் மது போதையில் பொது மக்களுக்கு இடைஞ்சல் தரும் வகையில் நடமாடியதாகக் கூறப்படும் 10 இற்கும் மேற்பட்ட 'பெருங்குடிமக்களை' பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இவ்வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சம்பந்தப்பட்டவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டு நீதிமன்றில் மன்னிப்புக் கோரியதை அடுத்து எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்

# அந்தியேட்டி அழைப்பும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்



## திருமதி மருதனாச்சிப்பிள்ளை இராசதுரை

ஐயிரண்டு திங்கள் அங்கமெல்லாம் நொந்து
கண்ணிரண்டும் மூடாமல் பத்திரமாய்க் காத்து
நாவிரண்டு பிள்ளைகளும் தக்க வழி செல்ல
அறவழி காட்டி தர்மங்கள் செய்த அன்பின் இருப்பிடமே
பண்பின் உறைவிடமே - அம்மா
நீங்கள் உங்களுக்கென்று என்றும் வாழ்ந்தவர் அல்ல
அன்னையே - உன் வாழ்வு போதுமென்று விரைந்து நீ சென்றாலும்
எம் மனசு ஆறாது, தேறாது... என்றென்றும்...
உம் இனிய நினைவுகளுடன் நீங்கள் காட்டிய வழியில் நடந்திடுவோம்
உம் ஆன்மா இறைவனின் சந்நிதியில்
நித்தியமாய் சாந்திபெற என்றும் இறைவனைத் துதித்திருப்போம்

இன்று(13.06.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியவில் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய மண்டபத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*எச்சாட்டி,*
*சுதுமலை தெற்கு, மானிப்பாய்.* (99451)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி மனுவல் சிமியோன் அன்னப்பிள்ளை



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிமியோன் அன்னப்பிள்ளை நேற்று (12.06.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டோமினிக் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற மனுவல் சிமியோனின் பாசமுள்ள மனைவியும், காலஞ்சென்றவர்களான நேசம்மா, இராசையா, அன்னம்மா, சின்னையா மற்றும் தங்கம் (பண்டத்தரிப்பு), கண்மணி (கனடா) இவர்களின் அன்புமிக்க சகோதரியும், அருட்சகோதரி ஈவோன் (மாகாண இல்லம், யாழ்ப்பாணம்), பிலமினா காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் அருட்சகோதரி கலிஸ்ரா (திருக்குடும்பக் கன்னியர்மடம், கரம்பொன்), மாட்டீன் பத்திநாதர் (நோர்வே), சிசிலியா, மரியபுஸ்பம் ஆகியோரின் பாசமுள்ள தாயும், ஞானப்பிரகாசம், செபமாலை, மேரிகில்டா (நோர்வே), ஞானமணி, மரியதாஸ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.06.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து புனித அன்னாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, இறுதி வழிபாட்டின் பின் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*அன்னம்மாள் கோயில் வீதி,*
*04 ஆம் கட்டை, மானிப்பாய்.* (99450)

தகவல் :
சி. மாட்டீன் பத்திநாதர்
(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டும் இந்தியா

## ஈழத்தமிழர் ஆகக்குறைந்தது சுயநிர்ணய உரிமையுடனான அதிகாரத்தைப் பெறுவதைக்கூட அது விரும்பவில்லை

இந்தியா விடுதலை பெற்ற ஆண்டிலிருந்து அதன் அணுகுமுறை என்பது ஒன்றாகவே தான் இருக்கின்றது. குறிப்பாக தென்னாசியப் பகுதியில் தானே தான் பெரியண்ணன் என்ற கர்வத்துடன் பல நடவடிக்கைகளை எடுத்தது. சில சம்பவங்கள் நன்மையில் முடிந்தாலும் சில சம்பவங்கள் தீயனவாக அமைந்தன.

பங்களாதேஷ் என்ற நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்க உதவிய இந்தியா வங்காளிகளுக்கு நன்மையைப் பெற்றுத்தந்தது. இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்பி நேரடியாக ஈழத் தமிழர் மீது ஒரு போரை நடத்தி பல ஆயிரம் மக்களைக் கொன்று குவித்தது. செய்த தவறுக்கு இன்றும் மன்னிப்புக் கோராமல், தான் செய்தது சரிதான் என்ற நிலையில் அடுத்த கட்டத்துக்கான காய்நகர்த்தலை மேற்கொண்டு வருகின்றது.

இலங்கையின் உள்நாட்டு விடயத்தில் இந்தியா பல காலமாகப் பல தரப்பட்ட கருத்தை முன் வைக்கின்றது. குறிப்பாக 1990 ஆம் ஆண்டுகளுக்கு முன்னரான காலப்பகுதியில் புலிகள் மற்றும் பல ஈழத் தமிழ் இளைஞர்களுக்கு இந்தியா ஆயுதப் பயிற்சி அளித்தது மட்டுமில்லாமல் ஆயுதங்களையும் கொடுத்து உதவியது. இந்தக் காலப்பகுதி பனிக்காலப் பகுதியென்று வர்ணிக்கப்பட்டது.

இந்தியா ரஷ்யாவுடன் நெருங்கிய உறவைப் பேணி அமெரிக்காவுடன் பகைமையைக் கொண்டு இருந்தது. ஆனால் 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் இந்தியா அமெரிக்காவுடன் தோழமை கொள்ளத் தொடங்கியது. திறந்த பொருளாதாரக் கொள்கையை இந்தியா கையாளத் தொடங்கி விட்ட காலப்பகுதிதான் இந்த 1990 ஆம் ஆண்டு மற்றும் அதற்குப் பின்னரான காலப்பகுதி. ஆக, தனது சுய இலாபத்திற்காக தனது அயல் நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிட்டு அந்த நாடுகளின் இறையாண்மையுடன் விளையாடிய இந்தியா, கடந்த சில வருடங்களாக தான் ஏதோ மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடாதது போன்ற ஒரு மாயையை உருவாக்க எத்தனிக்கின்றது.

குறிப்பாக ஈழத் தமிழர் விடயத்தில் 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தியா திடீர் 'பல்டி' அடித்தது. குறிப்பாக இலங்கை என்ற ஒரு சுதந்திர இறைமை கொண்ட ஒரு நாட்டைத் துண்டாட இந்தியா ஒருபோதும் ஆதரவளிக்காது என்று கூறிவருகின்றது.

வேடிக்கை என்னவென்றால், தான் ஒருபோதும் மற்ற நாடுகளில் நடக்கும் பிரச்சினைகளில் தலையிடமாட்டேன் என்று அறிவித்துவிட்டு அந்த நாடுகளில் நடக்கும் உள்விவகாரங்களில் நேரடியாகவே தலையிட்டு ஏன் தடை செய்யப்பட்ட பல ஆயுதங்களை இலங்கைக்கு நன்கொடையாகக் கொடுத்து தமது மானத்தை காக்கப் போராடிய ஓர் இனத்தின் மீது போரைத் திணித்து அவர்களை அழிக்க உதவியது இந்தியா. இன்று வந்த ஞானோதயம் ஏன் 1990 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் வரவில்லை என்பது தான் தமிழ் மக்களிடம் எழும் கேள்வி.

அன்று இந்தியா தமிழ்ப் போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சியோ அல்லது ஆயுதங்களோ கொடுத்திருக்காவிட்டால் தமிழ்ப் போராளிகள் பல பரிமாண இராணுவ வளர்ச்சியை எட்டியிருக்கமாட்டார்கள்.

குழந்தையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவது என்ற பழமொழிக்கேற்ப இந்தியாவின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

தனக்கு விசுவாசமான தலைமைப் பதவிக்கு வந்தால் பங்களாதேஷ் நாட்டுக்கெதிரான சதிவேலையை இந்தியா செய்யாது. எதிரான தலைமை வந்துவிட்டால் பிரமபுத்திர ஆற்றை திசை திருப்ப ஏற்கனவே வெள்ளத்தில் மிதக்கும் பங்களாதேஷ் நோக்கி அணையைத் திறந்துவிட்டு பல ஆயிரம் வங்காளிகளைக் காவுகொள்ளத் துணைபோகின்றது. இது ஒன்றும் இன்று நேற்று நடக்கும் சம்பவங்கள் அல்ல. பல ஆண்டுகளாக இந்தியா செய்யும் நாசகார வேலை. அந்த ஆற்றுத் தண்ணியை எப்பொழுதுமே பங்களாதேஷ் பக்கம் திறந்துவிட்டால், குறிப்பாக இந்தத் தண்ணீர் தேவையில்லாமல் வங்காள விரிகுடாக் கடலுக் குள் விடப்படுகின்றது. குறிப்பாக கோடை காலத்தில் இந்த தண்ணீர் பங்களாதேஷை சென்றடைந்தால் அந்த நாடு செல்வச்செழிப்பான நாடாக வளர்ந்துவிடும் என்ற காரணத்தினாலோ என்னவோ இந்தியாவின் இந்த வக்கிர போக்கு இருக்கின்றது.

அதைப் போலவே அத்தனை அருகிலுள்ள நாடுகளுக்கு எதிராகவும் இந்தியா இப்படியான செயற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கின்றது.

எந்தவொரு கட்சியும் பேச்சுவார்த்தை மேசை செல்ல முன்னர் பலமுடன் சென்றால் அவர்களின் கோரிக்கைகளில் சிலவற்றையாவது நடைமுறைக்கு கொண்டுவரமுடியும் என்பது தான் பேச்சுவார்த்தையின் அடிநாதம். இப்படியாகச் சாணக்கியம் இருக்க, இலங்கையிலோ எதிர்மாறான நிலை இன்று உருவாகியிருக்கின்றது. ஈழத் தமிழரை அழித்து மற்றும் பல லட்சம் மக்களை இன்றும் அகதி முகாம் களுக்குள்ளும் மற்றும் சித்திரவதை முகாம்களுக்குள்ளும் வைத்துக் கொண்டு பேச்சுவார்த்தை மூலமாகச் சமாதானத்தையும் மற்றும் தமிழர் பக்கம் உள்ள நியாயமான அரசியல் கோரிக்கைகளை இலங்கை. அரசினால் எப்படிச் செயலாற்ற முடியும்? இது தான் இன்று பலரிடம் எழும் கேள்வி.

இப்படியாக இலங்கையின் பிரச்சினை இருக்கும் பொழுது இந்தியாவோ தனது அரசியல் சாணக்கியத்தைக் காட்ட முனைகின்றது. தமிழரை ஏதிலிகளாக்கிவிட்டு அவர்களின் சொத்துக்களைச் சூறையாடிக்கொண்டு அவர்களின் பூர்வீகத் தாயகத்தில் வேண்டுமென்றே சிங்கள மயமாக்குகின்ற வேலைகளைச் செய்துகொண்டு ஒரு கண்துடைப்பு நாடகத்தை இந்தியாவின் அனுசரணையுடன் நடத்திக்கொண்டிருக்கின்றது இலங்கை. பாவம் தமிழர் தரப்பு. அரசியல் கட்சிகளும் தலையாட்டும் பொம்மைகளாக இருந்து கொண்டேயிருக்கின்றார்கள்.

இந்தியாவின் அழைப்பை ஏற்று மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் சென்ற குழுவில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரொமேஷ் ஜயசிங்க, மின்சக்தி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட சிலர் இடம்பெற்று இருக்கின்றார்கள். இவர்கள் ஜூன் 8 ஆம் திகதி புது டெல்லி சென்று நான்கு நாள்கள் தங்கி இந்தியாவின் மூத்த தலைவர்களையும் மற்றும் தமிழ் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்தார்கள்.

இந்த விஜயத்தின் போது, சக்திவலு, போக்குவரத்து, சட்டரீதியான ஆலோசனைகள், கலாசாரத்துறை, சிறு கைத்தொழில் உட்பட ஏழு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. மேலும் இந்த விஜயத்தின் போது இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் இணைந்து கூட்டுப் பிரகடனம் ஒன்றையும் வெளியிட்டன.

போரினால் இடம் பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் இந்தியா 50,000 வீடுகளைக் கட்ட நிதியுதவி செய்ய ஒப்புக் கொண்டுள்ளது. இந்தத் திட்டம் வடகிழக்குப் பகுதியில் போரினால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த மக்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்படும். இந்தத் திட்டம் இந்தியா மற்றும் இலங்கையால் கூட்டாக நிறைவேற்றப்படும். இந்தத் திட்டத்துக்காக இந்தியா உடனடியாக 1000 கோடி ரூபாவை வழங்குவதாக இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளார்.

மேலும், மன்னார் மாவட்டத்திலுள்ள புனித திருக்கேதீஸ்வரம் ஆலயப் புனரமைப்புப் பணிகளுக்கு இந்தியா உதவும். இராமேஸ்வரம் - தலைமன்னார் மற்றும் கொழும்பு தூத்துக்குடிக்கு இடையேயான படகுச் சேவை தொடங்குவது, மடு - தலைமன்னார் ரயில்வே பாதையை இந்திய உதவியுடன் அமைக்கவும் உடன்பட்டுள்ளனர்.

இந்தப் பணி இந்திய நிறுவனமான 'இர்கான்' அமைப்பால் முன்னெடுக்கப்படும். அதே போன்று பலாலி, காங்கேசன்துறை ரயில் பாதை புனரமைப்பு இலங்கை ரயில்வே துறையால் அமைக்கப்படும் எனவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டம் சம்பூர் பகுதியில் 500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் அனல் மின்நிலைய நிர்மாணப் பணிகளுக்காக 200 மில்லியன் டொலர்கள் கடனுதவியை இந்தியா வழங்கும் என இந்தியத் தரப்பினரால் உறுதியளிக்கப்பட்டது. இந்த அனல் மின்நிலையத்தை இந்தியாவின் தேசிய அனல்மின் நிறுவனமும் இலங்கை மின்சார சபையும் இணைந்து கூட்டாக அமைக்கும்.

அத்துடன் இலங்கையின் யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டையில் இந்தியாவின் துணைத் தூதரகங்களை அமைக்கவும் உடன்பாடு காணப்பட்டுள்ளது.

இப்படியான உடன்படிக்கைகளுக்கு ஊடாக இந்தியா சில அழுத்தங்களைத். தமிழர் மற்றும் சிங்களத் தலைமைகள் மீது கொடுத்துக்கொண்டிருப்பதாக அறியக்கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக இந்தியா சிபாரிசு செய்த 13 ஆவது அரசியல் சீரமைப்பு ஊடாக வடக்கு - கிழக்கை ஒன்றாக்கி இந்தியாவில் இருக்கும் மாநில அதிகாரங்களை வழங்க முயற்சிக்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினைகளுக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு இசைவாக, அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுத் தீர்வு ஒன்று வகுக்கப்பட வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார். இதற்குப் பதிலளிக்கையில், சிறுபான்மை இன மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் தீர்வு ஒன்றைக் காண்பதற் காக அவர்களின் பிரதிநிதிகளூடாகத் தாம் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளதாகவும், 13-ஆவது திருத்தத்தை உள்ளடக்கிய தீர்வைக் காண்பதே தமது இலக்கு என்றும் மன்மோகன் சிங்கிடம் மஹிந்த வாக்குறுதியளித்தார்.

இப்படியாக சம்பந்தபட்டவர்களுடன் கலந்தாலோசிக்காமல் தங்களுக்குள் முடிவுகளை எடுத்துப் பாதிக்கப்பட்டவர்கள் மீது அவர்கள் விரும்பாத ஒரு தீர்வைத் திணிக்க இந்தியா முனைகின்றது. இப்படியான வாக்குறுதிகள் ஒன்றும் இலங்கைக்குப் புதியனவல்ல. இந்தியாவிடம் இருந்து பெற வேண்டிய அனைத்துச் சலுகைகளையும் பெற்றுவிட்டு கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிடுவதுதான் சிங்களத் தலைமையின் நோக்கம்.

தமிழர் தரப்பு தங்களைத் தானே ஆளும் சம உரிமையை குறிப்பாக திம்புவில் தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட தீர்வைச் செயலாற்றக் கேட்கையில் சிங்களத் தரப்போ தமிழருக்கு என்ற ஒரு இடமே இலங்கையில் இல்லை என்கின்ற நிலையில் இந்தியா இந்த இரண்டுக்கும் இடையில் ஒரு தீர்வை முன்வைக்க முயற்சிக்கின்றது. இதற்கு வெள்ளோட்டம் விடும்போல் மஹிந்த ராஜபக்ஷ புதுடில்லியை குளிர்மைப் படுத்த - தான் ஒரு சிங்கள மிதவாதி இல்லையென்ற மாயையைக் காட்ட தமிழர் தரப்பு அரசியல் கட்சிகளைப் புதுடில்லி செல்லும் ஒரு தினங்க ளுக்கு முன்னர் திடீர் என்று சந்தித்து இந்தியாவை சாந்தப்படுத்த முனைந்து அதிலும் வெற்றிகொண்டுள்ளார். அதற்கமைவாகவே புதுடில்லிக்கும் வாக்குறுதிகளையும் கொடுத்திருக்கின்றார்.

### தமிழர் தரப்பைச் சந்தித்ததன் பின்னணி என்ன?

இந்தியாவில் எழும்பியிருக்கும் இலங்கைக்கு எதிரான வலுவை அடக்கத் தேவைப்பட்டது தான் ஈழத் தமிழர் தரப்பை சந்திக்க மஹிந்த ராஜபக்ஷ ஒப்புதல் அளித்தது. குறிப்பாக தமிழ்நாட்டின் அரசியல்வாதிகளினால் முன்வைக்கபட்டிருக்கும் கோரிக்கைகளின் பின்னர் புதுடில்லி கொழும்பைக் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே இந்தச் சந்திப்பு நடந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் அலரி மாளிகையில் ஒன்றரை மணி நேரமாக நடைபெற்ற சந்திப்பின்போது அரசியல் தீர்வு, மீள்குடியேற்றம், அத்துமீறிய குடியேற்றம், அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கல், அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்தல், அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் போன்ற விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

**அனலை நிதிஸ் ச.குமரன்**

(26 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 60 நாட்களில் ஆங்கிலத்தை கற்றுக் கொள்ளுங்கள்

இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி
E.L.Iயின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.

**BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH**

அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத.வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது. (வயது கட்டுப்பாடு தேவையில்லை)

60 நாட்கள் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட DIPLOMA சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.

இலவச T.Shirt ஒன்றும் Tigo Sim English Book என்பன இலவசம்

இலவச Phone Sim

பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHIRT ஒன்று Phone Sim Card மற்றும் 30 Easy way English புத்தகம் ஒன்று இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு பெயர்.முகவரியை 0777-220002 க்கு SmS செய்யுங்கள்

இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியான 2 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

**The ENGLISH LANGUAGE INSTITUTE**
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்
01★12★1949



ஆண்டவனின் அடியில்
14★05★2010

### அமரர் இராமலிங்கம் சிவபாக்கியநாதன்
(ஓய்வுபெற்ற காசாளர், இலங்கைவங்கி மேற்தரகிளை, யாழ்ப்பாணம்)

அன்போடு பண்பு பாசமெல்லாம்
அகத்தில் மிகுவே தான் காட்டி
இன்புறு சொல்லால் வழிப்படுத்தி
இனிமை காணச் செய்த உத்தமரே

எந்நாளும் எங்களை ஆசீர்வதியுங்கள்
எங்கள் நெஞ்சகலா அப்பாவே!
சிந்தை கலக்கமுற நாங்கள்
சீருடன் உம்மையே அஞ்சலிக்கின்றோம்

14.05.2010 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் இறுதிச்சடங்கிலும் இறுதி ஊர்வலத்திலும் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் தொலைநகல், இலத்திரனியல் தபால் மூலம் ஆறுதல் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் இன்றையதினம் (13.06.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றும் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.


பண்ணாகம், சுழிபுரம். [99440] குடும்பத்தினர்.


# Sale

**Sale** Un believable Offer

10.06.2010 முதல் 30.06.2010 வரை

Sealed Type Element



**Imported by: Abbe (PVT) LTD, Colombo.**




| | | | |
|---|---|---|---|
| Samsonic Rice Cooker 2.8 l | + | Samsonic kettle 1.8 l | = 3,990/= |
| Samsonic Rice Cooker 2.2 l | + | Samsonic kettle 1.8 l | = 3,890/= |
| Samsonic Rice Cooker 1.8 l | + | Samsonic kettle 1.8 l | = 3,790/= |

யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ள..

**Jaffna Electrical**
6, Stanley Road, Jaffna.
T.p: 021 222 2353
021 222 4302

**Jaffna Electrical**
(Show room)
141,Power House Road, Jaffna.
T.P: 021 222 5766, 021 222 8378

**Jaffna Electrical**
(Show room) 4, new market,
Chavakachcheri.
T.P: 021 300 8702

**Media Electro Mart**
1-I, 1-H, Stanley Road,
Jaffna.
T.P: 021 222 4386



## காணி தேவை

யாழ் நகரில் அல்லது அண்மித்த கரையோரப் பகுதியில் ஹோட்டல் நிர்மாணத்திற்கான காணி தேவை. மின்சாரம் மற்றும் குடிதண்ணீர் வசதிகள் இருத்தல் வேண்டும். காணியின் விஸ்தீரணம், அமைந்துள்ள இடம் மற்றும் உத்தேசவிலை என்பவற்றுடன் காணியின் படப்பிரதி ஒன்றையும் உடனடியாக எமக்கு அனுப்பிவைக்கவும். கடித உறையின் முற்பக்கத்தின் இடதுபக்க மேல் மூலையில் "LAND FOR HOTEL PROJECT" என எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு உடன் அனுப்பி வைக்கவும்.

The Advertiser
C/o Esjay Corporate Services (Pvt) Ltd.
Level - 4, No 2, Castle Lane,
Colombo - 4.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க
நியூட்டன் /குமார்
தொ.பேசி : 5444420/21
ETN. 517 or 507

## AIR INDIA EXPRESS
குறைந்த கட்டணத்தில்!

| | செல்ல மட்டும் | சென்று திரும்ப |
|---|---|---|
| சென்னை | Rs. 6,340 /- | Rs. 12,538/- |
| திருச்சி | Rs. 6,940/- | Rs. 14,055/- |

• 37Kg பொதிகள் அனுமதிக்கப்படும்



FLEX Graphic

15 அல்லது அதற்கு மேல் குழுவினராக செல்பவர்களுக்கு விசேட விலையில்.

AIR-INDIA express

www.airindiaexpress.in

2010ஜூன் 17ம் திகதி திறக்கப்படவுள்ளது
The World of Hayleys Showroom

இல.47 14/1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021 2221310



### மணமகள் தேவை

யாழ், இந்து கொழும்பில் அரச தொழில் புரியும் மணமகனுக்கு 1970ம் ஆண்டு அல்லது அதற்கு பின் பிறந்த மணமகள் தேவை. பொருளாதார வசதியற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு
S. Ravi
521/3 Galle Road
Wellawatte
Colombo 06.

### சேவை

லண்டனில் வேலையுடன் கூடிய கற்கைநெறி Aug/Sep Intake துரிதகதியில் விசா பெறுவதற்கான ஆலோசனை, ஆவணங்கள் தயார் செய்தல், மறுக்கப்பட்ட விசாவுக்கான Re Apply, Financial Sponsorship என்பன செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு
011-3042949
077-9218444


## அறுவடை விழா

கிளிநொச்சி, ஜூன் 13

பெரிய பரந்தனில் விதானையார் கமத்தில் அறுவடை விழாவை நாளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் அறுவடை விழாவில் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூ. கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(க)


## கலைமகள் அழகு நிலா
### பயிற்சி நிலையம்

ஏழு நாள்கள் பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சியின் நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். இப் பயிற்சியின் மூலம் ஒரு அழகு நிலையம் நடத்தும் திறமையைப் பெற்றுக்கொள்ளலாம். இப்பயிற்சி கற்றுக்கொள்வது இலகுவானதும் அதிக வருமானம் தரக் கூடிய தொழிலாகும். பெண்களுக்கு மிக அவசியமானது. வயதெல்லை கிடையாது. கீழ்வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன்முறையாகும்.


**பயிற்சிகள்**

★ Facial (ஏழு வகை)
★ Threading
★ Pimple Treatment
★ Waxing
★ Hair Stretening (2 வகை)
★ Hair Perming (2 வகை)
★ Hot Oil massage
★ Hair Cutting
★ Hair dye
★ Hair Colouring
★ Pedeicure manicure
★ கறுப்புக்காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்.
★ Bleaching
★ Bridal make up (5 வகை)

பயிற்சிக் கட்டணம்: 4000/=, பயிற்சி ஆரம்பம்: 10.06.2010,
பயிற்சி நேரம்: 9 மணி-பி.ப. 4 மணிவரை.

தொடர்புகள்: கலைமகள் அழகு நிலா,
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0773719071, 0214908151


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் விநாசித்தம்பி கனகலிங்கம்

தோற்றம் 14✱05✱1934 மறைவு 14✱05✱2010

திங்கள் முகமின்று தரணியில் மறைந்தது!
மங்கள விளக்கின்று மண்ணில் சரிந்தது!
பொங்கிடும் அன்புடன் பண்பின் சிறப்புடன்
எங்களுடன் நின்ற உள்ளம் எம்மைவிட்டுச் சென்றது!

அன்போடு வந்தவரே! எம்மை ஆதரவாய் அரவணைத்தவரே!
பண்போடு நின்றவரே! எம்மை பரிவோடு காத்தவரே!
சொல்லாமல் போனீரே! உம் சுவட்டை நாம் தேடுகின்றோம் - நீர்
இல்லாமல் வாடுகின்றோம்... நெஞ்சு வேகி சாகின்றோம்...

காலந்தான் உமக்கிங்கு கணக்கிட்டு வைத்தானே!
வேதனைதான் எமக்கிங்கு வேரோடி நின்றனவே!
சோதனையில் உன்னுயிர் சேதமாய் மறைந்ததுவே!
எண்ணி நாம் கதறுகின்றோம் கண்ணீர் பெருக!

இணுவில் கிழக்கு,
இணுவில். (99405) குடும்பத்தினர்.

## நெஞ்சை நெருடி நிற்கும் முதலாம் ஆண்டு நினைவில்

அன்னை மடியில்
19 ✱ 02 ✱ 1994



ஆண்டவன் மடியில்
25 ✱ 05 ✱ 2009

### அமரர் குகதாசன் சசிதரன்
(ஹாட்லிக் கல்லூரி தரம் 10 மாணவன்)

ஆசை மகனே எங்கள் ஆருயிரின் இன்னுயிரே!
பாசத்தோடு பதினாறு ஆண்டுகள் பற்றுடனே வாழ்ந்தாய்!
தேசம் விட்டுச் சென்றாயோ! தென்திசை நகர்ந்தாயோ!
மோசம் போனமனம் அமைதி கொள்ளுதில்லையே மகனே!

காணும் பொருளெல்லாம் உன்னுருவம் தோன்றுதையா!
பார்க்கும் சோலையெல்லாம் தோற்றம் தருகின்றாயே!
கேட்கும் ஒலியெல்லாம் உன்னழைப்பாகக் கேட்குதையா!
ஆசையோடு தேடிவந்தால் ஆவிபோல் மறைகின்றாயே!

பாசத்தால் பாவியர் நாம் பரதவிக்கின்றோம்
பரமகதி நீயடைய பற்றுடனே பிரார்த்திக்கின்றோம்.

மாவடி,
அல்வாய் வடக்கு,அல்வாய். குடும்பத்தினர். (99309)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பின்றித் திண்டாடும் யாழ்ப்பாணத்து இளம் சமூகம்

கடந்த ஒரு வருட காலப் போர் ஓய்வுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையிலும் ஒரு அமைதி நிலை நிலவி வருகின்றது. இந்நிலையில் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஏனைய நாடுகளைப் போல வளர்ச்சியடைய வேண்டும் என்ற இலக்குடன் இலங்கை இப்போது நகர்ந்து கொண்டிருக்கிறது. அதற்கேற்றால் போல் அண்டை நாடுகளுடன் அன்னியோன்யமான உறவுகளை ஏற்படுத்தித் தன்னை மேலும் பலப்படுத்திக் கொள்வதற்குப் படாத பாடுபடுகின்றது இலங்கைஅரசு. அதற்காக வர்த்தக, பொருளாதார, அபிவிருத்தி ஒப்பந்தங்கள் என ஏராளமான ஒப்பந்தங்களை அண்டை நாடுகளுடன் ஏற்படுத்தி அதன் மூலம் தான் ஒரு வீரபுருஷராகி விட வேண்டும் என்ற நோக்குடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் இப்போது செயற்பட்டு வருகின்றார்.

உள்நாட்டில் இனப்பிரச்சினை உட்பட முக்கிய பல பிரச்சினைகளுக்கு இதுவரை எந்தத் தீர்வுமே எட்டப்படாத நிலையில் இலங்கை அரசின் இந்த வெளிவிவகார இராஜதந்திரம் எந்தளவுக்குப் பலிக்கும் என்பது கேள்விக்குறியானதொன்றே. இலங்கைத் தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கு உருப்படியான - காத்திரமான - அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றைத் தயாரித்து முன்வைப்பதற்கு திறனற்ற - அக்கறையற்ற - நிலையில் இருக்கும் இலங்கை அரசுக்கு முண்டு கொடுப்பதற்கு அண்டை நாடுகள் சில முன்வந்துள்ள போதும் பெரும்பாலான உலக நாடுகளிடையே தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற பொதுவான கருத்தொருமைப்பாடு நிலவி வருகின்றமை இலங்கை அரசுக்குப் பெரும் சிக்கலாகவே உள்ளது. இவற்றைவிட உள்நாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம், வேலையில்லாப் பிரச்சினை, பொருளாதார நெருக்கடி, பணவீக்கம் என்பவற்றாலும் இலங்கை அரசு பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அவற்றுக்கு உடனடியாகத் தீர்வை எட்டுவதற்கான திட்டம் எதுவும் அரசிடம் இல்லை. இவற்றில் வேலையில்லாப் பிரச்சினை அரசுக்குத் தலையிடியை உண்டு பண்ணும் மிக முக்கியமான பிரச்சினையாக உள்ளது. அதிலும் குறிப்பாக போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்களின் அடிப்படைப் பொருளாதாரமே அழிவடைந்துள்ள நிலையில் அதனைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் அரசு பாராமுகமாகவே இருந்து வருவதாகக் குற்றம் சாட்டப்படகின்றது.

இலங்கையில் சுமார் 22 ஆயிரத்துக்கு மேற்பட்ட பட்டதாரிகள் வேலையற்றவர்களாக உள்ளனர். அவர்களில் ஏறத்தாழ 3 ஆயிரத்து 500 பட்டதாரிகள் யாழ்ப்பாணத்தில் உள்ளனர். இவர்களுக்கான வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியாத வங்குரோத்து நிலையில் அரசு உள்ளது. தேர்தல் காலங்களில் வாக்கு வேட்டையில் ஈடுபடுவதற்காக வேலைப் வாய்ப்பை அரசியல் ஆயுதமாகப் பாவித்துக் கொள்ளும் வேட்பாளர்கள் பதவிக்கு வந்தபின்னர் அவற்றை அடியோடு மறந்து விடுகின்றார்கள். வேலை வாய்ப்பு என்பது அரசியல்வாதிகளின் வெறும் வாய்ச் சவடாலாகவே உள்ளது. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை பெற்றுத் தருவதாகக் கூறி அரசியல்வாதி ஒருவர் அவர்களைத் தேர்தல் பணிகளில் மும்முரமாக ஈடுபடுத்தி விட்டு அது முடிந்த பின்னர் அதே கதி தான் என அந்தரத்தில் விட்டுவிட்டதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். யாழ்ப்பாணத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் சங்கமும் அடிக்கடி கூட்டங்களைக் கூடி அமைச்சர்களைச் சந்தித்து மகஜர்களைக் கட்டுக்கட்டாகக் கையளித்தாலும் அவற்றினால் எந்த விதமான பயனும் கிடைக்கவில்லை என்பதே கண்கூடு.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் 30 வருடங்களுக்கு முன்னர் இளைஞகளுக்குப் பெருமளவில் வேலை வாய்ப்பை வழங்கிய கைத்தொழில் நிறுவனங்கள் யாவும் செயற்பாடற்ற நிலையில் - தடுக்கப்பட்ட நிலையில் - இன்னமும் முடங்கிப் போய் கிடக்கிறன. இவற்றில் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, அச்சுவேலி கைத்தொழில் பேட்டை, ஆனையிறவு உப்பளங்கள் என்பவை குறிப்பிடத்தக்கவை. இவற்றின் பணிகள் யாவும் பல வருடங்களுக்கு முன்னரே நிறுத்தப்பட்டிருந்ததுடன் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வேலைவாய்ப்புகளும் பறிபோயின. ஆயுதப்போராட்டம் நீண்ட வளர்ச்சி பெற்றதற்கு வேலையின்மையும் ஒரு காரணம் என்று சொல்லலாம்.

## கைத் தொழில் நிலையங்கள், தொழிற்சாலைகளை இயக்குவதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமல்லவா?

யாழ்ப்பாணத்தில் சுமூக நிலை ஏற்பட்டதை அடுத்து முக்கியமாக இந்திய, சீன நிறுவனங்களும் ஏனைய நாடுகளும் தமது முதலீடுகளைச் செய்து இலாபம் ஈட்டுவதற்கு முண்டியடித்துக் கொண்டு இங்கு வருகின்றன. ஆனாலும் இந்த முயற்சிகள் யாவும் அரசின் - உயர் அரச அதிகாரிகளின் செயற்பாடுகள் காரணமாக தென்னிலங்கை நோக்கி நகர்த்தப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

அண்மையில் அனைத்து மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களுக்கும் கொழும்பில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணம் தொடர்பாக சில கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அதனை நாம் இங்கு சுட்டிக்காட்டுகின்றோம்.

யாழ். மாவட்டத்தில் தற்போது இருக்கும் தனிநபர் வருமானம் 1400 டொலர்களாகும். இது 4000 டொலர்களாக உயர வேண்டும் என்பதே அங்கு சுட்டிக் காட்டப்பட்ட விடயம். இந்த இலக்கை அடைய குறுகிய காலப் பகுதிக்குள் யாழ். மக்கள் தமது உழைப்பை 2600 டொலர்களால் அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது. இந்த வளர்ச்சியை எட்டுவதற்கு யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் யாவை? என்ற கேள்வி எழுவது நியாயமானதே. இந்த அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு என்ன மாதிரியான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன - வகுக்கப்படவுள்ளன என நோக்குவோமானால் வீதிகளைச் செப்பனிடுதலும், கட்டடங்களைக் கட்டுவதும், அபிவிருத்தி சம்பந்தமான கூட்டங்களை நடத்துவதுமே பதில்களாகக் கிடைக்கின்றன.

இந்த லட்சணத்தில் தான் அரசு தனிநபர் வருமான அதிகரிப்புக் குறித்துப் பேசுகின்றது. வேலையற்றுத் திண்டாடி வரும் வடமாகாண குறிப்பாக குடாநாட்டு இளைஞர்களுக்கு எத்தகைய வேலைவாய்ப்பை அரசு வழங்கப்போகிறது - ஏற்படுத்திக் கொடுக்கப் போகிறது என்ற கேள்வி அனைவரின் மனங்களிலும் எழுகின்றது.

புதிய முதலீடுகளைத் தென்னிலங்கைக்கு வாரிவழங்கி - சுதந்திர வர்த்தக வலயங்களை உருவாக்கி சிங்கள இளைஞர்களுக்குத் தன்னால் முடிந்த அளவு மட்டும் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் அரசு தமிழ் இளைஞர்களுக்குத் தொடர்ந்து மாற்றான் தாய் மனப்பாங்கே காட்டி வருகின்றது.

யுத்தத்தின் ஓராண்டு நிறைவில் முல்லைத்தீவு, கிளிநொச்சி வாழ் மக்களை அவர்களின் சொந்த இடங்களிலேயே மீளக்குடியமர்த்தி விட்டோம் என சர்வதேசத்திற்கு பறைசாற்ற அந்த மக்களை அநாதரவாக - நிர்க்கதியாகக் குறித்த சில இடங்களில் மாத்திரம் பஸ்களில் கொண்டு சென்று இறக்கி விடுகிறது அரசு. அடிப்படைப் பொருளாதாரத்தை இழந்து தவிக்கும் அந்த மக்களுக்கு உரிய தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க இதுவரை இந்த அரசு முன்வரவில்லை.

இந்த நிலையில் அபிவிருத்தி தொடர்பாகவும், இளைஞர்களுக்கான நல்ல எதிர்காலம் தொடர்பாகவும் பேசிப் பேசியே தமது காரியத்தைச் சாதிக்கும் அரசியல்வாதிகளிடம் அந்த மக்கள் சிக்கிச் சீரழிகின்றனர்.

இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பான தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வு இன்னமும் கட்டியெழுப்பப்படாமல் சம்பள அதிகரிப்பும் இன்றி அப்படியே உள்ளது. அதைவிட கீழான நிலையிலேயே இப்போது வட மாகாணத்தில் வாழும் மக்கள் உள்ளனர். இவர்களின் அடிப்படை பொருளாதாரமான விவசாயமும் மீன்பிடியும் இன்னமும் வளர்ச்சி பெறாமல் உள்ளன.

இந்த மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு இருக்கக் கூடிய ஒரே வழி இப்பிரதேசங்களில் சுதந்திர வர்த்தக வலயங்களை உருவாக்குவதும் ஏற்கனவே அமைக்கப்பட்டு இயங்காமல் உள்ள கைத்தொழில் பேட்டைகளை இயங்கச் செய்வதும், ஆனையிறவில் தடுக்கப்பட்டுள்ள உப்பளங்களில் மீண்டும் உப்பு உற்பத்தியை மேற்கொள்வதும், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற் சாலை என்பவற்றை மீள இயக்குவதும் புதிய முதலீட்டாளர்களுக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதுமே. இவற்றின் மூலம் இளைஞர்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதுடன் வேலை வாய்ப்புப் பிரச்சினையையும் குறைத்துக் கொள்ள - இல்லாது செய்ய முடியும். இதற்கான நடவடிக் கைகளில் ஈடுபட அரசும், அரசியல் வாதிகளும், அரச உயர்அதிகாரிகளும் முன் வருவார்களா?




-அதிரன்

*******

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெல்டிங் உபகரணம், இலக்ரேட்ஸ் மற்றும் உறுப்புக்கள்

- கொபலாக் ஹாட் பேசிங் இலக்ரேட்ஸ் மற்றும் வேறு விசேட இலக்ரேட்.
- சிக்வெல்ட் காஸ் வெல்டிங், வெட்டும் உபகரணம் மற்றும் உறுப்புக்கள்.
- சிக்வெல்ட் டிக், மிக், கை இயக்க உலோக 'ஆக்' வெல்டிங் இயந்திரங்கள்.
- இயந்திர இயக்கத்தினூடான வெல்டிங் இயந்திரங்கள்.
- பிளாஸ்மா வெட்டும் உபகரணம் மற்றும் உறுப்புக்கள்.
- பின்சல் வெல்டிங் டோர்ச் மற்றும் உறுப்புக்கள்.
- மெல் இரும்பு, அலுமினியம் மற்றும் விசேட மிக்வயர்கள்.



துரித இணைப்பு: 0773 428131 0772 753146

உத்தரவாதம் மற்றும் விற்பனைக்குப் பிந்திய சேவையுடன் கூடிய உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு

United Tractors CAT

யுனைட்டட் ட்ரக்டர் இக்விப்மண்ட் (தனியார்) லிமிட்டட்
683, நீர்கொழும்பு வீதி, மாபோளை, வத்தளை.
மின் அஞ்சல் : welding@utequip.com தொலைநகல்: 0112931550



## வாசித்து விட்டீர்களா!

# இருக்கிறம்

மாதமிருமுறை வெளிவருகிறது!

இலங்கையிலிருந்து வெளிவரும் ஜனரஞ்சக சஞ்சிகை



இப்பொழுதே வாங்கிப் படியுங்கள்!

மேலதிக தகவல்களுக்கு
விநியோகப்பிரிவு : 011 - 2506272
irukiram@gmail.com

இருக்கிறம்
03, டொரிங்டன் அவனியூ,
கொழும்பு 7






## கறுப்புச்சந்தையானது இலங்கை கணினித் தொழிற்துறையினைப் பாதிக்கின்றது

| முகவர்களுக்கான முக்கிய குறிப்புக்கள்: | வியாபார நிறுவனங்களுக்கான முக்கிய குறிப்புக்கள்: |
|---|---|
| 1. கறுப்புச் சந்தை மென்பொருளானது சட்டத்திற்கு முரணானது. அனுமதி உத்தரவாதமுடைய மென்பொருளினை நீங்கள் விற்பனை செய்வதனை உறுதிசெய்துகொள்ளுங்கள். | 1. குறுக்குவழிகளை நாடவேண்டாம். அசல் உத்தரவாதமுடைய மென்பொருளை உபயோகிக்கவும் |
| 2. கறுப்புச் சந்தை மென்பொருளானது உயரிய அளவிலே போலிகளுடன் கலந்துள்ளது. ஆபத்துக்களைக் கையிலெடுக்கவேண்டாம். தவிர்த்துக்கொள்ளுங்கள். | 2. போலி மென்பொருளைத் தடுப்பதற்கு ஒரு வேலைத்திட்டம் உண்டென்பதனை உறுதிசெய்து கொள்ளுங்கள் |
| 3. அமைதியான மனதிற்காக எப்பொழுதும் அங்கீகரிக்கப்பட்ட விநியோகத்தரிடமிருந்து கொள்வனவு செய்யுங்கள் | 3. நீங்கள் பயனடைவதை உறுதிசெய்து கொள்ளுங்கள். அசல் உத்தரவாதமுடைய மென்பொருளைக் கோருங்கள் |

### அசல் உத்தரவாதமுடைய மென்பொருளானது இலங்கை பொருளாதாரத்திற்கு நன்மை பயக்கின்றது

ஆபத்தினைக் கையிலெடுப்பது எந்த நிறுவனத்திற்கோ அல்லது தனிநபருக்கோ பயனற்றது. சொத்து புலமைச் சட்டம் மதிக்கப்படவேண்டியதுடன், பதிப்புரிமை சட்டங்களுக்கு அமைவாக ஒரு பொறுப்புள்ள வர்த்தகக்குடிமக்களாக செயற்படுமாறு அனைத்து வர்த்தக நிறுவனங்களையும் கோருகின்றோம்.

வாடிக்கையாளர்களுக்கான ஒரு பொன்மொழி:
எப்பொழுதும் அசல் மென்பொருளினையே கேட்டு வாங்குங்கள்

ESys Technologies லங்கா தனியார் நிறுவனம்
410/20, காலி வீதி கொழும்பு 03.


## மத்தியஸ்தர் சபை இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கி வந்த தென்மராட்சி மத்தியஸ்தர் சபை செயற்பாடுகள் கடந்த 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இயங்குவதாக மத்தியஸ்தர் சபை தவிசாளர் ப.நடராசா அறிவித்துள்ளார்.

மத்தியஸ்தர் சபை இயங்கிய கட்டடத்தில் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகம் இயங்குவதால் சபை செயற்பாடுகள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (201-207)

## பேச்சுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர (2011) மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி நடத்தப்படவுள்ளன.

போட்டிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணி தொடக்கம் வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (201-207)


# Raigam

### பிராந்திய விநியோகஸ்தர்கள் தேவை

வடகிழக்கு மாகாணத்தில், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கிளிநொச்சி, கல்முனை, வவுனியா, பொத்துவில் மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு தேவைப்படுகிறது

எதிர்பார்க்கப்படும் தகமைகள்
- களஞ்சியசாலை வசதி குறித்த மாவட்டத்தில்
- வங்கிஉத்தரவாதம்
- விநியோக வாகனம்

### விற்பனை பிரதிநிதிகள் தேவை

வடக்கு கிழக்கு மாகாணத்தில் எமது தயாரிப்புக்களை விநியோகிப்பதற்கு அனுபவம் உள்ள இளைஞர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
கீழ்வரும் தகமையுடையோர் விண்ணப்பிக்கவும்
- G.C.E. சாதாரணதர சித்தி
- குறிப்பிட்ட மாவட்டத்தில் வதிவுடையவராக இருக்கவேண்டும்
- மும்மொழிகளும் பேசக்கூடியவர் விரும்பப்படுவர்
- பாடசாலைப் படிப்பு முடித்தவர்கள் பயிற்சி விற்பனை பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்படுவர்
- முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பப்படுவர்

மேற்குறித்த தகமையுடையோர் பின்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

*Apply within 07 days.*
Manager Human Resources
THE KINGDOM OF RAIGAM®
277, Koswatta, Kiriwattuduwa, Homagama.
Fax 011 2753342 info@raigam.lk.

Nips Aarya SOMCHAI Neeroga Angel RAIMITE CANGO Dazzling herbal world Kamil Ruchi



"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

## கோப்பாய் தனிப்பனை வீரபத்திர சுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு

வலி. கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றம் நடத்தும் சமயச் சொற்பொழிவும் - புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்
10.06.2010 முதல் 19.06.2010 வரை

மேற்படி ஆலய மஹோற்சவத்தையொட்டி தினமும் மாலை 6 மணிமுதல் 7 மணிவரை சைவப்புலவர் கந்த சத்தியதாசன் அவர்களால் ''சிவனருட்செல்வர்'' பொருளிற்பறிய தொடர் சொற்பொழிவு நடத்தப்படும்.

நிகழ்வின் இறுதியில் தினமும் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான பதில் அளிப்போருக்கு விழாமுடிவில் (20.06.2010) அன்று பரிசில்கள் வழங்கப்படும்.

அனைவரும் போட்டியில் பங்குபற்றலாம்.

★ புத்தகக் கண்காட்சி 10.06.2010 பகல் விழா முடிவில் திறந்துவைக்கப்பட்டது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றம்
கோப்பாய்.



United Tractors CAT

FIMER Welding Generators 400A Diesel with Perkins engine

Made in Italy    Available ex-stock



Hotline : 0773 428131 0772 753146

United Tractor & Equipment (Pvt) Ltd.
683, Negombo Rd, Mabola, Wattala


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| உதிப்பு | | உதிர்வு |
|---|---|---|
| 1927 |  | 2010 |
| ★ | | ★ |
| 04 | | 05 |
| ★ | | ★ |
| 15 | | 10 |

### செல்லையா அருணாசலம்
### (இளைப்பாறிய அஞ்சல் அதிபர்)

எமது அன்புத் தெய்வம் சிவபதமடைந்த செய்தி கேட்டு உடன்வந்து உதவிக்கரம் நீட்டிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் தொலைபேசி மூலமும் கடிதங்கள் மூலமும் நேரிலும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் எமது மனம்நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (13.06.2010) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இராமலிங்கம் வீதி,*
*கல்வயல், சாவகச்சேரி.*

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் கல்விநலன் கருதிய 'ரியூட்டறி' 'ரியூசன்' போதனை குடாநாட்டில் நிமிர்வது எப்போது....?

*பள்ளிக்கூடத்திலும் படிப்பு மாலை ரியூசனில் படிப்பு- இன்னும் பேர்சனல் கிளாசிலும் படிப்பு! படிப்பு! படிப்பு!"*

என்று ஒய்வு ஒழிச்சலின்றி புத்தகக் கூண்டுகளுக்குள்ளேயே புதையுண்டு போன குடாநாட்டின் இன்றைய மாணவர்கள் பலரும் அலுத்துக் கொள்கின்றனர். அறிவுசார் தேடல், எதிர்காலத்துக்கான அடித்தளம் என்ற



தளங்களைத் தாண்டி கௌரவத்துக்கான குறியீடாகவும் கல்வியையே யாழ்ப்பாணத்தவர்கள் கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பதன் பிரதிபலனாகவே எந்நேரமும் படிப்பிலேயே மூழ்கியிருக்குமாறு பெரும்பாலான பெற்றோர் தமது பிள்ளைகளைப் பிழிந்தெடுத்து வருகின்றனர். சிறுசுகளும் தம்மிடமுள்ள எல்லா ஆசைகளையும், விருப்புக்களையும், விளையாட்டுக்களையும் குறும்புத்தனங்களையும் இதன்காரணமாக இழந்துவிட வேண்டியிருக்கிறது. வாரநாள்களில் பாடசாலையில் படித்துக் களைத்த மாணவர்கள் சிறிதேனும் ஆறுதலாயிருந்து தமது மனங்களை மீளவும் கற்றலுக்குகந்ததாக மாற்றவேண்டுமென்ற உளவியல் நோக்கோடு சனி, ஞாயிறு தினங்களில் பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகள் நடைபெறுவதில்லை.

இத்தகைய விடுமுறைகளின் போது வெளிநாடுகளில் பூங்காக்களுக்கோ, கடற்கரைக்கோ மற்றும் மனதைக் கொள்ளும் இடங்களுக்கோ நண்பர்கள், குடும்பத்தினர் என்போருடன் சேர்ந்து சென்று சேர்ந்திருந்து மனதை புத்துணர்ச்சி பெறவைப்பர். ஆனால் நாமென்ன செய்கிறோம்? எங்களால் எவ்வளவு முடியுமோ அந்தளவு தூரம் அவர்களைச் சும்மாயிருக்கவே விடாமல் ' ரியூசன் ரியூசன்' என்று துரத்திக்கொண்டே இருக்கின்றோம்.

பாடசாலைக் கற்றலின்போது தீர்க்கப்படாத சந்தேகங்களையும் பாடசாலையில் கற்பதை மீளவும் ஒருதடவை இன்னொரு ஆசிரியரிடம் கற்பதனூடாகத் தெளிவினைப் பெறுவதற்காகவும் ''ரியூட்டரி''களை ''ரியூசன்''களை மாணவர்கள் ஆரம்ப காலங்களில் நாடினர். அதாவது பாடசாலைக் கற்றலுக்கு ஒரு முட்டுக் கொடுப்பாகவே ''ரியூட்டறி''க் கல்வி இருந்தது. இன்றோ நிலைமை தலைகீழ். பாடசாலையை விடவும் ரியூசனையே பிரதானப்படுத்துகின்ற போக்கே குடாநாட்டில் மேலெழுந்துவிட்டது.

இதனால் மாணவர்களின் பெறுபேற்றுக்குப் பாடசாலைகளை விடவும் தனியார் கல்வி நிறுவனங்களோ உரிமை கோரத் தொடங்கியுள்ளன. அதிலும் நியாயமிருப்பதாகவே பெற்றோர் ஒருவர் கூறுகின்றார். ''பாடசாலையில் கிடைப்பதை விடவும் ரியூசன்களில் ஆசிரியர்கள் அக்கறை எடுத்துப் படிப்பிக்கின்றனர். அதனால் பிள்ளைகளின் சிறப்பான 'ரிசல்ட்டுக்கும்' 'ரியூட்டறி'கள் தான் காரணம்'' என்று அவர் ஆணித்தரமாகச் சொல்கிறார்.

ஆனால் ' வெறுமனே பெறுபேற்றை இலக்காகக் கொண்டதாகவே ரியூசன் கல்வி முறை இருக்கின்றது. பாடசாலைகளைப்போல பரந்துபட்டதான அறிவினை ஊட்டவோ, மாணவர்களின் பிற திறமைகளை வளர்க்கவோ அவை துளியளவும் முயற்சிப்பதில்லை'' என்று ரியூசன்களைச் சாடுகிறார், பாடசாலை அதிபர் ஒருவர். இருவரது கூற்றிலும் நியாயங்கள் இருப்பதாகவே படுகின்றது. ஆனாலும் ரியூசன்களுக்குப் பிள்ளைகளை அனுப்புவதில் பெற்றோர் காட்டுகின்ற கரிசனையையும், பாடசாலையை விடவும் ரியூசன்கள்மீது மாணவர்கள் காட்டுகின்ற ஈர்ப்பையும் சில தனியார் கல்வி நிறுவனங்கள் தமது வியாபார நலனுக்காகப் பயன்படுத்தி வருகின்றன. ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான ''ரியூட்டரி''கள் சில முன்னுதாரணமான நல்ல செயற்பாடுகளிலும் ஈடுபடுவதையும் மறைக்க முடியாது.

சில ரியூசன்களில் நடந்த சில நிகழ்வுகளை இத்தருணத்தில் சொல்லாவிட்டால் என் தலையே வெடித்துவிடும். சிலவேளைகளில் இச்சம்பவங்களைப் படித்துவிட்டு 'அட இப்படியெல்லாம் நடக்கின்றனவா?' என்று உங்களுக்குத் தலைவெடிக்கவும் கூடும்.

### நிகழ்வு -1

இடம்- ஒரு பிரபல்யமான பாடசாலை. மனனம் செய்ததை ஒப்புவிக்கும் கிளிப்பிள்ளைபோல பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார் ஆசிரியர். மாணவர்களுக்குத் தான் நடத்தும் பாடம் விளங்குகின்றதா? இல்லையா? என்ற நினைப்புக்கூட இல்லாமல் ஒரே சீராகப் பயணிக்கிறது அவரது போதனை. மாணவர்கள் எவ்வளவு நேரந்தான் பாடம் விளங்குவதுபோன்று நடிப்பது? ஒரு கட்டத்தில் ''சேர்! பாடத்தில் ஒரு 'டவுட்'' என்று கூறினான் ஒரு மாணவன். அவ்வளவுதான் அந்த ஆசிரியருக்கு வந்ததே கோபம்! '' நான் படிப்பிக்கிறதில 'டவுட்' டோ ?'' எழும்படா!டவுட் கேக்கிற அந்த மூஞ்சியை பாப்பம்'' மாணவன் பேந்தப் பேந்தப் முழித்தபடி எழுகிறான். ஆசிரியர் தயாராக வைத்திருந்த தடி அந்த மாணவனின் முதுகிலே விளையாடத் தொடங்கியது.

இடம்:- தனியார் கல்வி நிலையம்

அதே ஆசிரியர். அதே பாடம். அதே மாணவர்கள். ஆனால் இப்போது முகத்தில் கடுப்பில்லை. மாணவர்களுக்கு விளங்கக் கூடிய வகையில் இடையிடையே நகைச்சுவையான விடயங்களையும் சேர்த்துச் சொல்லியபடி கற்பித்தலை நிகழ்த்தி முடிக்கிறார். போதாக்குறைக்கு நான் படிப்பிச்சதில ஏதாவது 'டவுட்' இருந்தாக் கேளுங்கோ!'' என்று வினாவவும் செய்கிறார்.

### நிகழ்வு -02

குட்டாநாட்டில் ஒரு பெரும்பாகத்தில் உள்ள தன் நிறுவனத்தில் கற்கும் மாணவர்களின் பெற்றோர்களை அழைத்து அவர்களிடம் அந்த ரியூசனின் புதிய அனுமதி முறை (?)குறித்த விளக்கங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார் நிர்வாகி.

'' இனிமேல் புதிசா சேருகிற பிள்ளைகள் முதல்ல 2000 ரூபா கட்டினாத்தான் சேரலாம். அந்தக் காசு அவை ஓ.எல் எடுத்த பிறகு திருப்பித் தருவம். ஆனா பிள்ளை ஒழுங்கா வராமல் விட்டு அவரை நிப்பாட்டினாலோ, இல்லாட்டி அவர் இஞ்சையும் படிச்சுக் கொண்டு வேறெந்த ரியூசனுக்காவது ஒரு பாடத்துக்குகூட போனதால நிப்பாட்டினாலே இந்த முற்பணக்காசு கிடைக்காது....'' என்று ஒரு வங்கி தனது புதிய திட்டத்தை அறிமுகப்படுத்துவது போன்ற தோரணையோடு கூறிக் கொண்டிருக்கிறார்.அதாவது அந்த ஊரில் தனிக்காட்டு ராஜாவாகவுள்ள இந்த ரியூசனில் பிள்ளைகள் சேர வேண்டுமென்றால் 2000 ரூபா கட்டவேண்டும். அதனைக் கட்ட வசதியற்றவர்கள் நாலைந்து கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ரியூசனுக்கே செல்லவேண்டும். அத்துடன் வருடத்துக்கு ஆகக் குறைந்தது 100 மாணவர்கள் புதிதாக இணைந்தால் 2 லட்சம் ரூபா கிடைக்கும். அதை அப்படியே கொண்டுபோய் வங்கியில் இட்டுவிடலாம். இப்படியே 10 வருடங்கள் புதிதாகச் சேரும் மாணவர்களின் பணத்தை வங்கியில் போடமுடியும். இப்போது 20 லட்சம் ரூபாய் அவர் பெயரில் வங்கியில் இருக்கும். இதன் பிறகுதான் ஆரம்பத்தில் காசு கட்டிய மாணவர் பிரிவு ஜீ.சி.ஈ .சா/த பரீட்சையை எடுத்துவிட்டு வெளியேறும். இதன்போது அந்த வருடம் புதிதாகச் சேருகின்ற 100 மாணவர்களின் முற்பணத்தை வாங்கி இவர்களிடம் கொடுத்து விடலாம். இப்படியே தொடர்ந்தும் காலத்தை ஓட்டிவிட முடியும். வங்கியிலோ வட்டியுடன் 10 வருடங்கள் புதிதாகச் சேர்ந்தவர்களிடம் வாங்கிய 20 லட்ச மும் வளர்ந்து கொண்டேயிருக்கும். எப்படியிருக்கிறது ஐடியா?

இது தவிர தரம் 1 இல் சேருகின்ற மாணவனை அவர் ஜி.சி.ஈ. சா/த பரீட்சை எடுப்பதற்கிடையில் நெருக்குதல் கொடுத்து அவனாகவே குறித்த ரியூசனிலிருந்து விலக வைப்பதன் மூலம் அந்த மாணவன் கட்டிய தொகையையும் அபேஸ் செய்து விடலாம்.

இப்படியெல்லாம் குறுக்குவழியில் மாணவர்களின் கல்வியைப் பகடைக்



காயாக்கி - பணம் சம்பாதிக்க எங்கேயிருந்துதான் யோசிக்கிறார்களோ தெரியவில்லை.

### நிகழ்வு-3

உயர்தரப் பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னமும் பாடத்திட்டத்தின் முக்கிய பகுதிகளை ரியூசன் ஆசிரியர் கற்பிக்காமல் இருந்தார். மாணவர்களும் அவர் அந்த முக்கியமான பகுதிகளை எப்போது கற்பிப்பார்? எனக் காத்திருந்தார்கள். ஆனாலும் அவர் ரியூசனுக்கே வராமல் விடத் தொடங்கினார்.மாதக்கணக்கில் ஆசிரியர் வராவிட்டாலும்கூட குறித்த பாடத்துக்குரிய கட்டணத்தை வசூலித்து விடுவார் நிர்வாகி. அவரிடம் ஆசிரியர் வராததைப் பற்றி மாணவர்கள் முறையிட்டனர்.

'' பிள்ளையள் ! சேர் கொஞ்சம் பிஸியான ஆள். எப்படியும் ஒருநாள் வந்து படிப்பிப்பார். நீங்கள்தான் பொறுமையாக இருக்க வேணும்'' என்று அவர் பதிலளித்தார். இப்படியே பாடம் நடத்தாத ஆசிரியருக்கு மூன்று மாதங்களுக்கு மேல் பணம் கட்டி விட்டனர் மாணவர்கள். ஆனாலும் கடைசி வரைக்கும் அந்த ஆசிரியர் வரவேயில்லை.

***

இதுபோன்ற இன்னும் நிறையச் சம்பவங்களை- உண்மைகளை இங்கு சொல்லிக்கொண்டே போகலாம். இதைவிட ரியூட்டரிகளுக்கு ரியூட்டரி வெவ்வேறான கட்டண அறவீடுகள் நிகழ்வதாகவும் சொல்லப்படுகின்றது. பாடசாலையில் நடைபெறும் இணைப்பாட விதானச் செயற்பாட்டு நிகழ்வுகளைப் புறக்கணித்துவிட்டு ரியூசன் கற்றலுக்கு வரவேண்டுமென்றும் சில ஆசிரியர்கள் உத்தரவிடுவதாகவும் கூறப்படுகின்றது.

இப்போது ஞாயிறு,போயா தினங்களில் ரியூசன்களை நடத்தக் கூடாது என்கிற தீர்மானம் முதலமைச்சர்கள் மாநாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. இது குறித்தும் வாதப்பிரதிவாதங்கள் உண்டு. மாணவர்கள் சனி, ஞாயிறு தினங்களிலேயே ரியூசனில் கற்பதற்கான வாய்ப்பு கிடைப்பதாகவும், இத்தீர்மானம் மூலம் அவ்வாறான நேரம் குறுக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு சாரார் கூறுகின்றனர். இவ்வாறு ஞாயிறு, போயா தினங்களில் ரியூசன்கள் நடைபெறத் தடை விதிக்கப்பட்டால் மாணவர்களுக்கு கொஞ்சமேனும் ஓய்வெடுக்கவோ, தமது

**-ஓடுகாலி-**

சுற்றத்தோடு கூடியிருந்து குதூகலிக்கவோ நேரம் கிடைக்கும் என இன்னொரு சாராரும் தெரிவிக்கின்றனர்.

ஆனாலும் ஒரு விடயம். இத்தீர்மானத்தை எங்கள் யாழ்ப்பாணத்து ரியூட்டரிகள்நடைமுறைப்படுத்தப் போகின்றனவா? என்று கேட்டால் அதற்கு இல்லை என்பதே பதிலாகும்.

தாம் நினைத்ததை மட்டுமே செய்து பழகிவிட்ட ரியூசன்களுக்கு இத்தீர்மானத்தை தூர எறிவதொன்றும் கடின காரியமல்ல. இது மட்டுமல்லாது வெவ்வேறான கட்டண அறவீடு, இக்கட்டுரையின் ஆரம்பத்தில் கூறப்பட்ட வினோத் நிகழ்வுகள் என்பனவெல்லாம் சரியான கடிவாளம் இல்லாத காரணத்தால் ரியூசன்கள் போடுகின்ற சட்டம் தான் என்று சொல்கிறார் ஒரு முதியவர்.

உண்மைதான்! தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகளை - மாணவர் அனுமதி, கட்டண அறவீடு, ஒழுங்குமுறை என்பன போன்றவற்றை - வரையறைசெய்து கண்காணிக்க ஓர் அமைப்பு முறை இல்லாததே இவற்றுக்கெல்லாம் காரணம். எடுத்ததற்கெல்லாம் சங்கம் வைக்கின்ற எம்மவர்கள், எமது இளைய தலைமுறையின் கல்வி சார்ந்த இந்த ரியூசன் துறையை ஒழுங்குபடுத்தும் ஒரு நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு மட்டும் மறந்ததேனோ? அவர்கள் அவ்வாறு மறந்தார்களா அல்லது தம்மைக் கண்காணிக்க ஒரு நிறுவகம் இருக்குமானால் தமது தனிப்பட்ட இலாபத்துக்கு பங்கம் வந்துவிடுமோ என்ற பயத்தில் தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகள் அவ்வாறான நிறுவகத்தை அமைக்க முட்டுக் கட்டை போட்டு வருகின்றனரா என்பதெல்லாம் சம்பந்தப்பட்டோருக்கே வெளிச்சம். என்னதான் இருந்தாலும் எங்கள் இளையதலைமுறையின் எதிர்காலக்கல்வி மீது வெளிச்சம் பாய எல்லாத் தனியார் கல்வி நிறுவனங்களும் ஒரே குடையின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே விதமானமான-மாணவர் நலன்சார் - நடைமுறைகளைப் பின்பற்றும் நிலையொன்று உருவாக்கப்படவேண்டும். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கிளிநொச்சி

## 2010ஆம் வருடத்திற்குத் தேவையான சேவைகள்

01.கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட மாவட்ட பொது வைத்தியசாலைக்கு 2010ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதற்குக் கேள்விகள் கோரப்படுகின்றன.

2010 ஆடி 01 முதல் மார்கழி 31 வரையான காலப்பகுதிக்கான இச் சேவைக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ்க் குறிப்பிடப்படும் தொகையைச் செலுத்துவதுடன், பெறுமதி ஆவணத்தினையும் கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சமர்ப்பித்து கேள்வி ஆவணத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 21.06.2010 பி.ப 3 மணிக்குக் கிடைக்கக் கூடியவாறு "தலைவர் கேள்விச் சபை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி" என்னும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம்.

**சுத்திகரிப்புச் சேவை**

| சேவை வழங்கல் விவரம் | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|
| மாவட்ட பொது வைத்தியசாலை-கிளிநொச்சி | 1,000.00 | 50,000.00 |

**ஆவணங்கள்**

02. சுத்திகரிப்புச் சேவைக்கு விண்ணப்பித்திருப்பவர்கள் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களாக இருக்க வேண்டும். அதனை உறுதிப்படுத்த பதிவுப் பத்திரத்தினையும் அதன் பிரதியினையும் சமர்ப்பிக்க வேண்டும்.

03. 01.05.2010ஆம் திகதிக்குப் பின் அந்தந்தப் பிரதேச செயலாளரிடம் இருந்து பெறப்பட்ட தமது சொத்துக்களின் பெறுமதியை உறுதிப்படுத்தும் சான்றுக் கடிதம் [பி.ஏஸ்.எம்.201, பொது 170 படிவம்] அல்லது வங்கி உத்தரவாதக் கடிதம்.

04. கேள்வி நேரம் முடிவடைந்ததும் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும்போது சமுகமளிக்கலாம்.

05.கேள்வி தொடர்பான கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

06.மேலதிக விவரங்களை நேரடியாகவோ அல்லது தொலைபேசி இலக்கம் 021 3734739 ஊடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

**வைத்திய கலாநிதி ஏ.தேவநேசன்**
தலைவர்,
பெறுகைக் குழு பி.சு.சே.ப.பணிமனை, கிளிநொச்சி.

[சி/568318]

## வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஜூன்13

கொடிகாமம் பொது சுகாதாரப் பரிசேதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நாளை திங்கட்கிழமை தொடக்கம் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

நாளை திங்கட்கிழமை கச்சாய்ப் பகுதி வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப் படுமென அறிவிக்கப் பட்டுள்ளது. தொடர்ந்துஒரு மாதத்திற்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள் ளதாகவும் பொதுமக்கள் கொடிகாமம் பிரிவு பொதுசுகாதார பரிசோதகருடன் தொடர்பு கொள்ளு மாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(201-207)

## கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் ஹொட்டலுக்குப் பணியாளர்கள் தேவை

**1.Hotel முகாமையாளர்**
முன் அனுபவமுள்ள ஆங்கிலம், சிங்களம் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**2.உதவியாளர்கள் தேவை**
முன் அனுபவமுள்ள சிங்களம் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சுயவிவரக் கோவையுடன் 14.06.2010 திங்கட்கிழமை முற்பகல் 11 மணிமுதல் 12 மணி வரை நேரில் வரவும்.

Kool Air (Pvt) Ltd
68, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5575
Jaffna@Kool air group.com

[99407]

ZOA REFUGEE CARE

# VACANCY NOTICE

ZOA Refugee Care is an international organization working in Sri Lanka since 1995 and continues to be a field-based rehabilitation organisation. Its mission is to support refugees, internally displaced people, returnees and other Sri Lankans affected by conflict or natural disaster in their transition from conflict to peace, from insecurity to stability, from relief to development and from dependence to self-reliance. ZOA Refugee Care reaches out to people regardless of their race, sex, religion or social background based on its Christian identity and values. The organization is active in the sectors of Shelter & Infrastructure, Water & Sanitation, Livelihood, Community Enhancement and Education. ZOA implements projects directly and with partners.

### Technical Officer (Vavuniya)

**Main Responsibilities:**

- Responsible for the technical follow up of project activities in the sectors: Construction & Infrastructures.
- Supervising the proper implementation of construction projects.

**Minimum qualifications required:**

- NCT (Civil engineering) Qualification from a recognised institution or
- Equivalent experience in at least one of the following sectors: construction, infrastructure development.
- Minimum 2-3 years experience in the relevant field.
- Knowledge of construction supervision, project management of construction projects.
- Knowledge on Auto CAD and preparation of BOQ.
- Ability to provide solutions and rectify Technical problems.
- Knows & understand the ZOA Mission, Vision &.implements work accordingly.
- Knowledge of legal issues of construction in Srilanka would be an advantage.
- Be able to communicate fluently in English & Tamil (Sinhala is an added advantage)

**Equally qualified female candidates are particularly encouraged to apply**
**ZOA offers a competitive package comparable with International NGO Standards.**

Please send in your applications with complete bio-data and the names and contact numbers of two non related referees on or **before 19th June 2010 to vavuniya @ zoasrilanka.org** or by mail to the below given address. (Indicate the position on the top left hand corner of the envelope or in the subject line of the e-mail) **Only short listed candidates will be notified.**

**Administrative Officer**
**ZOA Refuge Care,**
**No19, 3rd Lane, Mannar Road, Paddanichchoor, Vavuniya.**
**E Mail : vavuniya@zoasrilanka.org**

[சி/568329]

O P P O R T U N I T Y

TOKYO SUPER
TOKYO SUPER MIX
READY MIXED CONCRETE
NIPPON CEMENT

# JAFFNA - VACANCY

Tokyo Cement Company (Lanka) PLC., a prestigious public quoted company with foreign collaboration and a reputation as one of Sri Lanka's premier cement manufacturers and importers need suitably qualified individuals for the following position.

## Ready Mixed Concrete Plant Operator

- The candidate should be young, energetic, youth and will be able to handle the following functions.
- Operating of Ready Mixed Concrete Plant effectively.
- Ability to independently handle emergency situations with regards to plant functioning (Automation pneumatic & mechanical aspects).
- Two years experience in the same capacity is required.

Applications with names and addresses of 2 non-related referees should be forwarded by post or e-mail to reach the under mentioned within 7 days.

**Manager - HR & Administration,**
**TOKYO CEMENT CO. (LANKA) PLC.**
No. 469 1/1, Galle Road, Colombo 03.
Fax: 0112 500897
E-mail: jeyaraj@tokyocement.lk

# Full Time English

## Full Time Diploma in English

நீங்கள் ஆங்கிலத்தில் தேர்ச்சியடைவது நிச்சயம்

4 மட்டங்கள் 3 மாதங்கள்

| Certificate (L1) | Adv. Cert (L2) | Diploma (L3) |
|---|---|---|
| 1. Basic Speach | 1. Social Dialogs | 1. Free Speech |
| 2. Reading | 2. Newspaper Readings | 2. Extended Vocab |
| 3. Basic Grammar | 3. Field Trips | 3. Drama |
| 4. Elocution for Adults | 4. Debates | 4. I.E.L.T.S.Speaking |

| Courses | Time | Days | Start Date | Duration |
|---|---|---|---|---|
| Foundation | 9.00-2.00 | Mon-Fri | Jun 22,29 & July 6th | 1 Month |
| Levals 1,2&3 | 9.00-2.00 | Mon-Fri | Jun 22,29 & July 6th | 2 Month |

தொழில் புரிபவர்களுக்கு பொருத்தமான நேரத்தில் விசேட ஆங்கில வகுப்புக்கள்.
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி! பதிவுகளுக்கு முந்துங்கள்!!

# Study Abroad

UK, CANADA, SINGAPORE

*A-Grade Colleges & Universities
*Part Time *Lowest Cost

*Accounting
*Economics
*Managements
*Banking & Finance
*Hospitality & Management
*Nursing
*Computer Engineering
*Graphic Design & Advertising
*Business Administration (MBA)
*Aircraft Engineering
*Construction/ Civil Engineering
*Pilot Training

AUTHORIZED TOEFL iBT CENTER
IELTS Training Center

மிகக் குறைந்த சேவைக்கட்டணம்
நம்பகமான சேவைகள்
7 வருடகால அனுபவமும் 300ற்கு மேற்பட்ட மாணவர்கள்

**EUROPEAN COLLEGE**
EUROPEN COLLEGE
Jaffna Branch
Alladi junction, Jaffna Road, Manipay.
Tel: 077 7033 039

KANDY
344, Good Shed Road
Kandy

TRINCOMALLE
243,Courts Road,
Trincomalle.

Colombo
193, Maya Avenue,
Kirulapone,

# BREAKING NEWS

A RATED UK COLLEGES



# UK VISA

SPOT ADMISSION FREE ENTRANCE
19TH SATURDAY 2010 10AM-5PM

HOTLINE
ABDULLAH 0774074203
KASTHURI 0773640136

COURSES IN MANAGEMENT - IT - HOTEL MGT - TRAVEL & TOURISM, BEAUTY CULTURE AND OVER 100 COURSES.

COLLEGE PRINCIPLE WILL INTERVIEW THE STUDENTS AND WILL ISSUE OFFER LETTER ON THE SAME DAY AND CAN CONFIRM THE VISA.

BRING EDUCATIONAL CERTIFICATES (NO NEED IELTS)

**MILLENNIUM BUSINESS ACADEMY (MBA)**
# 286, R. A. De Mel Mawatha, Colombo 03.
(Near the Liberty Plaza, Next to Don Karolis)
Tel: (011) 5748720, 5 748721, 0114 335044
Web: www.millmba.com E-mail: mbaslt@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் அபிவிருத்தியில் கிராமிய மட்டத்தில் பொதுமக்களை பங்காளிகளாக்கும் மக்கள் சபைச் செயலகத்திட்டம்

**நாடளாவியரீதியாக அரசு உருவாக்கத் திட்டமிட்டுள்ள மக்கள் சபைச் செயலகங்கள் தொடர்பான ஒரு நோக்கு இது.**

கடந்த முப்பது வருட காலமாக இடம்பெற்றுவந்த கொடிய உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக வடக்கு - கிழக்குப் பகுதிகள் உட்பட முழு இலங்கையும் சின்னாபின்னமாகிச் சீரழிந்துள்ளது.

அந்தக் கொடிய யுத்தம் நிறைவுற்று தற்போது ஒரு வருட காலமாகிறது. இந்த நிலையில் குட்டிச் சுவராகப் போயுள்ள இலங்கை, அபிவிருத்திப் பாதையில் துரிதமாகப் பயணிக்க வேண்டிய தேவை உள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மேம்பாடு என்ற பெயரில் நாடளாவிய ரீதியில் பல்வேறுபட்ட திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் அத்தகைய திட்டங்கள் உரிய இலக்கை அடைந்துள்ளனவா? என்பது சந்தேகத்துக்கு உரியதே.

காலம் காலமாக மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கையின் பலாபலன்கள், செல்வந்தர்களையும் நடுத்தர வர்க்கத்தினரையும் எட்டியுள்ள அளவுக்குக் கிராம மக்களைச் சென்றடைவதில்லை என்ற பொதுசன விமர்சனமும் ஒரும்புறம் உள்ளது.

ஒரு நாட்டின் முதுகெலும்பாக விளங்குபவை கிராமங்களே. ஒரு கிராமத்தில் ஏற்படும் தன் நிறைவைக் கொண்டே நாட்டின் அபிவிருத்தியின் வெற்றியை அளவிட இயலும். அதன் மூலமே நிலைத்து நிற்கும் அபிவிருத்தியும் சாத்தியமாகும்.

எனவேதான் கிராமிய மேம்பாடு என்ற விடயம் அண்மைக்காலமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. கிராமத்தை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுத்துச் செல்வதற்குப் புதிய உபாயங்கள் குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது.

கிராமத்துக்கு வெளியே இருந்து வரும் உயரதிகாரிகள் குழுவால் தமது அலவலகத்தில் இருந்தவாறோ அல்லது ஒப்புக்காகக் கிராமமொன்றுக்கு ஓரிரு தடவைகள் விஜயம் மேற்கொள்வதன் மூலமோ அக் கிராமத்தின் தேவைகளையும் அங்கு வாழும் பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் இனங் கண்டிட இயலாது.

கிராமத்தில் வாழும்போது மக்களாலன்றி வேறு எவராலும் குறிப்பிட்ட கிராமத்தின் தேவைகள் மற்றும் பின்னடைவுகள் போன்றவற்றை இலகுவாகவும் துல்லியமாகவும் புரிந்துகொள்ள இயலாது. இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு 'கிராமிய பொது மக்களின் பங்கேற்பு அணுகுமுறைக்கு' முக்கியத்துவமும் முன்னுரிமையும் வழங்கி அந்தந்தக் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் - என்பது நவீன காலத்து அபிவிருத்திச் செயற்பாடுகள் குறித்த சிந்தனையாளர்களது உறுதியான நிலைப்பாடாக இருக்கிறது.

மேற்குறித்த யதார்த்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு - பரவலான விதத்திலான பொது மக்களின் விசுவாசமான பங்களிப்புடன் நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்காக நாடளா விய ரீதியில் 'மக்கள் சபைச் செயலகங்களை' உருவாக்குவதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் ஓர் அங்கமான இந்தப் புதிய திட்டம் விரைவில் அமுல்படுத்தப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் இயங்கும் 329 பிரதேச செயலர் பிரிவுகள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் கீழ், நாட்டில் தற்போது 14 ஆயிரத்துப் பதின்மூன்று கிராம சேவை அலுவலர் பிரிவுகள் இயங்கி வருக்கின்றன. இக் கிராமசேவை அலுவலர் பிரிவுகள் 38 ஆயிரத்து 259 கிராமங்களை உள்ளடக்கியுள்ளன.

தற்போதைய திட்டத்தின்படி மக்கள் சபைச் செயலகங்கள் கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக அமைக்கப்படவுள்ளன.

அத்துடன் அந்தச் செயலகங்களை நிர்வகிக்கும் மக்கள் சபைச் செயலாளர்களாக மக்கள் சேவையில் ஆர்வமுள்ள, தகுதிவாய்ந்த பட்டதாரிகள் நியமிக்கப்படவுள்ளனர். இன்று நாட்டில் 22 ஆயிரத்துக்கும் அதிகமான பட்டதாரிகள் நிரந்தர வேலைவாய்ப் பற்ற நிலையில் இருந்து வருவதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

''சுபீட்சமான, தன்னிறைவான ஒழுக்கப் பண்பாடு மிக்க சமுதாயங்களை உருவாக்கி நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இத் திட்டம் உரிய முறையில் முன்னெடுக்கப்படுவதன் மூலம் பரவலான சமூகப் பங்கேற்பினைப் பெற்றுக் கொள்ளுதல் அவசியமாகிறது.

செயற்றிட்டமொன்றைத் தீர்மானிக்கும் நடைமுறைகளின் போதும், அந்தத் தீர்மானத்தை நடைமுறைப் படுத்தும் போதும், அபிவிருத்தி என்ற குறிக்கோளை நோக்காகக் கொண்டும், அதனை உரியவகையில் பரவலாகப் பகிர்ந்துகொள்வதற்கும், அதற்குப் பொது மக்களின் பங்கேற்பை உறுதிப்படுத்திக் கொள்வதன் பொருட்டும் கிராமிய மட்டத்தில் சகல சமூக அமைப்புக்களையும் ஒன்றிணைக்கக் கூடிய மக்கள் சபைச் செயலக முறைமையொன்றை அறிமுகம் செய்து, சமூகத்தின் கீழ் மட்டம் வரை அரச சேவைகளை இலகுவாக்கி, விஸ்தரித்து அவற்றை வினைத்திறன் கொண்டதாக்கும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று - மக்கள் சபைச் செயலகங்களை உருவாக்கும் திட்டம் - அரசாங்கத்தினால் கண்டறியப்பட்டுள்ளது'' என மக்கள் சபைச் செயலாளர் பதவிகளுக்கு ஆள்சேர்க்கும் முகமாகக் கடந்த வருடம் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச வர்த்தமானப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டிருப்பது, அரசின் இந்தத் திட்டம் பயனுள்ளதாக - நாட்டின் கீழ் மட்டப் பொது மக்களுக்குப் பயந்தரவல்ல திட்டமாக அமைய வேண்டும் என்ற அரசின் எதிர்பார்ப்பைக் கோடிகாட்டி நிற்கிறது.

கிராம மட்டத்திலுள்ள கிராம அலுவலர், சமுர்த்தி உத்தியோகத்தர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், மருத்துவ மாது, மிருக வைத்தியர், விவசாயப் போதனாசிரியர் ஆகியோரையும் ஏனைய சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் ஒன்றிணைத்து மக்கள் சபைச் செயலகங்கள் இயங்கவுள்ளன.

பொருளாதார அமைச்சு, மாவட்ட செயலகத் திட்டமிடல் பிரிவு, பிரதேச செயலகத் திட்டமிடல் பிரிவு என்பவற்றினூடாக மக்கள் பிரிவு படுத்தப்பட்டுக் கீழ்மட்டம்வரை நிர்வாகத்தில் பங்கெடுக்கும் விதத்தில் சபைச் செயலகம் என்ற கட்டமைப்பின் செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன.

இலங்கையிலுள்ள கிராம மக்கள் தமது கிராமம் தொடர்பான தேவைகளை, பிரச்சினைகளை இனங் காணுதல், அதனை எவ்வாறு தீர்த்துக்கொள்ளலாம் எனத் திட்டமிடுதல், அவற்றை நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் உள்ளிட்ட செயன்முறைகளை இவர்கள் மேற்கொள்வர். அதன்மூலம் கிராமிய மட்டப் பொதுமக்கள், தங்களது பிரச்சினைகளுக்கு - தேவைகளுக்கு - எதிர்பார்ப்புகளுக்கு இலகுவாகவும், விரைவாகவும் தீர்வுகாணக்கூடிய வாய்ப்புக் கிட்டும். இதற்காகக் கிராம மக்களை அணிதிரட்டும் நடவடிக்கையில் மக்கள் சபைச் செயலகங்கள் ஈடுபடும்.

கிராம மக்களால் முன்மொழியப்படும் திட்டங்கள் கிராம மட்டத்திலுள்ள மக்கள் சபைச் செயலகங்கள் ஊடாகப் பிரதேச செயலகத் திட்டமிடல் பிரிவுக்குச் சமர்ப்பிக் கப்படும். பின்னர் மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பப்பட்டு அவை மாவட்ட செயலகம் ஊடாக உரிய அமைச்சுக்கு அனுப்பிவைக் கப்படும்.

அமைச்சிடமிருந்து வரும் பரிந்துரைகளும், அனுமதிகளும் இதே நடைமுறையில், மீள மக்கள் சபை செயலகம் ஊடாகப் பொதுமக்களைச் சென்றடையும்.

குறித்த திட்டம் தொடர்பாகத் தீர்மானம் எடுத்ததிலிருந்து அதனை நடைமுறைப்படுத்தி மதிப்பிடுதல் வரையான அனைத்தும் கிராம மக்களின் பங்கேற்புடன் இடம்பெறவுள்ளன. இவ்வாறன கீழிலிருந்து மேலான அணுகுமுறை (Bottom to Top approch) மூலம் கிராமங்கள் நிலையான அபிவிருத் தியைக் காணமுடியும்.

உயர்ந்த மட்டத்திலான மக்கள் பங்களிப்பானது உள்ளூர் அறிவு மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றைக் கிராமத்தின் அபிவிருத்திக்கும் தேவைக்கும் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான சூழ்நிலையை உருவாக்கும். அத்துடன் இந்த உயர்ந்த மட்டப் பங்களிப்பானது கிராமங்கள் தாங்களாக விருத்தி செய்த அறிவையும் தொழில்நுட்பத்தையும் தமது சொந்தச் சூழ்நிலைக்குப் பொருத்தமாக உபயோகிக்க முடியும்.

## ஒரு கிராமத்தின் தேவைகளையும் பின்னடைவுகளையும் துல்லியமாக அறிந்திருக்கக் கூடியவர்கள் அங்கு வாழும் மக்களே

பொதுவாகக் கொடையாளிகள் தரப்புகளும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும் எப்போதும் கிராம மட்டத்தில் செயற்படக்கூடிய நிறுவனங்களின் பங்களிப்பையே அதிகம் எதிர்பார்க்கின்றன. மக்கள் சபைச் செயலகத் திட்டம் அத்தகைய எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்வதாய் அமையும்.

மக்கள் சபைச் செயலாளர்களாகப் பட்டதாரிகளை நியமித்து, கிராமங்களின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் திறமைமிக்க தலை வர்களாக அவர் களை வளர்த்தெடுப்பதற்குமான முயற்சியாகவும் இந் தப் புதிய திட்டம் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

அபிவிருத்திச் செயன்முறை களில் பாரபட்சமின்றி மக்களைப் பங்கேற்கச்செய்து அவர்களது ஒத்துழைப்பையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கிராமங்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கும் இந்த மக்கள் சபைச் செயலகங்கள் திட்டம் உதவும் என நம்பலாம்.*

**- உமா -**

# மார்பு நோய்களுக்கான விடுதி




மகாபாரதத்தில் பாண்டவர்கள் நாடுகேட்டு, ஊர்கேட்டு, வீடு கேட்டு இறுதியில் காட்டிற்குச் சென்றது போல் ஆகியுள்ளது யாழ்ப்பாணத்தில் மார்பு நோயாளர் சிகிச்சைக்கான விடுதி வசதி.

வடபகுதியில், மயிலிட்டியில் இயங்கி வந்த மார்பு நோய் சிகிச்சை வைத்தியசாலை இந்திய இராணுவத்தின் வருகையுடன் இராணுவ நோக்கத்திற்காகக் கபளீகரம் செய்யப்பட்டு சுமார் 20 வருடங்களுக்கு மேலாக விட்டது. அதற்கு இன்றுவரை ஒரு முடிவும் இல்லை.

ஆனால் மார்புநோய் சிகிச்சை விடுதி பல இன்னல்களுக்கு மத்தியில் முறையே கோப்பாய், சாவகச்சேரி, கோப்பாய், வல்வெட்டித்துறை மீண்டும் கோப்பாய் என நிரந்தரமற்ற இடங்களில் இயங்கி வருகின்றது. இக்காலப்பகுதியில் இங்கு செயலாற்றிய ஊழியர்கள் என்றும் பாராட்டுக்குரியவர்கள்.

தற்போதைய சூழலில் உலக சுகாதார நிறுவனத்தின் (PAL Approach) நடைமுறை, சுவாச ஆரோக்கியம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் ஆரம்பச் சுகாதார நிலையிலேயே சகல சுவாச நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கும் சிறப்புத்திட்டம் உள்ளது. அதன் அடிப்படையில் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் மார்பு நோய் சிகிச்சைகளுக்கான தனியான அலகு உருவாக்கப்படல் வேண்டும். இத்தகைய நிலைகள் களுத்துறை, குருநாகல், கண்டி போன்ற நகரங்களில் உள்ள வைத்தியசாலைகளிலும் அமைக்கப் பட்டு உள்ளது. இதற்குரிய பணம் GFATM (Global Fund for Aids, Tuberculosis and Malaria) மூலம் தாராளமாக உள்ளது.

ஆனால் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம் இல்லை எனக் காரணம் காட்டி மார்பு நோய்ச்சிகிச்சை விடுதி அமைக்கும் திட்டத்திற்கும் பணிப்பாளர் மறுத்து விட்டார்.

ஆனால் எப்படியாகினும் யாழ்.போதனா வைத்தியசாலையிலேயே இவ்விடுதி அமைக்கப்படல் வேண்டும். இது எமது எதிர்கால சமூகத்தின் வாழ்வுக்கு, நவீன விஞ்ஞான அணுகுமுறை உலக சுகாதார நிறுவனத்தின் நடைமுறையாகும். மேலும் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம் இல்லை என்பதை ஓரளவு ஏற்றுக் கொண்டாலும், பழைய மருத்துவ விடுதிப் பகுதி (மின்சார நிலைய வீதிப் பக்கம்) தற்போது வெறுமையாகவே உள்ளது. இப் பகுதியில் சுவாச அலகினை உருவாக்குவதற்கு யாழ். சமூகம் முயற்சி எடுத்தல் வேண்டும்.

யாழ். மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரியாகக் கடந்த 5 வருடங்களாகவும், மருத்துவராகக் கடந்த 10 வருடங்களுக்கு மேலாகவும் யுத்த சூழலில் சுவாச நோயாளிகளுக்கு உரிய கடமைகளைச் செய்து வந்துள்ளவன் என்ற வகையில் இன்றைய சமாதான சூழலில் காச நோயாளருக்கும் ஏனைய சுவாச நோயாளிகளுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படுவதற்கான வழிவகை ஏற்படுத்த முயற்சிப்பது இயற்கையே.

இது தொடர்பாக நான் தேசிய காசநோய் தடுப்பு பணிப்பாளர் Dr.Sunil De Alwis அவர்களைத் தொடர்பு கொண்டபோது அவர் உடனடியாக யாழ். வைத்தியசாலையில் விடுதி வசதி செய்வதற்குரிய பணத்தினை ஒதுக்கித் தருவதாகக்கூறி உள்ளார். இன்று பணம் உண்டு. ஆனால் எமது மனங்களில் இடம் இல்லை!

எனவே யாழ். மாவட்ட அரச அதிபர், வடமாகாண ஆளுநர், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் ஒன்றிணைந்து முதலில் இதற்கான இடவசதியை ஏற்படுத்தினால் சுவாச நோயாளர்களுக்கு [illegible] சிகிச்சை வசதி அமையும். யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி என்று [illegible] வைத்தியசாலையை இயங்க வைக்காவிடினும் யாழ். வைத்தியசாலையில் சுவாச நோய்களுக்கான விடுதி அமைக்க உதவவேண்டும்.

- Dr.சி.யமுனாநந்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்.பாஷையூர் புனி... ஆலயம் பெருவிழா

## ஆயரின் ஆசிச் செய்தி

பாஷையூர் மண்ணிலே கோயில் கொண் டிருக்கும் தூய அந்தோனியாரின் விழாவில் இறை மக்கள் எல்லோரும் அகமகிழ்ந்து இருக்கும் இந்த நாளில் நானும் உங்களோடு இணைந்து மகிழ் கின்றேன். கொடிய யுத்தத்தின் கோரத் தாண்டவம்அடங்கி அமைதி ஓரளவு மலர்ந்து கொண்டிருக்கும் வேளையில், மக்கள் எல்லோரும் படிப்படியாகத் தங்கள் இல்லிடங்களைப் புனரமைத்துமீள்குடியேறி வரும் இக் காலத்தில் தூயவரின்விழாவை இம்முறை நாமும் அமைதியான சூழ லில் கொண்டாட இறைவன் அருள்புரிந்ததை யிட்டு அக மகிழ்கின்றேன்.



தன்னைத் தேடிவரும் பக்தர்களுக்கு அற்புதங்களைப் புரிந்திடும் தூய அந் தோனியார் எம் மக்களின் கண்ணீரை யும், துன்பியல் வாழ்வையும் துடைக்க இறைவனிடம் பரிந்து பேசுவார் என் பதும் எம் நம்பிக்கை. புனிதரின் புண்ணிய வாழ்வை நாமும் பின்பற்றி அவர் இறைவனில் கொண்டிருந்த விசுவாச வாழ்வை நாமும் வாழ வேண்டும் என்பதே அவரது அவா.எனவே இந்த மகிழ்ச்சியான விழாவில் நாமும் அவரைப் போல வாழ்ந்து இறைவனுக்கு மகிமை சேர்க்க தூய அந்தோனியார் எமக்கு அருள்புரிவாராக.

மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.மறை மாவட்டம்.

## யாழ். மறைமாவட்ட குருமுதல்வரின் ஆசிச் செய்தி

"ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள், ஏனெனில் அவர் நல்லவர். என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு" [தி.பா.107.1] வரலாற்றுப் பெருமைமிக்க பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு இன்று அகவை 160. குடாநாட்டின் பல பாகங்களிலும் புனித அந்தோனியார் ஆலயங்கள் இருப்பினும் பாஷையூரில் அமைந்திருக்கும் புனித அந்தோனியார் ஆலயம் புகழ் பெற்ற தனித்துவமான ஒரு திருத்தல மாகும். இப்புகழ் பூத்த ஆலயம் தனது 160 ஆவது ஆண்டு நிறைவை நிறைவு கூறும் இவ்வேளை யில் ஆசிச் செய்தி கூறுவதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.



யாழ். மாந்தரின் இதயக் கோயில் களில் நீங்காத நினைவலைகளாக, கோடியற்புதரான புனித அந்தோனியாரின் திருத்தலம் காட்சியளிக்கின்றது. மக்களின் விசுவாச வாழ்விற்கு கலங்கரை தீபமாகவும், நம்பிக்கையின் விடிவெள்ளியாக வும் மலர்ந்து, பல்லாயிரக்கணக்கான பக்தர்களைக் கவர்ந்து கொண்ட அற்புதம் நிறைந்த இவ் ஆலயம், அன்றிலிருந்து இன்றுவரை எமது குடாப்பகுதி யில் பெயரோடும், புகழோடும் சிறந்து விளங்கிய மிகவும் உன்னதமான பணித்தளமாக, பல இறைபணியாளர் கள் கால்பதித்த களமாக, ஆன்மீக விடிவை வழங்கும் தள மாகத் திகழ்வதை நினைத்து நானும் மகிழ்கிறேன்.

நமது உள்ளங்களிலும், இல்லங்களிலும் இன்னும் சிறப்பாக எமது நாட்டிலும் நாம் எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் நீதியில் கட்டப்பட்ட நிரந்தரத் தீர்வும், சுகவாழ்வும் நிலவ புனித அந்தோனியார் வழியாக இறை வனை வேண்டி ஆசி கூறி நிற்கின்றேன்.

"நாவழியாவரம் பெற்ற புனித அந்தோனியார்
எம் எல்லோரையும் ஆசீர் வதிப்பாராக".

- அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்.

## பாஷையூர் பங்குத் தந்தையின் வாழ்த்துரை

நீதிமானின் வாயிலிருந்து ஞானம் வெளிப் படும். அவரது நாவு நேரியதை எடுத்துரைக் கும். கடவுளது திருச்சட்டம் அவரது நெஞ் சில் பதிந்துள்ளது.

[திப 36:30:13]



கோடி அற்புதரான தூய அந்தோனியா ரின் திருநாள் வாழ்த்துக்களை அனைவ ருக்கும் மகிழ்வோடு தெரி வித்துக் கொள்கின்றேன்.

போர்த்துக்கல்லில் லிஸ்பன் நகரில் உதித்து, மனிதன் புனிதனாகலாம் என்பதைப் புனித மனிதன் அந்தோனி புதுமை செய் மனிதனாய் புண்ணிய பூமியில் வாழ்ந்து காட்டினார். புகழ் பூத்த புனிதனுக்கு புதுமை செய்வரத்தினை இறைவன் ஈர்ந்ததினால் மத, இன பேதம் கழைந்து பாஷையூர் பதிக்கு கூடி வருகிறது பெருங்கூட்டம்.

மனிதனின் மண்ணக வாழ்வு விண்ணக இறைவனின் நலன்களால் நிரப்பப்படவும், குறைகள் நீங்கி நிறைவு பெறவும் தூய அந் தோனியார் எப்போதும் எங்களுக்காகப் பரிந் துரை செய்கிறார். தூயவரின் அழியா உடலி னைத் தரிசித்து, அருள்பெற்று புனித வாழ் வைக் கைக்கொள்ள நான் இறையாசீரை இந்த நாளிலே இறைஞ்சுகிறேன்.

ஆன்மீகமும், சமூக விழுமியங்களும் ஆட் டம் காணும் நிலைமாறி அனைவரும் தூய அந் தோனியாரைப்போல தூய வாழ்வு வாழவும் வரம் கேட்போம். கனத்த நெஞ்சங்களும், காயப் பட்ட உள்ளங்களும், கறைபடிந்த வாழ்வும் கொண்டோர் நாவன்மை நிறைந்த நம் புனி தரின் மறையுரை கேட்டுப் புதுவாழ்வு பெற்ற னர். அப்புதுமை உம் மண்ணில் இப்போது நிகழ வேண்டுகின்றேன். புனிதரின் விழாவினில் மகிழ்கின்ற பாசையூர் பங்கு மக்கள் மற்றும் இறையடியார் அனைவருக்கும் தூய அந் தோனியாரின் பரிந்துரையை வேண்டுகின் றேன்.

"உன்னதரின் புனிதர்கள் அரசுரிமை பெறுவர், அந்த அரசுரிமையை என்றும் ஊழி ஊழிக் காலமும் கொண்டிருப்பர்.

[தானி 7:18]

அருட்திரு. செ. றோய் பேடினன்





கட்லலை தாலாட்டும் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயம் கல்லினால் கட்டப்பட்டு இவ் வருடம் 160 வருடங்கள் நிறைவு பெறுகிறது.

**பாசையூரில் புனித அந்தோனியார்**

போர்த்துக்கேயர் ஆட்சியில் பாசையூரில் மக்கள் குடியிருந்த தாகச் சான்று கள் இல்லை. 1775 ஆம் ஆண்டு அறிக்கை ஆவணத்தில் சிறிய ஆலயம் பற்றிய குறிப்பு இருப்பதாக வரலாற்றாசிரியர் பூடன்ஸ் அடிகள் கூறுகிறார். பாசையூரில் கடற்றொழில் செய்ய வந்திருந்த நல்லூர், ஆனைக்கோட்டை, நெடுந்தீவு, சுதுமலை ஆகிய ஊர்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் தங்க இடமற்ற அவல நிலையினைக் கண்டு இப்பகுதியில் சேவை செய்த குருக்கள் குடிசைகள் அமைத்துக் கொடுத்தனர் என்பது வாய்மொழிப்பாரம் பரியம். இந்து சமயத்தைச் சார்ந்த இவர்கள் ஒறிற்றோரியன் சபைக் குருக் களின் போதனையால் மனம்மாறி கத்தோலிக்கர் ஆயினர். இக்குழு மத் திற்கே 1775 ஆம் ஆண்டு ஆலயம் கட்டப்பட்டது. 18 ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதிவரை கத்தோலிக்க சமய வெளிப்படையாக வாழ முடியாது காணப்பட்டது. 1796 இல் ஒல்லாந்தர் வெளியேற்றப்பட்டு ஆட்சிக்கு வந்த ஆங்கிலேயர் மதச் சுதந்திரம் வழங்கினர். 1828 இல் யாழ்ப்பாணத் தில் உள்ள கத்தோலிக்க ஆலயங்களின்பட்டியல் வெளிவந்தது. இதில் பாஷையூர் அந்தோனியார் ஆலயமும் 142 ஆலயங்களில் ஒன்றாகும்.

**தற்போதைய ஆலயம்**

1775 இல் கட்டப்பட்ட ஆலயத்தில் மக்கள் மிகுதியால் இட வசதி போதாமல் இருந்ததால் 1844 - 45 ஆம் ஆண்டுகளில் கோவா ஒறிற்றோரியன் சபையைச் சார்ந்த யோவாக்கீம் கபிதயேல் தலை மையில் கட்டப்பட்டது. 1850 இல் காசினெலி [Cassinelli ]






**குமார் பேக் ஹவுஸ்**

பாண், பணிஸ் வகைகள், கேக் வகைகள், பிஸ்கற் வகைகள், பிறந்த நாள் நிகழ்வு விழாக்களுக்கான கேக்வகைகள், மிக்ஷர், குளிர்பான வகைகள் ஓடருக்குச் செய்து தரப்படும்.

சென். செபஸ்தியான் வீதி, பாஷையூர்.

**மிலேன் சிற்றி**

பிறவுசிங், கணனி கேம்ஸ்,
போட்டோப்பிரதி, பிறின்ரிங்,
வீடியோ, கோல்ஸ், நெற் கோல்ஸ்
மிலேன் சிற்றி
12, சென். அன்ரனிஸ் வீதி,
பாஷையூர்
யாழ்ப்பாணம்.

சகல புரியாணிகள் (சைவ, அசைவம்),
குளிர்பானங்கள், சிற்றுண்டிகள் (றோல்ஸ், வடை;
கட்லட், சமோஷா ) என்பன போன்றவற்றுக்கும்
நாட வேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்

**ஹொட்டல் றொலெக்ஸ்**

ஓடர்கள் குறித்த நேரத்தில் கவனிக்கப்படும்.
340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P 021 222 2808
360, Galle Road, Colombo - 6, 2360462.





செல்வம்
22 கரட் த
குறித்த
12,

நாகபூஷ
பல்பொ
சகலவிதமான
மொத்தமாகவும் சில்
விலைக்குப் பெ

சிறீஸ்
சகல விதமான குளிர்
வகைகள் ஓடர்களுக்
133, கஸ்தூரிய
T.P: 0
பல்பொருள் வாண
யாழ்ப்பாணம்.

கஜமுகன்
கட்டடப் பொரு
வகைகள் யாவும்
பெற்றுக்
இல, 147, 14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1942 ஆம் ஆண்டில் பிறந்த செ.கதிர்காமநாதன் வடமராட்சி, கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1960 களில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமது பட்டப்படிப்பை மேற்கொண்ட வேளையிலேயே ஈழத்துப் புனைகதைத் துறையில் தம்மை இணைத்துக் கொண்டவர். 1968 ஆம் ஆண்டில் வெளிவந்த இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி 'கொட்டும் பனி'க்கு, அந்த ஆண்டுக்கான சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. மற்றிரு எழுத்தாளர்களது குறுநாவல்களுடன் இவரது 'வெறும் சோற்றுக்கே வந்தது' குறுநாவலையும் உள்ளடக்கி 'மூவர் கதைகள்' தொகுதி 1971 ஆம் ஆண்டில் வெளி வந்தது. 'நான் சாகமாட்டேன்' இவரது மொழிபெயர்ப்பு நாவல். வீரகேசரி பத்திரிகையில் ஆசிரிய பீடத்தில் சில வருடங் கள் பணியாற்றியவர். இள வயதில் அமரராகி விட்டார். 'ஈழநாடு பத்திரிகையில் வெளியான இவரது 'தாய்' சிறுகதை இங்கு பிரசுமாகிறது.

# தாய்

சிறுகதை

செ.கதிர்காமநாதன்

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 155

முதல் வெடி -
இரண்டாம் வெடி ?
சம்மட்டி ஒலிகள்...... கல்லுப் பிளந்து துண்டம் துண்டமாகி, வெண்மையும் மண் செம்மையுமாக- மண் மேட்டிலே குவிகின்றன.

மூன்றாம் வெடி -
தொடர்ந்து சம்மட்டி ஒலிகள்....
நாலாவது -
சீறிவிட்டு தோல்வியிலே அமைதியாகிறது.

கமுகம் மடல்களை வளைத்து முழங் காலொடு கட்டி உடலெங்கும் மாப்புள்ளிகளாக அழகுக் கோலத்தில் நிற்கும் நாலைந்து கல்லுப் புரட்டிகள்...

அகலவாய்களைப் பிளந்து கொண்டு, சிதையும் நிலையில் முழிக்கும் கற்பாறைகளில் அவர் களின் கைகளின் அமுக்கம் சம்மட்டி அடி அழுத்தத்தில் புலம் காட்டு கின்றது.

சில்லவல்லமாகிச் சிதையும் கற்கள்.

அதுதான் அவர்கள் தொழில்.

தலையிலே இருந்த செம்பாட்டுத் துவாயைக் கழற்றி ஒரு உதறு உதறி வாயை, முகத்தை, உடலைத் துடைத்துக் கொள்ளுகிறான் சின்னப்பன்.

வியர்வை நாசியில் குபீரென்று அடிக்கின்றது.

நித்தம் நித்தம் துடைத்து அது அவனுக்குப் பழக்கம்.

துளை கம்பியைச் சுழற்றிச் சுழற்றிச் சிறு சுத்தியலால் கல்லைத் துளைத்துத் துளைத்து மறு வெடிக்குத் தயார் செய்ய அவன் கைகள் துரு துருவென்று இயங்குகின்றன.

பார்வை மட்டும் வான் முகட்டில் செம்மையைத் தேடுகிறது. சோர்ந்து போன அவனுள்ளதைப் போல. நம்பிக்கை தளர்ந்து குமுறிக் கொண்டிருக்கும் அவன் எண்ணத்தைப் போலக் கைகளும் தளர்ந்து, சம்மட்டியைத் தூக்கிக் கற்பாறையில் ஒரு ஓங்கல் ஓங்கிக் கற்களை உதைத்தெறியத் திராணியற்றுச் சோர்கின்றன.

கால்களிலும் கைகளிலும் முதுகிலுமாக விண் விண்ணென்ற வலி....

'எப்பதான் எங்களுக்கு விடிவு வருமோ....? சும்மா சும்மா கல்லோடே மாரடிக்சு, கையும் காலும் கல்லாப் போனதுதான் மிச்சம்... நேற்று பறந்து வந்து கல்லு அடிச்ச நோ இன்னும் மாறயில்லை.... நிம்மதியா மூலைக்குள் படுக்கமுடியாது... சீ.... என்ன வாழ்க்கையடா....' வயிற்றுக்காக வயிறு இளைக்க, உடல்சோர உழைத்துத் தானே ஆகவேண்டியிருக்கிறது? இல்லாவிட்டால்...?

'சரி பொழுது பட்டுப் போச்சடா.... வாருங்கோ போவம்... மிச்சத்தைப் பிறகு பாப்பம்...' சம்மட்டிகள் ஓய்கின்றன.

கமுக மடல் காலணிகள் பாதுகாப் பாக வைக்கப்படுகின்றன. தளர்ச்சியான நடை 'இந்த அலுப்புக்கு இரண்டு போத்தில் அடிச்சுப் போட்டுப் போவம்.... களைப்பு பஞ்சாப் போயி டும்.... அப்படியெண்டாத்தான் என்ரை உடம்பு நாளைக்குத் தாக்குப் பிடிக்கும்...

எதிரே கள்ளுக் கொட்டில். கள்ளுக் கொட்டிலைச் சுற்றியுள்ள பாவட்டை களில் தூக்கணாங்குருவிகளின் கூடுகள் போன்று தொங்கும் பனை யோலைப் பிளாக்கள்... அசுரகதியில் தங்களுடைய பிளாக்களை இனங் கண்டு அவற்றை இரு கைகளாலும் ஏந்தி ஒரே இழுவையில் கள்ளின் ருசியை ருசித்து...

"இஞ்சார், நீ இனிக் கள்ளுக் குடிச் சிட்டு இங்கை வரக்கூடாது. சும்மா பினாத்தி அக்கம் பக்கம் பெண் பிரசு இருக்கிற இடத்திலை...."

'அவளவை இருந்தா எனக்கென் னடி...? என்ன வேணுமாம்.... தெரி யல்லை என்ர குணம்?'

'மூதேசி... பிமரசத்தி... குடிச்சிட்டு வந்து இண்டைக்கு அடுப்பிலை உலையும் வையன்....பாப்பம்....'

கள்ளில் அவன்
கள்ளுப்பிளா வாயுதட்டருகில் செல்லத் தயங்குகின்றது.

நீண்ட நேரம்.... சாப்பாடு கேட்கப்படும்.

பசி...
வெறி...
மயக்கம்.
மயக்கம்.

பன்னிரெண்டு மணிக்கு அவள் தோளில் அவன் கரங்கள் அதன் ஸ்பரிசத் தில் வெறி நுகர்வைவிட வெறி....

'இனிக் குடிக்காதை.... ஒழும்பி வா சாப்பிட ஒழும்பு... கோபம் வேண்டாம் வாவன்...'

கெஞ்சல்.

மறுநாள் பழைய கதை.

'என்னடா சின்னப்புக் குடிக்காமை யோசிக்கிறாய்? மனுஷியைப் பத்தியோ... இப்ப என்ன சும்மாவோ? ம்... உதுக்கெல்லாம் யோசிக்கிறதோ? பொடியல் தனிய இருக்குங்கள்...

கெதியாய் போய்ச்சேர்...

"போ...."

"போறன்...."

அம்பலன் வெளி அவர்கள் இராச்சியமாகிறது...

கிராயில் கடலை.

கல்லுடைத்த களைப்பிலும் அதைப் போக்கடித்த கள் தந்த வெறியிலும் கூட.... சின்னப்பனின் கண்கள் கடலையை மொய்க்கின்றன.

(18 ஆம் பக்கம் பார்க்க....)

## அரிதார முகங்கள்

மனிதங்கள் மரித்துப்போய்
மரண ஓலங்களையே
கேட்டுக் கேட்டு
சலிப்புற்ற
இந்தப் பூமிப்பந்தில்
வலிகள் காணாத
இதயங்கள் யாரிடமாவது
இருக்கின்றதா......?
யாருடைய துயரங்களை
யாரிடம் புலம்புவது
உள்ளக்கிடக்கைகளை
உள்ளிருத்தி
வெளியே போலிகளாகியே
திரிகின்றோம்
நாள்களும் கணங்களும்
நகர்ந்து கொள்கின்றன
என்பதற்காய்
நாதியற்றுப்போய் கிடந்த
நாழிகைகளை எப்படி
மறப்பது....?
எங்கள் இதயச் சுவர்களில்
நர்த்தனமாடிச் சென்ற
வேதனைத் தடங்களே
இன்னும் அழியவில்லை
அதற்குள்
எத்தனை சிருஷ்டிப்பு
எம் முன்னே
எதற்காக இந்தப் போலி வாழ்வு?
சுட்ட நீரைப் போலல்லவா
கண்ணீரை வாரி வாரி
இறைத்திருக்கிறோம்
அமைதியுறாது அல்லற்படும்
எம் நெஞ்சங்களை
எதைக் கொண்டும்
சாந்தப்படுத்த முடியாது
இயலவில்லை இனிமேலும்
முகங்களுக்கு வேண்டுமானால்
அரிதாரம் பூசிக்கொள்ளலாம்
வேதனைக் கறை படிந்த
எங்கள் மனங்களுக்கு
எதைத்தான் பூசிக் கொள்வது?

கௌரி - [illegible]

# பிறர் நலம் விழைக!

இலக்கியக் காட்சி 45



காட்டுக்குச் சென்ற இராமனை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வந்து அரசனாக்குவேன் என்ற மன வைராக்கியம் பரதனிடம் காணப்பட்டது. அயோத்தியிலிருந்து இராமனைத் தேடித் தன் சுற்றத்துடன் கங்கையைக் கடந்து சிருங்கிபேரத்தின் தென் புறக்கரையை அடைந்து விட்டான். சிருங்கிபேரத்திற்குத்தென்மேற்கே உள்ள மலைத் தொடர்தான் சித்திரகூடம். இராமபிரான் தற்போது அவ் விடத்திலேயே தங்கியிருக்கிறான்.

இராமனது மனதை வென்று அவனது முடிவில் மாற்றத்தை ஏற்படுத்தி விடுவேன் என்ற நம்பிக்கையில் வந்த பரதனுக்கு ஏமாற்றமே எஞ்சியது. மனம் தளராத அவன் இராமனிடமிருந்து வாக்குறுதிகளை வாங்கிக் கொண்டான். அவனது திருவடிகளைப் பெற்று அயோத்தி அரசுக்கு அத் திருவடி நிலைகளைச் சூட்டி அழகுபார்த்தான்.

இவ்வாறாக அயோத்தி அரசுக்கு இராமபிரானது திருவடிகளைச் சூட்டிய படலம் திருவடி சூட்டு படலம் ஆயிற்று. இங்கு சூட்டு படலம் என்பதை வினைத் தொகையாகக் கொள்ளலாம். திருவடியைச் சூட்டிய படலம், சூட்டுகின்ற படலம், சூட்டும் படலம் என முக்காலச் செய்திகளும் இப்படலத்துள் அமைந்துள்ளமையைக் கம்பன் அழகாக அமைத்துக் காட்டினான்.

படலத்தின் ஆரம்பம் பரத்துவாச முனிவருக்கும் பரதனுக்கும் இடையிலான சந்திப்பாகும்.

பரத்துவாசர், மாமுனிவர் என்ற சிறப்பிற்குரியவர். இவரது ஆச்சிரமம் சிருங்கி பேரத்திற்குத் தென்புறத்திலுள்ள கங்கைக் கரையில் அமைந்திருந்தது.

பரத்துவாச முனிவர் பரதனைக் கண்டு மகிழ்ச்சி பொங்க ஆசிகள் நல்கினார். ஏற்கனவே இராமனைச் சந்தித்த போது [வனம்புகு படலத்தில்] அவன் தன் தம்பி பரதனே நாடாளுகின்றான்; நான் தந்தையின் கட்டளைப்படி காடேகுகின்றேன் என "உற்று உள பொருள் எல்லாம் உணர்வுள உரை செய்தான்"

இதை மனதிற் கொண்ட முனிவர் பரதனைப் பார்த்து;

'எடுத்த மாமுடி சூடி
நின்பால் இயைந்து
அடுத்த பேர் அரசு
ஆண்டிலை ஐய! நீ
முடித்த வார் சடைக்
கற்றையை மூசுதூசு
உடுத்து நண்ணுதற்கு
உற்றுளது யாது?'
[திருவடி சூட்டு படலம் 02]

என வினவினார். தசரதனை அடுத்து ஆட்சிப் பொறுப்பை நீ ஏற்கவில்லையா? என முனிவர் வினவுகிறார். இராமன் இல்லாத அரசு பெயருக்கு மாத்திரமே அரசாக இருக்கும். இதனால் தானோ முனிவரும் 'பேர் அரசு' என்று குறிப்பிட்டார்.

பரதன் நாட்டாட்சிப் பொறுப்பை ஏற்றானில்லை என்ற செய்தி முக்காலமும் உணர்ந்தவரான முனிவரால் உணரப்படாததா? இராமன் தன்னை அவதாரத்தால் மனிதனாகவே அறியினும் முனிவர்கள் அவனைப் பரம்பொருளா கவே உணர்ந்தனர். இதற்குப் பரத்துவாசரும் விதிவிலக்கல்லர். பரத்துவாசர் இராமனைக் கண்டு வரவேற்கும் கோலத்தை

"நெடு நாளில் திருத்திய வினை
முற்றிற்று இன்று எனல் தெரிகின்றான்"

எனக் கம்பன் காட்சிப்படுத்துவது பரத்துவாசரது வன்மையைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

பரத்துவாசர் பரதனது நிலையை உணர்ந்துதான் 'அடுத்த பேர் அரசு ஆண்டிலை ஐய' என விளித் தாரோ? எது எவ்வாறாயினும், பரதனது மனநிலையை வெளிப்படுத்த வேண்டிய தேவையின் நிமித்தமே பரத்துவாசர் இப்படியொரு வினாவைத் தொடுத்தார் எனக் கொள்ளலாம்.

பரத்துவாசரது கேள்வி பரதனுக்குச் சினத்தை உண்டு பண்ணியது.

"எனக்கு அடுத்தது இயம்பிலை நீ என்றான்
உனக்கு அடுப்பது அன்றால் உரவோய் என்றான்"

எனக் கோபமாகச் சொற்களை அள்ளி வீசினான். தவ வலிமையுடையவனாகவும் அறிவோனாகவும் இருக்கின்ற வன் நியாய, அநியாயங்களை உணர்ந்து கூறாமல் மூத்தவன் இருக்க இளையவன் அரசேற்பது பற்றிக் கூறியமையைக் கண்ட பரதன் சீற்றத்துடன் பேசினான். இதனைப் புலப்படுத்து மாற்போல் பாடலிலும் இடைவிட்டு 'என்றான்' 'என்றான்' எனக் கம்பர் இருமுறை அமைத்தார்

"மூத்தவன் இருக்க இளையவனாகிய யான் அரசுரிமையை ஏற்றுக்கொள்ள மாட்டேன். இராமன் அரசுரிமையை ஏற்றுக் கொள்ளானாகில் அவன் வனத்தில் வசிக்கும் பதினான்கு ஆண்டுகளும் அவனோடு சேர்ந்து நானும் தங்குவேன்" என்பது பரதனது பதிலாக அமைந்தது.

பரதன் கூறிய இப்பதில் பரத்துவாசர் உள்ளிட்ட முனிவர் யாவருக்கும் அரைத்த சந்தனம் கொண்டு அப்பியது போன்ற குளிர்ச்சியை ஏற்படுத்தியது. "பரதனுடன் வந்துள்ள சேனைக்கு விருந்தளிப்பேன்" என்று பரத்துவாசர் இரங்கினார்.

"துறந்த செல்வன் நினைய, துறக்கம்தான்
பறந்து வந்து படிந்தது; பல்சனம்
பிறந்து வேறு ஓர் உலகு பெற்றாரென
மறந்து வைகினர், முன்னைத் தம் வாழ்வு எலாம்"
[திருவடி சூட்டு படலம் - 07]

யான் எனது என்னும் அகப்புறப் பற்றுக்களைக் கைவிட்ட தவச் செல்வத்தையுடைய பரத்துவாசன் நினைத்த மாத்திரத்தில் சுவர்க்க லோகம் [துறக்கம்] விண்ணிழிந்து வந்து காட்டினில் தங்கியது. சேனையில் இருந்த பல்வித மக்களும் மறுபிறப்பு எடுத்து வேறோர் உலகத்தை அடைந்தவர் போல முன்னைய தம்முடைய வாழ்க்கையை எல்லாம் மறந்து இன்ப உலகில் ஆழ்ந்தனர்.

முற்றும் துறந்த முனிவர் தனக்காக எதையும் வேண்டவில்லை. மற்றவர்களது நன்மையையே நாடினார். சுவர்க்க போகத்தை அவர் அனுபவிக்கப் போவதில்லை. இதனால் அவர் நினைத்த மாத்திரத்தில் சுவர்க்கம் பறந்து வந்து சேர்ந்தது.

தமக்கெனச் சுயநலநோக்கில் சிந்திக்காது உலக நன்மையை நாடி பொதுநல நோக்கில் ஆற்றும் கருமங்கள் இலகுவில் கைகூடி விடும் என்ற நம்பிக்கையை இக்காட்சி ஏற்படுத்துகிறதல்லவா?

★★★★★



ச.லலீசன், விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயிலும் நரியும்



ஒரு காட்டில் ஒரு குயில் இருந்தது. அது அன்றொரு நாள் பாடிக்கொண்டு இருந்தது. நரி ஒன்று அவ்வழியே வந்தது. அது மரத்தில் இருக்கும் குயிலைக் கண்டது. உடனே குயிலிடம் '' நீ ஏன் நித்திரையில் எப்போதும் பாடிக் கொண்டே இருக்கிறீர்'' எனக் கேட்டது. குயில் சொன்னது. நான் நித்திரை கொள்ளப்போகிறேன் என்னைக் கவனித்துக்கொள்ளுங்கள் . நரிக்குப் பெரும் மகிழ்ச்சி. அது இல்லையென்னாது சம்மதித்தது. குயில் மரத்தின் கீழே இறங்கி தனது இறகுக்குள் தலையை வைத்துப் படுத்தது. நரி தனது வாயினால் குயிலைப் பிடித்தது. குயில் நரியிடம் இருந்து தப்பிக்க முயற்சித்தது. அதற்கு ஒரு யோசனை வந்தது. அது சொன்னது நான் தேன் போன்ற உங்கள் குரலை இறப்பதற்குமுன் கேட்கவேண்டும் என்றது. உடனே நரி பெருமையில் ஊளையிடத் தொடங்கியது. உடனே குயில் பறந்து சென்றது.



தீயோரிடம் இணைவது அழிவையே தரும்.

க. சங்கவிகா, தரம் 4B, யா/ புனித தெரேசா மகளிர் கல்லூரி.

## பொன்மொழிகள்

1. சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் அது இதயத்தின் இசை
2. சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் அது சக்தியின் பிறப்பிடம்
3. விளையாட நேரம் ஒதுக்குங்கள் அது இளமையின் இரகசியம்
4. படிக்க நேரம் ஒதுக்குங்கள் அது அறிவின் ஊற்று
5. உழைக்க நேரம் ஒதுக்குங்கள் அது மகிழ்ச்சிக்கு வழி மற்றும் வெற்றியின் விலை.

மயூரநாதன் பரிஷைலா,
தரம் 6 B,
யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## உலக நாடுகளின் சிறப்பு

01. கலையில் சிறந்தது
பிரான்ஸ்
02. தத்தவம் தளைத்தது
கிரீஸ் (கிரேக்கம்)
03. விவேகம் நிறைந்தது
இங்கிலாந்து
04. சரித்திரம் படைத்தது
இத்தாலி
05. உழைப்பை மதிப்பது
யப்பான்
06. அறிவியல் வளர்ந்தது
ஜேர்மனி
07. சுதந்திரம் விரும்புவது
அமெரிக்கா

வி.மதுமதி,
தரம் - 9 C,
யா/ மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.




## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? 60

1. 2010 உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தில் முதலாவது கோலை அடித்த அணி எது?
2. இலங்கையின் கல்வி அமைச்சர் யார்?
3. அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரின் பெயர் என்ன?
4. நஷனல் ட்ரஸ்ட் வங்கியின் திறப்பு விழாவில் கலந்துகொண்ட இலங்கைக் கிரிக்கெட் வீரரின் பெயர் என்ன?
5. பேராசிரியர் அ.துரைராஜா எப்போது பிறந்தார்?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 20.06.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

விடை தெரியுமா? - 58 இற்கான சரியான விடைகள்

1. இந்தியா, இலங்கை, சிம்பாபே
2. புத்தரினுடைய பிறப்பு, இறப்பு பரிநிர்வாணமடைதல் ஆகிய விடயங்களை ஞாபகமூட்ட.
3. ஆவி மாதம் 5 ஆம் திகதி.
4. ஸ்ரீ காளஹஸ்தி சிவன் கோயில். 5. ஷியு ஜிந்தாவோ

### பரிசுபெறுவோர் விபரம்

1. செ.சசிகாந், தரம் 6, யா/ வயாவிளான் ம.ம.வித்தி.
2. க.பரமிதா, தரம் 7, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
3. ஜெ.ஆரூரன், இல 72/1 பிரம்படி லேன், கொக்குவில்.
4. ச.தயூரன், அம்பிகை வாசா, கற்பகப் பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
5. ரா.உஷாந்தினி, தரம் 7எம், புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி.
6. சூ.விமலேசன், தரம் 10வ, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


மாணவர் பெயர்:-..............................................
தரம் :-..............................................
பாடசாலை :-..............................................
..............................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.






சி.துஸ்யந்தினி, தரம் -9 A,
யா/இராமநாதன் கல்லூரி, உடுவில்.



ஏ.கேசவன், தரம் -8 C,
யா/ விக்னேஸ்வராக் கல்லூரி.



மு.துசாந்தன், தரம் -9 B,
யா/ து.சி.ம.வி., மாதனை.




த.ரிக்ஷன், தரம் -9 E,
யா/ யாழ்.மத்திய கல்லூரி.



கு.கேதீஸ்வரன், தரம் -6 B,
யா/ அருணோதயாக் கல்லூரி.



உ.மச்சிலி, தரம் -8 B,
யா/ இணுவில் மத்திய கல்லூரி.



தெ.துசாந், தரம் -6 C,
யா/ விக்னேஸ்வராக் கல்லூரி.



மிதுஷா தயாபரன், தரம் -10,
யா/ ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.




சு.மாதங்கி, தரம் -2 B,
யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.



பற்றிக் பால்றாஜ், தரம் -8 C,
யா/விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அளவெட்டி அருணோ

## அதிபர் திரு.கி.மகேந்திரராசா

## கனடா பழைய மாணவர் சங்

## பாராட்டுச்

### அருணோதயவின் வியத்தகு வளர்ச்சிக்கு வித்திட்ட அதிபர்

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் வியத்தகு வளர்ச்சிக்கு வித்திட்ட அதிபர் வரிசையிலே முதன்மை மிக்கவராகப் போற்றப்படுபவர் திரு.கி.மகேந்திரராசா ஆவார். இவர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றுத் தொடர்ந்து இரத்தினபுரியில் அல் - அக்ஸா முஸ்லிம் மகா வித்தியாலயம், அல் - அமெக்சியா முஸ்லிம் மகா வித்தியாலயம், தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கடமையாற்றி அதனைத் தொடர்ந்து 25 வருடங்கள் யா/அருணோதயாக் கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர்.

விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த வறிய மாணவர்கள் பலர், இடப்பெயர்வு காலங்களில் பொருளாதார நெருக்கடிகளுக்கு உட்பட்டிருந்த வேளையிலே அவர்களது முன்னேற்றத்திலே ஆர்வம் கொண்டு புலமைப் பரிசில் திட்டத்தை உருவாக்கியமை, கற்றல் உபகரங்களை மாணவர்களுக்கு வழங்கி ஊக்குவித்தல் போன்ற பல திட்டங்களால் பல மாணவர்களை நன்நிலைப் படுத்தியவர்.

யுத்த இடப்பெயர்வோடு பாடசாலையை மருதனார்மடம் யா/இராமநாதன் கல்லூரியில் இடம்பெயர்ந்த 300 மாணவருடன் பல சிரமங்களுக்கு மத்தியில் திறம்பட நடத்தியவர். அக்காலங்களில் எல்லாம் துணிச்சலுடன் பாடசாலையின் ஆவணங்கள், சொத்துக் களைப் பேணிப் பாதுகாத்து மீண்டும் சொந்த இடத்திலே பதித்து வளர்ந்து உயரச் செய்த பெருமை திரு.மகேந்திரராசாவைச் சாரும்.

2000ஆம் ஆண்டு முதல் இவர் ஓய்வு பெறும் காலம் வரை உயர்தர வகுப்பு மாணவர்களின் கல்விப் பெறுபேறுகள் மிக உயர் நிலையினை அடைந்தமையை அவதானிக்க முடிகின்றது. உயர்தர வகுப்பில் 3அ யை பெறச் செய்தமை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பல மாணவர்கள் சித்தியை ஈட்டியமை என்பன இதற்குச் சான்றாகும்.

இவரது காலத்திலே பரிசளிப்பு விழா, நிதி உருவாக்கம், விளையாட்டு மைதானம், புதிய பல மாடிக்கட்டடங்கள் என்பன யாவும் இவரது ஆளுமையினையும் அர்ப்பணிப்பினையும் காட்டுகின்றன. தொடர்பாடற்றிறன், நிர்வாகத்திறன், மனிதமாண்பு, செயலாற்றல், இனியதோற்றம், உறுதியான நம்பிக்கை, சமூக ஈடுபாடு போன்ற பல நற்பண்புகளால் கல்லூரியின் மேன்மைக்கு உறுதி செய்து அதுதொடர்ந்தும் வளர்ச்சிப் பாதையில் செல்வதற்கான உறுதியான தளத்தை அமைத்து தனதுசேவையால் அருணோதயக் கல்லூரியில் தனக்கென முத்திரை பதித்த அதிபர் திரு.கி.மகேந்திரராசா அவர்கள் பல்லாண்டு காலம் மகிழ்வுடன் வாழ நல்வாழ்த்தும் ஆசியும் கூறுவதில் பெருமையடைகின்றேன்.

திரு.ச.கைலாசநாதன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்.

### அருணோதயாவின் பொற்காலம்

இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து மாற்றலாகி 1982 ஆம் ஆண்டு யா/அருணோதயாக் கல்லூரியில் ஆசிரிய ராகப் பணியாற்றக் காலடி வைத்த திரு. கிருஷ்ணர் மகேந்திரராசா அவர்கள், ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக, அதிபராகப் பல பதவி உயர்வுகளைப் பெற்று கடந்த 25 ஆண்டு காலம் கல்லூரியின் வளர்ச்சிக்காக கால நேரம் பாராது அயராது உழைத்த உத்தமன் ஆவார்.

இவர் ஆசிரியராகப் பதவி ஏற்று மாணவர்களின் ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றிற்குப் பொறுப்பாக இருந்து மாணவர்களை நல்வழிப்படுத்திய தோடு நின்றுவிடாமல் மாணவர்களின் கல்வியிலும் கூடிய கவனம் செலுத்தலாயினார். இவரின் ஊக்கு மிகுதியால் எவரேனும் பல்கலைக்கழக அனுமதி பெறாத காலம் மாறி 1982 இற்குப் பின் ஒருவர், இருவர் என ஆரம்பித்து சிறந்த பெறுபேற்றைப் பெற்று 15 இற்கு மேற்பட்ட மாணவர்களை ஒரே தடவையில் பல்கலைக்கழக அனுமதி பெறச் செய்த பெருமை இவரையே சாரும்.

இவர் அதிபராகப் பதவி ஏற்ற காலத்தில் பல காலமாகச் செயலிழந்திருந்த பழைய மாணவர் சங்கத்தைப் பெருந்தொகை அங்கத்தவர் களைச் சேர்த்து அருணோதயாக் கல்லூரியின் மாணவர் சங்கம் என்று தலை செய்யும் முகமாக அரசாங்கத்தின் உதவியைப் பெற்று இரண்டு மாடிக் கட்டடங்களையும் மாணவர்கள் மத்தியில் வாசிப்புத் திறனை விருத்தி செய்யும் நோக்குடன் நூல்நிலையத்துக்கு தொடர்மாடிக் கட்டடம் அமைப்பித்து மாணவர்களை நெறிப்படுத்தி வந்த பெருமை இவரையே சாரும்.

கல்வியிலும் சரி, இணைப்பாடவிதான செயற்பாடுகளாகிய முத்தமிழ் விழாக்களிலும், மெய்வல்லுநர் போட்டிகளிலும் விளையாட்டுக்களிலும் சிறப்பாக உதைபந்து ஆகியவற்றிலும் புகழ்பூத்த மாணவர்களை உருவாக்கித் தேசிய மட்டம் வரை செல்லக் கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தி கல்லூரியின் பெயரை நிலைநாட்டிய பெருமைக்கு இவரது அர்ப்பணிப்பும் ஆளுமைத் திறமையுமே காரணமாகும்.

அதிபர், திரு மகேந்திரராசா அவர்கள் தமது கடமையில் நேர்மனப்பாங்குடனும் எந்நேரமும் பாடசாலையின் உயர்ச்சி, ஆசிரியர்களது வாண்மை விருத்தி, மாணவர்களின் கல்வி மேம்பாடு பற்றிய சிந்தனைகளை முன் நிறுத்தியே கடமைகளை நிறைவேற்றி வந்தவர். இவர் கல்லூரியில் சேவையாற்றிய காலத்தே அருணோதயாத் தாயின் பொற்காலம் என்று கூறின் மிகையாகாது.

உணர்ச்சிகளை வெளிக்காட்டாத இறுக்கமான முகம் ஆனால் இளகிய இதயம். எந்நேரமும் மெல்லியதொரு புன்னகை, அமைதியான சுபாவம், சிறப்பாக நிமிர்ந்து நிற்கக் கூடிய நிலையை ஏற்படுத்தியதோடு கனடா, சுவிஸ், லண்டன், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் கிளைகள் உருவாக அரும்பாடுபட்டு அவர்கள் மூலம் நிதியைத் திரட்டிக் கல்லூரிச் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்காகவும் ரூபா 15 லட்சத்துக்கு மேல் நிலையான வைப்பிலிட்டு அவற்றின் மூலம் பெறுகின்ற வட்டின்ய மேற்படி விடயங்களுக்குப் பயன்படுத்தினார். இவற்றை விட வறுமைக்கோட்டின் கீழ் கல்வி பயிலும் தரம் 6 - 11 இற்கு கீழ் உள்ள மாணவர்கள் 15 பேருக்கு மாதாமாதம் ரூபா 400/= ஊக்குவிப்பு புலமைப்பரிசாகவும் தரம் 5 இல் புலமைப்பரிசில்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு ரூபா 75000/= ஐ நிலையான வைப்பின் வட்டி மூலம் புலமைப்பரிசில் திட்டமும், க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் திறமை சித்தி பெற்ற முதல் 10 மாணவர்களுக்கு ரூபா 100000/= ஐ நிலையான வைப்பிலிட்டு வட்டியின் மூலம் புலமைப்பரிசில் வழங்கல் ஆகியவை இவரால் நடைமுறைப்படுத்தி வந்த திட்டங்களாகும்.

1995 இல் ஏற்பட்ட அனர்த்தத்தின் போதும் கல்லூரிக் கட்டமைப்பைச் சிதற விடாது கட்டிக்காத்த பணியை எவராலும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது. கண்ணிவெடிகளும், மிதிவெடிகளும் நிறைந்திருந்த விளையாட்டு மைதானத்தை மாணவர்களின் நலன் கருதி புனரமைத்தும், ஷெல் வீச்சுக்களால் சிதறிக் கிடந்த ஆரம்ப பாடசாலையை பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன் புனரமைத்தும், மாணவர்கள் கல்வியில் தடையாக இருந்த இடப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்து மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் எந்நேரமும் அன்புடன் பழகும் இயல்பும் கொண்டு 116 ஆண்டுகள் கடந்த எமது கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் தற்போதைய உச்ச வளர்ச்சிக்குப் பணியாற்றிய அதிபர் திரு.கி. மகேந்திரராசா அவர்களது புனித பணியினைப் பாராட்டுவதுடன் அவருக்கு உடல் ஆரோக்கியத்தையும் மன உறுதியையும் இறைவன் அருள வேண்டுமென ஆசிவேண்டி நிற்பதோடு இவர் தனது ஓய்வுக் காலத்தில் சீருடனும் சிறப்புடனும் நீண்ட காலம் வாழ உளமார வாழ்த்துகின்றேன்.

ம.பத்மநாதன்
ஓய்வு பெற்ற பிரதி அதிபர், அருணோதயாக் கல்லூரி.

### ஏழைப்பிள்ளைகளின் கல்வியில் அக்கறை கொண்டவர்

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி யில் கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற அதிபர் கி.மகேந்திரராசா அவர்களின் சேவை இக் கிராமத்திற்கும், இப் பாடசாலைக்கும் அளப்பரியது. இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தவர். தன்னலம் அற்றவர். ஏழை மாணவர்களுக்கு அடுத்தவர்களுக்குத் தெரியாமல் தனது சொந்தப் பணத்தை வழங்குபவர்.

இப் பாடசாலையின் அபிவிருத்தி சம்பந்தமாக யார் யாரிடம் உதவிகளைப் பெறமுடியுமோ அவர்களிடம், எந்நேரத்திலும் எம்முடன் சேர்ந்து பல தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய முறையில் வெளி நாட்டில் வாழ்கின்ற பழைய மாணவர்களிடம் தொடர்பு கொண்டு நிதிகளைப் பெற்று வங்கிக்ளில் நிரந்தர வைப்பில் இடப்பட்டது மட்டுமன்றி அவர்களின் உதவி மூலம் பாடசாலைக் கென பல காணிகளைப் பெற்றுத்தந் துள்ளார்.

திணைக்களத்தின் உதவியைப் பெற்று பல புதிய கட்டடங்களைக் கட்டு வித்துள்ளார். வெளிநாட்டு நிறுவனங்களின் உதவி மூலம் பாடசாலையின் மதில்சுவர்கள், நவீன வசதி கொண்ட மலசல கூடங்களை அமைத்தது மட்டுமன்றி பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் மண் இட்டு, புல் நடுவித்து, சீராக்கி செப்பனிட்டார். இவரது அயராத முயற்சியால் பல மாணவர்கள் உயர்தரப் பரீட்சையில் சித்தி எய்தி பல்கலைக்கழகம் சென்றனர். மாணவர்கள் நாடகத்துறை, விளையாட்டுத்துறை யிலும் மாவட்ட மட்டம் வரை போட்டி களில் பங்குபற்றி பரிசில்களைப் பெற்று இன்று தேசிய மட்டம்வரை போட்டிகளில் சென்று பரிசில்களைப் பெற்றுள்ளனர்.

அதிபர் அவர்கள் இக்கிராம மக்களுடன் நல்ல ஈடுபாடுடையவர். பாடசாலையின் அபிவிருத்தி மட்டுமன்றி அருகில் உள்ள அளவெட்டி அரசினர் வைத்தியசாலையினதும், தபாற் கந்தோரினதும் அபிவிருத்தி கருதி வெளிநாட்டில் உள்ளவர்களின் உதவிகளைப் பெற்றுக் காணிகளை வாங்குவதற்கும், கட்டடங்களை அமைப்பதற்கும் எம்முடன் நின்று பேருதவி புரிந்தவர். அவர் எம் மக்களுக்கும், எமது கிராமத்திற்கும் செய்த பேருதவிகளை எம்மால் மறுக்கவோ, மறக்கவோ முடியாது. அவர் அவரது நோயின் காரணமாக சேவையைத் தொடர முடியாமையால் அவரது சேவைக்கு எமது கிராம மக்கள் என்றென்றும் கடமைப் பட்டவர்கள் என்பதைத் தெரியப்படுத்தி அவர் மேன்மேலும் சீரும் சிறப்பும் பெற்று நலமாக வாழ எல்லாம் வல்ல விக்கினங் கள் தீர்த்திடும் விக்னேஸ் வரப் பெருமான் அருள்புரிவாராக.

சி.கந்தசாமி,
முன்னாள் செயலாளர், அருணோதயாக் கல்லூரி அபிவிருத்திச் சங்கம்,
முன்னாள் உப செயலாளர், அருணோதயாக் கல்லூரி பழைய மாணவர்சங்கம்,
அளவெட்டி அரசினர் வைத்தியசாலை நலன்புரிச் சங்கப் பொருளாளர்.

### இடப் பெயர்வு ஏற்பட்டாலும் மாணவர்களின் கல்வி பாதிப்பு அடையாமல் பாதுகாத்தவர்


அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயலாற்றிய எமது மதிப்பார்ந்த அதிபர் திருவாளர் கி.மகேந்திரராசா அவர்களின் சேவையினைப் பாராட்டி எடுக்கப்படும் பாராட்டு விழாவுக்கு வாழ்த்துச் செய்தியை எழுதுவதில் மகிழ்வடைகின்றேன்.

எமது பாடசாலையில் நீண்ட பல வருடங்களாகக் கடமையாற்றிய அதிபர் அவர்கள் பாடசாலையின் வளர்ச்சியுடன் கூடியிருந்து வளர்த்தெடுத்த பெருமைக்குரியவர்.

அவரது பதவிக்காலம்தில் பாடசாலை முற்றான இடப்பெயர்வுகளைச் சந்தித்த போதிலும் மாணவர்களின் கல்வி எக்காரணம் கொண்டும் பாதிப்படையக்கூடாது என்பதைக் கருதி, சென்ற இடமெல்லாம் பாடசாலையை இயங்க வைத்ததுடன் மீண்டும் சொந்த இடத்தில் சேர்க்கத் துணை நின்றவர்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சியே தன் சேவையென்று கருதி சேவையாற்றி இளைப்பாறிய அதிபர் அவர்களின் பிற்காலம் சீரும், சிறப்புமாக அமைய வேண்டுமென்று அளவெட்டி மக்களுடன் சேர்ந்து நானும் வாழ்த்துகின்றேன் வாழ்க வளமுடன்.

ப.உதயகுமார்,
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி.



அதிபர்
## திரு.கி.மகே

சேவை விவ
கி.மகேந்திரராசா - S.
06.09.1971 முதல்
01.01.1982 - 31.03.1984 அருணோதயா
01.04.1984 - 31.05.1989 அருணோதயா
01.06.1989 - 30.09.1997 அருணோத
01.10.1997 - 30.06.2007 அருணோத
01.07.2007இல் சே

### தோளோடு தோ

அருணோதயாக் கல்லூரியின் முன்னாள் அதி
அதிகாரியாக பதவி உயர்வு பெற்றுச் செல்ல, யான்
அக்காலப் பகுதியில் திரு.கி.மகேந்திரராசா பிரதி அ
பதவிக் காலத்திலும் அவரே தொடர்ந்தும் அப்பதவின

அருணோதயாக் கல்லூரியின் அமைவிடம், அதன்
பற்றிய பூரணமான அறிவினைக்கொண்டு இருந்தார். கற்
பாடுநிதி, பா.அ.ச.ப.மா.ச, கல்லூரிச்சமூக நிகழ்வுகள் என்பன

மாணவர் - ஆசிரியர் நலனோம்பு விடயங்களில் மு
விரும்பிகள் பழைய மாணவர்களின் நன்மதிப்பை
தினருடன் நல்லுறவைப் பேணி வளர்த்தவர்.

கல்லூரி நூற்றாண்டு விழாவின் மலர் வெளியீடு, ப
நிகழ்வுகளில் முன்னின்று உழைத்தவர்.

கல்விப் பெறுபேற்றினை உயர்வடையச் செய்
அவர் மனதில் என்றும் உண்டு. இடப்பெயர்வுகள் பல
பெயரை தன்னகத்தே கொண்டு நிலைத்து நிற்க அ
வடக்கின் பிரபல்யமிக்க கல்லூரிகளில் ஒன்றாக மி

குடும்பப் பொறுப்பை விட, கல்லூரிப் பொறுப்பை
வாழ குடும்பம் வாழும் என்ற உயரிய எண்ணம் கொ

உண்மை, நேர்மை, அன்பு, இரக்கம், பணிவு, மனி
பண்புகளை அவரிடம் கண்டேன். நல்லதொரு வலக்க
என் நெஞ்சில் நிறைந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ணோதயாக் கல்லூரி
## ...சாவின் சேவையைக் கௌரவிக்கு முகமாக
## ...சங்கத்தினரால் வழங்கப்படும்
# ...ச் சிறப்பிதழ்



அதிபர்
## ...கேந்திரராசா

...வை விவரம்
...ராசா - S.L.P.S. - 1 அதிபர்
...1971 முதல் நியமனம்
...ருணோதயாக் கல்லூரியில் ஆசிரியர் சேவை
...ருணோதயாக் கல்லூரியில் பகுதித் தலைவர்
... அருணோதயாக் கல்லூரியில் பிரதி அதிபர்
... அருணோதயாக் கல்லூரியில் அதிபர் பதவி
...007இல் சேவை ஒய்வு

## ...தோள் நின்றவர்

...ன்னாள் அதிபர் திரு.ந.சிவபாதம் கோட்டக் கல்வி
...செல்ல, யான் அதிபர் பதவியைப் பொறுப்பேற்றேன்.
...ாசா பிரதி அதிபராகக் கடமை புரிந்து வந்தார். எனது
...ம் அப்பதவியை அலங்கரித்தார். பின்பு அதிபரானார்.
...விடம், அதன் வரலாறு, கல்லூரியின் வளர்ச்சி என்பன
... இருந்தார். கற்றல், கற்பித்தல் இணைபாடவிதானச் செயற்
...ழ்வுகள் என்பனவற்றில் அதீத அக்கறையுடன் பணிபுரிந்தவர்.
...யங்களில் முன்னின்று உழைத்தவர். பெற்றோர், நலன்
... நன்மதிப்பைப் பெற்றவர். கல்வித் திணைக்களத்
...தவர்.
... வெளியீடு, பரிசளிப்பு, மரதன் ஓட்டம், கலை, கலாசார
...
...டயச் செய்ய வேண்டுமென்ற உயரிய குறிக்கோள்
...பயர்வுகள் பல கண்ட இக்கல்லூரி தொடர்ந்தும் அதன்
...லத்து நிற்க அரும்பாடுபட்ட அறிவுச் செம்மல். வலி -
... ஒன்றாக மிளிர அயராது பாடுபட்டவர்.
...ப் பொறுப்பை பெரிதென மதித்து வாழ்ந்தவர். கல்லூரி
...ண்ணம் கொண்டவர். இரண்டறக் கலந்தவர்.
..., பணிவு, மனிதநேயம், நேரம் தவறாமை போன்ற நல்ல
...தொரு வலக்கரமாக இணைத்துச் செயற்பட்டவர். அவர்

வாழ்க வளமுடன், நல்லாசிகள் பல
அ.சிறிக்குமாரன்.

## கல்லூரி அன்னைக்கு போரினால் ஏற்பட்ட உடல், உள காயங்களை மருந் திட்டுக் குணமாக்கியவர்

எங்கள் அருணோதயாக் கல்லூரித் தாயின் வரலாற்றில் மறக்க முடியாத என்றும் நினைக்கத்தக்க அதிபராக நிமிர்ந்து நிற்பவர் திரு.கி.மகேந்திரராசா எம் கல்லூரித் தாய் இடர் சுமந்த வேளைகளில் துணையாய் நின்றும் இடப்பெயர்வின் போது இயங்க இடமின்றி தவித்தபோது இராமநாதன் கல்லூரியில் இயக்கியும் மீண்டும் அளவெட்டி திரும்பியபோது கல்லூரியை பௌதிக வளங்களில் நிறைவான நிலைக்கு இட்டுச்செல்ல எடுத்த முயற்சிகளும் எமது பழைய மாணவர்கள் என்றும் மறக்காத நினைவுகளாகும். பாரபட்சமின்றி பலரையும் பலதையும் பாதித்த போர் எமது கல்லூரி அன்னையின் உடல்களிலும் காயங்களை ஏற்படுத்தியபோது அவற்றுக்கு மருந் திட்டுக் குணமாக்கிய பெருமை இவரையே சாரும். இன்று தேசியச் சாதனைகளின் களமாக விளங்கும் எமது கல்லூரி மைதானம் அன்று மிதிவெடிகள் நிரம்பிய உரிய தரப்புக்களுடன் தொடர்பு கொண்டு மதிவெடிகளை அகற்றி எமது மாணவர்களுக்கு மைதானத்தை பாவனைக்கு விட அதிபர் மகேந்திரராசா சந்தித்த நெருக்கடிகள் நெஞ்சம் உள்ளோர் மறக்க முடியாத அர்ப்பணிப்பான சேவையின் அடையாளங்கள். வெளி நாடுகளில் உள்ள பழைய மாணவர்களுடன் தொடர்புகொண்டு கல்லூரிக்குப் பல காணிகளைக் கொள்வனவு செய்து தந்த வல்லமைத் திறளோன் எங்கள் அதிபர் மகேந்திரராசா. எல்லோருடனும் அன்பாக பழகியும் சுக துக்கங்களில் கலந்து கொண்டும் பாடசாலைகள் சமூகமயமாதலின் மையங்கள் என்பதனை மாணவர்களுக்குத் தனது செயல்களினால் விளங்க வைத்த வித்தகர் அவர். எமது கல்லூரியில் ஆசிரியராக, பிரதி அதிபராக கடமையாற்றிய இவர் அதிபராக நீண்ட காலம் கடமை புரிந்த ஒருவராகவும் எமது அருணோதயாத் தாயின் நினைவுச் சுவடுகளில் பதியப்பட்டுள்ளார். இவரது பணிகளின் பயனுறுதித் தன்மையை உணர்ந்துகொண்ட எமது பழைய மாணவர் சங்கம் கடந்த வருடம் இவரது பெயரினை கல்லூரியின் புதிய மண்டபம் ஒன்றுக்கு சூட்டி இருந்ததுடன் பத்திரிகை வாயிலாக ஒரு வாழ்த்து மடலை வெளியிட்டும், கௌரவப்படுத்தியிருந்தது. இன்று மீளவும் ஒரு தடவை இவரது பணிகளை நினைவுகூரும் இந்த வேளையில் இவ் வாழ்த்துச் செய்தியினூடாக எமது அதிபரை வாழ்த்தக் கிடைத்த சந்தர்ப்பத்துக்கு நன்றி கூறுவதுடன், அவர் இன்னும் பல ஆண்டுகள் மகிழ்வாக வாழவும் எல்லாம் வல்ல இறையருளை வேண்டுகின்றோம்.

திரு.பா.பிரதீபன்,
செயலாளர், பழைய மாணவர் சங்கம், அருணோதயாக் கல்லூரி.

## நவீன அருணோதயாவுக்கு அத்திபாரம் இட்டவர்

அருணோதயாக் கல்லூரியின் அதிபராக 1997 ஆம் ஆண்டுமுதல் 2007 ஆம் ஆண்டுவரை கடமையாற்றியவர் திரு.கி.மகேந்திரராசா அவர்கள். துரதிஷ்ட வசமாக அவருடைய காலம் முழுவதும் கல்லூரி போர்ச் சூழலில் சிக்கித் தவித்தது. அக்காலப் பகுதியில் கல்லூரியைச் சிறப்புற நடத் முடியாத சூழ்நிலையே இருந்தது. எனினும் அதிபரவர்கள் கல்லூரியை முன்னேற்றப் பாதையிற் கொண்டுவர அரும்பாடுபட்டும் பலன் பெரிதாக நிகழமுடியாத சூழ்நிலையே காணப்பட்டது. ஆனால் அவரிட்ட அத்திவாரத்தின் அறுவடை இன்றுள்ள ஆசிரியர்களுக்குக் கிடைத்துள்ளது. கல்லூரி இன்று தேசிய மட்டப் போட்டிகளில் வியத்தக்க சாதனைகளைப் படைத்துள்ளதென்றால் அதற்குரிய ஒரு பங்கு முன்னாள் அதிபரான அவருக்கும் உண்டென்று கூறுவதில் தவறில்லை.

கல்லூரியை இடம்பெயர்ந்த காலத்தில் கட்டிக் காத்தபெருமையிற் பெரும்பங்கு அதிபர் மகேந்திரராசாவுக்குண்டு. புலம்பெயர்ந்த அருணோதயக் கல்லூரிப் பழைய மாணவர்களின் உதவி கொண்டு கல்லூரிக்குக் காணி களை வாங்குவதிலும் கட்டடங்களை அமைப்பதிலும் அவர் காட்டிய ஆர்வமும், சாதனையும் நினைவு கூரத்தக்கவை. கனடாவில் வாழ்ந்த புலம்பெயர்ந்த மக்களாகிய கல்லூரியின் பழைய மாணவர் அருணோதயக் கல்லூரி பற்றிய ஒரு சிறந்த மலரை வெளியிட அதிபர் என்ற முறையில் அவர் ஆற்றிய சேவை என்றென்றும் நினைவு கூறத்தக்கது. அந்த மலர் வெளியீடும் அதிபர் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றதைக் கல்லூரி யுடன் தொடர்புடையோர் நன்கறிவர்.

இன்று அதிபராக இருக்கும் என்னை இக் கல்லூரிக்கு வரச்செய்ய ஆரம்ப ஊக்குவிப்புத் தந்து என்னை இணங்க வைத்த பெருமையும் அவருக்கே உரியதென்பதைப் பலர் அறியாதிருக் கலாம். உப அதிபராக வருமாறு கேட்டுக் கொண்ட அவர் தமது பதவி விலகல் மூலம் அதிபராக வர வழிகாட்டியவரும் அவரேயாவார்.

வலயக் கல்விப் பணிப்பாளர், அரச அதிபர் எமது பழைய மாணவன் திரு.க. சுந்தரேஸ்வரன் ஆகியோரின் உதவியினால் நிகொட் நிறுவனம் ஒரு மாடிக் கட்டடத்தைக் கட்டிக்கொடுத்துள்ளது. அக்கட்டடத்துக்கு அதிபரின் சேவையை கௌரவிக்கும் முகமாக அவரது பெயர் பொறிக் கப்பட்டுள்ளது. கல்வியாளரும் சிறந்த எழுத்தாளருமாகிய மனைவியும், பொறியியலாளராகிய மகனும் கொண்ட அவர் குடும்பம் பேரோடும், புகழோடும் வாழ இறைவன் துணைபுரிவானாக.

N.Ketheeswaran, Principal
J/ Arunodaya college, Alaveddy, Sri Lanka.

## பண்புள்ள அதிபர் மகேந்திரராசா

1984 ஆம் ஆண்டு முதன்முதலாக அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் ஒரு ஆசிரியராக அவரைச் சந்தித்தேன். அன்று முதல் இன்றுவரை அவரது நட்பு தொடர்ந்து கொண்டே செல்கின்றது. 1982 முதல் 2007 வரை 25 வருடங்களாக அக்கல்லூரியில் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராகப் பணியாற்றி, மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், பாடசாலையின் பௌதீக வளர்ச்சிக்கும் அயராதுபாடுபட்டார். முன்னாள் அதிபர்களால் கட்டி வளர்க்கப்பட்ட கல்லூரியை, தானும் நல்லமுறையில் பேணிவளர்க்க வேண்டும் என்ற உன்னத நோக்குடன் செயற்பட்டார். போர்ச் சூழலினால் சின்னாபின்னமாகிக் கிடந்த அருணோதயாவை, பூஞ்சோலையாக மாற்றிய பெருமை அவரையே சாரும். அன்பும், பண்பும் நிறைந்த அவருடைய வாழ்க்கை நீண்ட ஆயுள் பெற்று வாழ கும்பழாவளை பிள்ளையார் அருள்புரிவாராக.

கதிர்த்தியமைந்தம்
பழையவன் அருணோதயாக் கல்லூரி
[ஆசிரியர்,பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி]

## அருணோதயா சமூகத்தால் மறக்கப்படாத அதிபர்

அருணோதயாக் கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பங்காற்றிய அதிபர்களின் வரிசையில் கல்லூரி சமூகத்தால் மறக்கப்பட முடியாத அதிபராகத் திகழ்ந்தவர் திரு.கி.மகேந்திரராசா அவர்கள். அருணோதயாவின் பெயர் துலங்க, ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக இவர் அரும்பணியாற்றியவர். இடர்மிகுந்த காலங்களில் அருணோதயாவின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து துணிச்சலுடன் பணியாற்றிய ஒருவராக இவர் விளங்குகிறார். அனைவரோடும் அன்பாகவும் இன்முகத்தவரும் பழகி தனது சேவையினின்று ஓய்வு பெற்றாலும், சமூகப் பணியாளர் பல செய்தி நலமோடு பலகாலம் வாழ வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு.இ.பிரதாபன், தலைவர், நலன்புரி சங்கம், அருணோதயாக் கல்லூரி.

## பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய சேவை

தாங்கள் எமது கல்லூரியில் 25 வருட காலம் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக இருந்து எமது கல்லூரியையும், மாணவர்களையும் நேசித்து அவர்களது உயர்வுக்காக அரும்பாடுபட்டவர் என்பதை நினைவு கூர்ந்து கௌரவித்துப் பாராட்டும் வைபவமாக இவ்விழாவை எமது சங்கம் ஒழுங்குசெய்துள்ளது. நீங்கள் எமது கல்லூரிக்கு ஆற்றிய அரும் பணிகளைப் பற்றி உங்களுடன் சேவை செய்த எமது கல்லூரி ஆசிரியர்கள் மட்டுமல்லாது எமது மாவட்டத்தில் உள்ள ஏனைய அதிபர்கள் கூறுவதைக் கேட்டு பெருமை அடைகின்றோம். முக்கியமாக எமது கல்லூரி எமது நாட்டில் நிலவிய நிலையற்ற சூழ்நிலையால் இடம் பெயர்ந்து பிற இடங்களில் இயங்கிய காலங்களில் எமது கல்லூரி மாணவர்களைச் சிதறிச் செல்லவிடாது ஒருங்கிணைத்து வைத்திருந்து, பின் கல்லூரி தனது இடத்துக்குத் திரும்பிய காலத்தில், கல்லூரியின் தேவைகளைப் பூர்த்தி செய்து இயங்கவைக்க எடுத்த சிரமங்களையும், கஷ்டங்களையும் நாம் நன்கு அறிவோம். அக்காலத்தில் நீங்கள் எம்முடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகளால் நாம், எமது கல்லூரிக்கும் ஊருக்கும் பல உதவிகளைச் செய்ய உந்துதலாக இருந்த பெருமை உங்களையே சேரும். அன்று உங்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கட்டடத் தொகுதிகள் இன்று கட்டி முடிக்கப்பட்டு, எமது கல்லூரிக்கு மெருகூட்டிக் கொண்டிருப்பதும், நீங்கள் ஆரம்பித்து வைத்த புலமைப் பரிசில் திட்டம், மேலும் பலரின் பங்களிப்புடன் விரிவுபட்டு வருகின்றதென்பதும் உங்களின் அன்றைய முன்னோக்குடன் கூடிய செயற்பாடுகளின் பிரதிபலிப்பு எனலாம். இன்று எமது கல்லூரி மாணவர், எமது கல்லூரிக்கு பெருமை தேடிக் கொண்டி ருக்கிறார்கள் என்பதும் நீங்கள் அன்று திட்டச்செயற்பாடுகளின் பெறுபேறுகள் எனவும் கூறலாம். உங்களது அன்றைய செயற்பாடுகளுக்கெல்லாம் உங்களுக்கு உறுதுணையாக இருந்து உதவிய உப அதிபர் திரு.பத்நாதன் அவர்களையும் இவ் விழாவில் நினைவு கூர்ந்து, நன்றி கூறுவது எமது சங்கத்தின் கடமையாகும். அவர் தமது ஓய்வுபெற்ற பல வருடங்களையே எமது கல்லூரியின் நலனுக்காகச் செலவிட்டார் என்பது போற்றப்பட வேண்டியதொன்றாகும்.

இவையெல்லாவற்றிற்கும் மகுடம் சூட்டுவதாக அமைவது என்னவென்றால் தாங்களோ, திரு.பத்மநாதன் அவர்களோ எமது ஊரைச் சார்ந்தவர்கள் அல்ல. ஆசிரியர்களாக எமது ஊருக்கு அறிமுகமான நீங்கள் எமது ஊருடன் ஒன்றுகலந்து எமது ஊர் மக்களது நன்மதிப்பை பெற்றதுமல்லாமல் அருணோதயாக் கல்லூரியில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவர்களாகிவிட்டீர்கள் என்பதும் உண்மை. 'உண்மை என்றும் அழிவதில்லை, அழிக்கப்பட முடியாதொன்றும் கூட உங்களினதும், உங்களுடைய குடும் பத்தைச் சார்ந்த சகலரினதும் எதிர்காலம், சுகமாகவும், சந்தோஷமாகவும், நிம்மதியாகவும் அமைய உதவவேண்டுமென அருணோதயாக் கல்லூரியில் அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும், நரசிம்ம வைரவரை, கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் அருணோதயாக் கல்லூரி பழைய மாணவர்களும், நலம் விரும்பிகளும் பிரார்த்திக்கின்றோம்.

கந்தசாமி (சி.கந்தசாமி) தலைவர், பழைய மாணவர் சங்கம் - கனடா.

**அளவெட்டி அருணோதயாக் கல்லூரி முன்னாள் அதிபர்**
திரு.கி.மகேந்திரராசா அவர்களுக்கு
கனடா பழைய மாணவர் சங்கத்தினர் வழங்கும் சேவை நலன் பாராட்டு விழா
அழைப்பு.
இடம்: தமிழ்ச்சங்கம், சங்கரப்பிள்ளை மண்டபம் 57 ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06
காலம்: 13.06.2010 ஞாயிற்றுக்கிழமை, மாலை 5 மணி
தலைமை: திரு.ந.சிவபாதம் (S.L.E.A.S)
(முன்னாள் அதிபர் - அருணோதயாக் கல்லூரி,
முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெல்லிப்பழை, உடுவில்)
தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
கனடா பழைய மாணவர் சங்கம் சார்பில்
திரு.க.சிதம்பரகுமாரன், திரு.க.நித்தியானந்தன் (விழாக்குழுவினர்)

நிகழ்வு ஒழுங்கு
5 மணி - மங்கள விளக்கேற்றல் திரு.ந.சிவபாதன் (முன்னாள் அதிபர்)
திரு.ஆ.சிறிக்குமாரன் (முன்னாள் அதிபர் யா/ இந்துக் கல்லூரி)
திரு.பொ.கோபிகிருஷ்ணன் (முகாமையாளர் H.N.B)
திருமதி சிவமலர் புனிதரன், திருமதி ப.சிவபாதசுந்தரம்
திருமதி மாலதி சிதம்பரகுமாரன் (நிர்வாக உத்தியோகத்தர் சிமெந்துக் கூட்டுத்தாபனம்)
திரு. வேதநாயகன் (S.L.A.S, அரசாங்க அதிபர்)
திரு. ப.விக்கினராசா (பழைய மாணவன்)
திரு. க.ஜெயச்சந்திரன் (பழைய மாணவன்)

நிகழ்வு ஒழுங்கு
5.15 மணி - பாடசாலைக்கீதம் திருமதி சிவசோதி தங்கரத்தினம்
(ஆசிரியர், தம்பைக்குளம் மகா வித்தியாலயம்)
5.20 மணி - வரவேற்புரை திருமதி கோகிலா கிறிஸ்டி
(ஆசிரியர், திருக்குடும்ப கன்னியர் மடம் ம.வி.பம்பலப்பிட்டி)
5.30 மணி - ஆசியுரை பேராசிரியர் முனைவர் ஜெயராஜா அவர்கள்
(உபதலைவர் கொழும்பு தமிழ்ச் சங்கம்)
5.40 மணி - வாழ்த்துரை கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை
(முன்னாள் அதிபர் சங்கத் தலைவர், தெல்லிப்பழை)
5.50 மணி - தலைமையுரை, 5.55 மணி - பாராட்டுரை திருமதி மாலதி சிதம்பரசிவன்,
திரு. அ.சிறிக்குமாரன் (முன்னாள் அதிபர்)

நிகழ்வு ஒழுங்கு
திருமதி இ.கெங்காதரன் (முன்னாள் ஆசிரியை, மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)
கனடா தலைவரின் வாழ்த்துச்செய்தி
திரு. ரவிகுலன் பிரணவா (வாசிப்பவர்)
7 மணி - கௌரவிப்பு, 7.10 மணி- ஏற்புரை
7.30 மணி - நன்றியுரை திரு.க.வித்தியானந்தன்
(ஆசிரியர், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி)
7.40 மணி - தமிழ் வாழ்த்து
நிகழ்ச்சித் தொகுப்பாளர் திரு. க. சந்திரகுமாரன்
(கணக்காளர் தேச கட்டுமாண அமைச்சு)
7.45 மணி - இராப்போசனம்
சகலரும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்காய் படைக்கிறோம் நேசப்பூச்சரம்!

யாழ்ப்பாணத்தில்

# மக்கள்களரி நாடக விழா

செம்மணி வீதி, நல்லூர்

**C.C.T.M பாடசாலை மைதானத்தில்**

அமைக்கப்பட்டுள்ள மக்கள்களரி நகரும் நாடக அரங்கில்

**ஜுன் 21ஆம் திகதி முதல்**
**ஜுலை 02 ஆம் திகதி வரை தினமும்**

பாடசாலை மாணவர்களுக்காக மு.ப 9.00 மணிக்கு
ஏனையவர்களுக்கு பி.ப 6.00 மணிக்கு

**மக்கள்களரி நாடகக் குழு அரங்கேற்றும்**
விருதுகள் வென்ற பல்வேறு தமிழ் நாடகப்படைப்புகள்

**சரண்தாஸ்**
**செக்கு**
**மாயப்பட்டாடை மற்றும் எருக்கலம் பூ**
**திருடன் வந்தான் மற்றும் தேவலோகப்பயணம்**
**மிருச்சக்கட்டிகம்**
நெறியாள்கை - பராக்கிரம நிரியெல்ல

**அபிஞ்ஞான சகுந்தலம்**
நெறியாள்கை — நவதர்ஷினி கருணாகரன்

**தழுவ தாளம்**
ரவிபந்து வித்யாபதி மற்றும் கோபாலகிருஷ்ணன் சத்தியன்
வடக்கு — தெற்கு தாளவாத்திய சிம்பனி

யாழ்ப்பாண வித்துவான்களின் கலை நிகழ்வுகளும்
திருமறைக் கலா மன்றம் வழங்கும்
**அற்றைத் திங்கள்**
சவத்து உருவ நாடகம்

**தொடர்புகளுக்கு - 0726111145**

---

gtz Partner for the Future Worldwide

## SRI LANKAN - GERMAN DEVELOPMENT COOPERATION

# MICROFINANCE OFFICER

The German Technical Cooperation (GTZ) assisted Promotion of the Microfinance Sector (**ProMiS**) works in conjunction with the Ministry of Finance and Planning (**MOFP**) to provide support to Microfinance Institutions and consultancy providers to reach marginalized sections of the population and improve their quality of services.

GTZ seeks to recruit a suitably qualified person to work in coordination with the Microfinance Specialist in the implementation and monitoring of the programme.

**Tasks:**

- Supervise and coordinate with the project's partner organizations for the effective and timely implementation of the programme
- Keep close contact and coordinate with government officials, authorities and other relevant key players in the programme area
- Support the implementation of various measures / activities related to the project's core programme
- Facilitate collection and compilation of necessary data needed for the programme
- Participate and represent the project at meetings and document results for follow up
- Assist in knowledge and document management.

**Selection Criteria:**

- University degree with specialization in Economics, Banking, Management or Development Studies
- A proven sound understanding of microfinance concepts, Microfinance Institutions and livelihood development programmes
- 2+ years experience in a similar position: experience of working collaboratively
- Demonstrated ability to devise and manage a work programme to achieve multiple objectives, Proactive person with willingness to support further improvement of the programme and also willingness to travel extensively
- Fluency in English and Tamil verbally and in writing; excellent report writing and communication skills (knowledge of Sinhala advantageous)
- Sound computer knowledge especially in MS Office, Internet & e-mail.

Duty station will be Jaffna. Only short listed candidates will be contacted.

Interested candidates should submit a comprehensive CV and a letter of motivation along with contact details marked **Application for the post of MF Officer** addressed to the Human Resource Unit, GTZ-Office, 6, JawatteAvenue, Colombo 5, or e-mail to gtz-hrsrilanka@gtz.de no later than 21 June 2010.

---

தலைநகரில் தலைசிறந்த ஸ்தாபனம்....

# குமரன் சில்க்ஸ்

ஆண்களுக்கான...
★ சேட்டிங்
★ சூட்டிங் ★ கோட்சூட்
★ குருத்தா ★ டெனிம்
★ ரி.சேட்ஸ்
★ சேட்வகைகள்

பெண்களுக்கான...
★ திருமண சாறிவகைகள்
★ சல்வார் வகைகள்
★ திருமணப் பட்டுச்சாறிகள், புடைவைகள்
★ சீக்குன்ஸ் சாறிவகைகள்
★ கொட்டன் சாறி வகைகள்
★ பிறின்ட் சாறிவகைகள்
★ சல்வார் வகைகள் ★சோலி கிட்

சிறுவர்களுக்கான..
நவீன டிசைன்களில்
உடுபுடைவைகள்

இவை அனைத்தையும்
எண்ணம்போல் தெரிவுசெய்து
மகிழ்வுடன் அள்ளிச்செல்ல



K.S
**குமரன் சில்க்ஸ்**
இல.291,
பிரதான வீதி,
கொழும்பு-11.

T.P:
0114717574
0112441701
Fax:
0112441702

---

கொழும்பைத் தளமாகக் கொண்ட
டி.ஜி.பசன் காமென்றிற்கு

# முகவர்கள் தேவை

சர்வதேச தரத்தில் அமைந்துள்ள எமது உற்பத்திப் பொருள்களை கீழ்வரும் பிரதேசங்களில் சந்தைப்படுத்த முகவர்கள் தேவை.

1.யாழ்ப்பாணம்
2.மன்னார்
3.வவுனியா

**முகவர்களாக விரும்புபவர்கள்**

★ நம்பிக்கையும் நாணயமும் உடையவர்களாக இருக்கவேண்டும்.
★ ரூபா பதினைந்து இலட்சம் (1,500,000/-) பிணைப் பணமாக செலுத்தவேண்டும்.
★ களஞ்சிய வசதிகொண்டிருத்தல் வேண்டும்.
★ வாகன வசதி உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
★ தெரிவுசெய்யப்படும் முகவர்களுக்கு இரண்டு மாதக் கடன் வசதி கொடுக்கப்படும்.
★ நிறுவனத்தின் விற்பனைப் பிரதிநிதி உங்களுக்கு சேவையினை வழங்குவார்.

**விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:**

**New DG Fashion Garment (Pvt) Ltd**
*Ashokarama Rd,*
*Kondeniya, Dickwella, Srilanka.*

தொடர்பு : 041 2255959
தொலைநகல் : 041 2255955
மொபைல் : 0772683344 (சந்தன)


*E-mail : info@newdgfashions.com*
*Web:www.newdgfashions.com*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 117




அனுப்புபவர் பெயர்:............................................................

விலாசம்:............................................................

............................................................

கையொப்பம்:............................................................

### இடமிருந்து வலம்

1. ஆந்திராவிலுள்ள பிரபல இந்துத் தலம். இங்கு செல்லும் பக்தர்கள் தமது தலை முடியை காணிக்கையாக்குவது வழக்கம்.
5. சாதுவான வீட்டு மிருகம்.
7. ஒருவரைச் சிறை வைப்பதற்காகப் பிடிப்பது.
8. இலட்சுமியின் ஒரு பெயர்.
9. மெல்லிய உலோகத் தட்டு.
10. கிணற்றில் நீர் அள்ள இது தேவை.
11. புதிதாக வரும் செய்தி/ தகவல்.
13. அழகிய காட்டு மிருகம்.
14. விவாதம்.
15. தாண்டு.
17. மண்ணுக்கு முந்தியது/ பழ.
18. பிரயோசனமற்ற வாய்ப்[illegible] சசு.
20. சொந்தம்/ தன்னது.
21. ஒன்றோடு ஒன்றைச் சேர்.
22. சனக்கூட்டம்.
23. வல்லவன்/ வீரம் செறிந்தவன்.

### மேலிருந்து கீழ்

1. அதிர்ச்சியால் வருவது.
2. பூப்பு (பருவம்)
3. பத்துச் செய்யுள் கொண்ட பிரபந்தம்.
4. களவெடு.
5. கடவுள்/ சூரியன்.
6. சிறு விறகு.
9. தன்னுடையது.
12. கடன் முற்றி கடப்பாட்டை நிறைவேற்ற முடியாத நிலைமை எய்தல்.
13. உப்பரிகை.
15. உடலின் மிகச்சிறிய பகுதி/ கடலில் மிதப்பதும் கூட.
16. கதைக்குக் காதாநாயகனும் தேவை. இவனும் தேவை.
17. பாக்குத் தரும் மரம்.
18. அண்மையில் வசிப்போர்.
19. கூற.
20. நல்ல சிறந்த.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 115 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)குமுதம். (4) தாமதி. (7) மனைவி. (8) அகண்ட. (9) சாதகம். (11) சாளரம். (13) பதர். (14) பாதிமதி. (17) திளை. (18) கவன். (19) சடம். (20) சமா. (21) புதையல். (22) பதில்.

**மேலிருந்து கீழ்**

(1) குமரி. (2) முனை. (3) தவிசாளர். (4) தாகம். (5) மண். (6) திடல். (8) அகம்பாவம். (10) தர. (11) சாதனை. (12) சம. (13) பதிப்பு. (15) திண். (16) திருமால். (18) கடல். (19) சய. (20) சதி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 115 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — நிஷானா இராமச்சந்திரன், தரம் - 9, உடுவில் மகளிர் கல்லூரி, உடுவில்.

**2 ஆம் பரிசு** — ச.ஏகநாதன், மாதகல் வடக்கு, மாதகல்.

**3 ஆம் பரிசு** — ம.விஜிதா, கலட்டி, கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

**4 ஆம் பரிசு** — செல்வி இ.அருளானந்தம், தாதியர் பயிற்சிக் கல்லூரி, யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு** — செல்வி கு.நர்மிலா, முன்பள்ளி ஆசிரியை, திகரி ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.

### பாராட்டுப் பெறுவோர்

(1) பி.பகீரதி, யா/வசாவிளான் ம.ம.வித்தியாலயம், உரும்பிராய்.

(2) திருமதி R.M. தயானந்தன், 15 ஆம் கட்டை, உடுப்பிட்டி.

(3) வ.இரத்தினசிங்கம், கம்பர் மலை, வல்வெட்டித்துறை.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 117**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 23.06.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல.117 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 27.06.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

# தாய்

*(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

செம்மை நிறப் பிள்ளைத் தாழையிலே, பூத்துக் குலுங்கும் தாளம் பூக்கள்...

அந்தத் தாளம் பூக்களைப் பிடுங்கி, சுண்டல் கறிக்கு வீட்டிற்குக் கொண்டு போனாலென்ன என்ற மனத்தூண்டல்

மறுகணம்

சலிப்பு

'வீட்டிலை காய்ச்சிறதுக்கு யார் இருக்கினம்... அவளும் ஒரு மாதமோ இரண்டு மாதமோ அரைவாசி வருஷமா மயிலிட்டியிலை போய் சுகமில்லாமக் கிடக்கிறாள்... பொடிச்சி ராசுவாலை ஏலுமோ...? பாவம் குழந்தைப் பொடிச்சி...''

ராசு -

மாணிக்கம்?

அவனுக்குப் பிடித்தமான தாளம்பூ வறுவலின் மணம் நாசியைத் துளைக்கின்றது....'

இஞ்சார் நீ கள்ளுக் குடிக்கிறதெண்டா என்னாலை ஒண்டும் செய்ய ஏலாது. உழைக்கிற காசும் மிச்சமில்லாமை... உன்னைப் போல எந்த ஆம்பிளை இருக்கிறான். மாணிக்கத்தின் முணுமுணுப்பு.

அவளுக்காகக் குடிக்காமல் நேரகாலத்தோடு குடித்தாலும் வெற்றிலையைச் சப்பிக் கள்ளு நெடியின் தன்மையை மறைத்துக் கொண்டு நல்லபிள்ளையாகிறான் சின்னப்பன். இல்லையென்றால்?

சண்டை

இன்று ராசு

அவள் குழந்தை

அவளில் அவள் இல்லை. ஏதோ இருக்கும் அரிசியைப் போட்டிடித்து நாலு மிளகாயை அம்மியிலே வைத்து அரைத்து சம்பலென்ற வடிவில் கறியாக்கி அவன் அளிக்கும் அமுதம்.....

மாணிக்கம், நீயேன் சுகமில்லாமப் போனாய்....?

தாளம் பூவினைத் தீண்டப்போன அவன் கைகள் அதை தீண்டவில்லை. கருகி வெதும்பிய கத்தாழைகளோடு புழுதியாகிக் கிடந்த சாம்பல் மண் நேற்றிருந்த உடலின் இன்றைய கோலமொன்றைப் பறைசாற்றுகின்றது.

சாம்பல்?

சாம்பல் சிரிக்கும் முகம்!

பதினெட்டு வருடங்களுக்கு முன்பு சாம்பலாகிப் போன அதே முகம்.

அப்பா.... அப்பா எனக்குப் பீப்பி..... வாங்கித்தா அப்பா.... ஊத ஆசையாயிருக்கப்பா. வல்லிபுரக் கோயில் வெண் மணல் புழுதியில், தன்னிச்சையாக இன்ப வெறியிலே நாதவெள்ளம் பரவுகிறது. 'பீப்பி' ஊதிய கரங்களில் சாம்பல்.

வெளியிலே மாணிக்கம் அவளின் பாடப்படி சமையல் செய்யும் கன்னிமுயற்சி. மூத்தவள் - கனகம் - குடும்பப் பெண்ணாகிறாள்.

தீ நடுவில் தாய்ச்சி.

"அம்மா எங்கேயணை தேங்காயெண்ணை.... நான் பப்படம் பொரிக்கிறன்....'

விறாக்கியிலை முதல் தட்டிலை போத்தில் இருக்கும் பார்.

பிஞ்சுக்கரங்களின் வேலைத்துடிப்பு.

மூடியைத் திறந்து தாய்ச்சிக்குள் எண்ணையை ஊற்ற, என்ன தாய்ச்சியும் எரியக்கூடியதா? அது ஏன் தீக்குள்ளாகி உடும்பு நாக்கைப் போல் நீளவேண்டும்!

'ஐயையோ என்ரை அம்மா!'

மண்ணெண்ணை நெடி.

பாவாடையில் தீ!

தீயின் வெம்மை தணியவில்லை.

பட்டு உடல் வெந்தது.... கருகியது.... கடைசியில் உருவே அழிந்தது.

அவள் அவனின் முதல் உற்பத்தி.

'இன்று அவளிருந்தால் தாயாகியிருப்பாள்..... அப்பவே என்ன துடியாட்டம். ராசு அவளுக்கு நேர்மாறு.

அவள் சாம்பல் மண்ணிலே எத்தனையோ சாம்பல். [illegible] தாழையைப் [illegible]

தாழையிலே தலை நீட்டும் பூக்கள்? அது அவளை அணைத்த தீ நாக்குகளா?

'அப்பூ..... எணை அப்பூ'

பதினெட்டு வருடங்களாகக் கேட்க மறந்த குரல்.

''ஐயையோ என்ரை ராசு.... நீயும். நீயும்.... வேண்டாமடி குழந்தை. நீ சமைக்க வேண்டாம். வேண்டாம்.

இரண்டாவது உற்பத்தி இராசு. அவள் உடலிலும் தீயா?

இ.....ரா....சு''

தலையில் சுடலை மடத்தூண் மோதிகிறது. அவன் குப்புற விழுகிறான். வெறி மயக்கத்தில் சுடலை மடத்திலே நிம்மதியான தூக்கம்.

நித்தம் நித்தம் சின்னப்பன் இரவில், குடிசையிலே இல்லாமல் நெடுநாள். இராசுவுக்கும் அவன் உடன் பிறப்புகளுக்கும் அது பழக்கம். சின்னப்பன் இருந்தாலும் ஒரே பேத்தல்.

இராசுக்குச் சின்னஞ்சிறு வயதில் உலகம் சலிப்பாகிறது.

முன்பு என்றால் மாணிக்கம் பக்கத்திலே படுத்தால்தான்அவள் இருட்டிற்குள் நிம்மதியாகப் பயமின்றிப் படுப்பாள்.

இப்பொழுது அவள் தாய் இல்லையா?

அவளைச் சுற்றி அவள் உடன்பிறப்புக்கள். சின்னப்பன் இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன இராசுதான் அவர்களின் தாய். துன்பத்தை மறைத்துக் கொண்டு சிதைந்துபோன இளம் உள்ளத்தின் ஆற்றாமையில் அவளுக்கு மௌனமான விபரிக்க முடியாத துயர அமுக்கங்கள்......

'எணை அம்மா....... நீயேணனை எங்களை விட்டுட்டு ஆசுப்பத்திரிக்கு போனநீ.....? இஞ்சை நாங்கள் படுறபாட்டம்.....? அப்பாவும் தன்ரை பாடு.... எணை நாங்கள்.... எணை நாங்கள்.....'' பேட்டுக் கோழியின் இறக்கைக்குள் அணைந்து கொண்டு முடங்கிக் கிடக்கும் குஞ்சுக்களாக அவள் உடன் பிறப்புகளும் அவளும்.....

விடிவெள்ளி பூத்த நேரம் மக்கிய இருளில் வெறி கலைந்து எழுந்து வருகின்றான் சின்னப்பன். நிசப்தம் சிறு விளக்கின் சிறு ஒளி. அந்த ஒளியிலே அவள் இராசுவையும் மற்றக் குழந்தைகளையும் ஏறிட்டுப் பார்க்கிறான்... அந்தக் காட்சி அவன் நெஞ்சில் உவகையாகிறது..... உவகையோடு துயரமாகிறது.

என்ன மனுஷன் நான்....? சும்மா குடிச்சிட்டு இப்படி திரிஞ்சா....? என்ன மாதிரி என்ரை பிள்ளையள் வாடிட்டுதுகள்...... அவளையும் போய் கனகாலம் பார்த்து.....

கொஞ்சக் காசு கடன்பட்டு டாக்குத்தரையும் பார்த்து சொல்லிக் கில்லிப் பாப்பம்......

கவனமெடுப்பான்... நாளைக்குப் பாப்பம்.... போய்... நாளைக்கு.....'

மாணிக்கம், படுக்கையில் அவளுடைய மயக்கமான உணர்வு நிலையில் ஆஸ்பத்திரிக் கட்டடங்கள் மறைகின்றன..

முதல் வெடி

இரண்டாம் வெடி

மூன்றாம் வெடி

ஐயையோ.....

பள்ளத்தில் இருந்து மேட்டுக்கு ஏற முடியாமல் பசிக்களையிலே திராணியற்றுச் சோர்ந்து சுருண்டு விழுபவன் சின்னப்பனா......?

மரங்கள், தடிகள் கீலம் கீலமாக தூக்கியெறியப்படுகின்றன.... அதோடு செங்குருதி வெள்ளத்திலே மேட்டுப்பிரதேசத்தில்....

'இரத்தம் இரத்தமா.......?'

'என்ன? இரத்தம் போலத் தீ.....?'

'இராசுவா.....?'

'கனகமா.....?'

'இராசு... இல்லை.... கனகம்.... இல்லை.... இராசு'

பயங்கர அலறல்.

எல்லாப் படுக்கைகளும் ஒரு கணம் கிறீச்சிடுகின்றன. பார்க்கக் கூடாததை பார்க்க விரும்பாமல், கிலி கொண்டு பரபரப்பு அடைபவர்களுமாக.

அவள் படுக்கையில் இரத்தம்.

கட்டடங்களைப் பிளந்தெறியும் ஓங்காளச் சப்தம் ஆஸ்பத்திரியில் பரபரப்பு..... காற்சட்டையைச் சரிசெய்து கொண்டும் ஓடும் டாக்டர்கள்... ஊசிகளும் கையுமாக வெண் உடை மோகினிகள்.... மாணிக்கம் செத்துப் பிழைக்கிறாள். அவள் எண்ணங்கள் கனகமா?

இராசுவா.....? சின்னப்பனா....?

இதில் அவளைக் கொல்லும் கிருமிகள்....

நோயா.... எண்ணங்களா.....

எது.....அது? **********

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# னித அந்தோனியார்
# ழா - 13.06.2010





## ர் ஆலய வரலாறு (சுருக்கம்)

அடிகள் இதனை அழகான, விசாலமான ஆலயம் என்று குறிப்பிடுகிறார். மேலும் 50 ஆண்டுகள் கழிந்து ஆலயத்தை விசாலமாக்க தீர்மானித்தனர். 1906 இல் ஆலய வேலைகள் ஆரம்பமாகின. கட்டட நிபுணர்களான அருட்பணி கெளட்டியர் [Gaufier] மற்றும் அருட்பணி டெஸ்லாண்ட் [Deslande] ஆகியோரின் பங்களிப்பு இவ் ஆலயத்துக்கு முக்கியமானது. டொல்பாண்ட் அடிகள் இவ் ஆலயம் கோவா ஆலய அமைப்பை ஒத்ததாக அமைய வேண்டும் என்ற மக்களின் எதிர்பார்ப்புக்கள் மத்தியிலும் மரத்தூண்களை நிறுவாது இருமருங்கும் அகலச்சுவர்களை உயரமாக அமைத்து நவீன முறையில் கட்டடத்தை அமைத்தார். 13.10.1911 இல் முகட்டு வேலைதவிர்த்து அனைத்து வேலைகளும் நிறைவு பெற்றன. இவ்வாலயம் இரு பக்கங்களிலும் அகண்ட விறாந்தையைக் கொண்டது. விறாந்தையில் காணப்படும் வளைவுகள் றோம் கட்டட அமைப்பைக் கொண்டது.

1918 ஆம் ஆண்டு பங்குத்தந்தையாக விருந்த அருட்பணி பவுறில் அடிகள் [டெஸ்லாண்ட் அடிகளின் சகோதரர்] பெல்ஜியம் நாட்டில் இருந்து பெரிய அளவிலான சிலுவைப்பாதைப் படங் களைத் தருவித்தார். 1928 முதல் 1932 வரை இரண்டாம் முறை யாகப் பணியாற்றிய டெஸ்லான்ட் அடிகள் பீடத்தினை அழகுற அமைத்தார். 1935 முதல் 1939 வரை பணியாற்றிய அருட்பணி போல்பஸ் தியன் அடிகள் காலத்தில் கோதிக் [Gothic] கலை வடிவில் அமைந்த சிங்காசனம், ஆலயத்திற்கு மின்சாரம் வழங்கியமை, அழகான முகப்பு அமைப்பும் இடம் பெற்றன 1940 ஆம் ஆண்டு அருட் பணி அல்பிறட் குக்ரின் காலத்தில் நல்லூர் சுவாமி ஞானப்பிர கர்சர் தலைமையில் அருட்பணி வேதநாயகம், சூசை நாதர் அடிகள் துணையுடன் மகா ஞானொடுக்கம் நடத்தப்பட்டது.

1965 இல் பணியேற்ற K.B. சந்தியாப்பிள்ளை அடிகள் கம்பீரத் தோற்றமுடைய போட்டிக்கோ மண்டபத்தைக் கட்டினார். 1995இல் இடம் பெயர்ந்த மக்கள் 1996 இல் திரும்பியபோது ஆலயத்தின் பாரிய சேதங்களைக் கண்ணுற்று கலங்கினாலும் மனம் சோராது புனரமைப்புப் பணியில் ஈடுபட்டனர். புனரமைப்பின் முக்கிய பணிகள் 1997 ஏப்ரல் மாதம் ஆரம்பமானது. புனரமைப்புக்கு உள்ளூர் மக்களது கடின உழைப்பும், வெளிநாடுகளில் உள்ளவர்களின் பங்களிப்பும் மிக முக்கியமானது. புனரமைக்கப்பட்ட ஆலயத் தின் பீடப்பகுதி பளிங்குக் கற்களால் பதிக்கப்பட்டு பார்ப் பதற்கு அழகைக் கொடுக்கிறது. கிராம மக்களை இயற்கை அனர்த்தமாகிய இடியிலிருந்து காக்கும் முகமாக ஆலய முகப்பில் இடி தாங்கியும் பொருத்தப்பட்டுள்ளது. இவ் வருடம் மார்ச் 13,14 ஆம் திகதிகளில் இத்தாலியில் புனித அந்தோனியாரின் திருவுடல் அடக்கம் செய்யப்பட்ட பாதுவா நகரிலிருந்து அவரது திருப்பண்டம் [அவரது இதயத்தின் ஒரு பகுதி] இந்த ஆலயத்திற்குப் பவனியாகக் கொண்டுவரப்பட்டு மக்கள் வணக்கத்திற்காக வைக்கப்பட்டமையும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கானவர்கள் வந்து வணக்கம் செலுத்தியமையும் இவ்வாலயம் கட்டப்பட்டு 160 ஆண்டுகள் நிறைவில் ஒரு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். ★★★★★★★★★★★★★★★★★

அருட் கலாநிதி S.V.B மங்களராஜா அடிகள்.

## தூய அந்தோனியாரின் பரிந்துரை அமைதி தரட்டும்

கோடியற்புதர் எனப் பெயர்பெற்ற தூய அந்தோனியாரின் பரிந்துரையின் வல்லமை யாவரும் அறிந்ததே. மதபேதமின்றி மக்கள் ஒன்றுகூடும் திருப்பதி களாக எமது பகுதிகளில் புனித அந்தோனியார் திருப்பதிகள் அமைந்து காணப்படுகின்றன. அந்த வகையில் யாழ். நகரைப் பொறுத்தவரையில் பாஷையூர் திருப்பதி மிகவும் முக்கியமானது.



அங்கு பங்குத்தந்தையாக இருந்தபோது பதி நாடிவரும் பக்தகோடிகள் பரிந்துரை பெற்று இறையருள் கண்டுமகிழ்ந்து செல்வதைக் கண்கூடாக அனுபவித்திருக்கிறேன். ஆகவே பாஷை யூர் பதி விழாக்கோலம் கொண்டுள்ள இந்த நாள்களில் நானும் மகிழ்ந்து தூய அந்தோனியாரின் திருவிழா நல்வாழ்த்துக்களைப் பங்கு மக்களுக்கும் பக்தர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பல்வேறு விதமான ஏக்கங்களோடும் கவலைகளோடும் தூய அந்தோனியாரின் பரிந்துரை நாடிவரும் அனைவரும் இறையருளைக் கண்டடைந்து இதய அமைதியும், மகிழ்வும் பெறவேண்டும் என ஆசித்து நிற்கின்றேன். குறிப்பாகப் போரினால் பல்வேறு விதமான தாக்கங்களுக்கு உள்ளானவர்களுக்கு இறையாசியும், அமைதியும் கிட்டட்டும்.

அருட்பணி A.J.யாவிஸ்,
கிளி - முல்லை மறைக்கோட்ட முதல்வர்,
முன்னாள் பங்குத்தந்தை.

## ஆயரின் செயலரின் ஆசிச் செய்தி

கோடி அற்புதராம் தூய அந்தோனியாரின் இவ் விழாவிலே அவரை தம் பாதுகாவலராகக் கொண்டாருக்கும் பாஷையூர் பங்குத் திருச்சபையும் அக மகிழ்ந்து தம் புனிதரின் விழாவை கொண்டாடும் இந்நாளில் நானும் அவர்களுடன் இந்த மகிழ்வில் இணைவதையிட்டு அகமகிழ்கின்றேன்.



புனித வாழ்வை நோக்கி நடந்து அதனை இறைவனிடம் இருந்து பரிசாகப் பெற்ற எம் தூய அந்தோனியார் எம்மையும் தன் பாதையில் இறைவனை நோக்கி நடந்து நாமும் புனித வாழ்வை அடைய எமக்கு முன்மாதிரியாக இறைவனால் தரப்பட்டுள்ளார்.

மரணமும், மானக்கேடும், மக்களை மக்கள் பலி எடுக்கும் இக் காலத்தில் மனிதத்தை வாழ்ந்து காட்டி அதை வாழவும் அதற்கான வழிகளை தன் வார்த்தையாலும் வாழ்வாலும் மறையுரைகளாலும் காட்டியவர் எம் புனிதர். அந்தரித்து வந்தோரின் தேவைகளை கேட்டு கோடி அற்புதங்களைப் புரியும் தூய அந்தோனியாரின் பரிந்துபேசல் எம்மீதும் எம் மக்கள் மீதும் நிறைவாய் பொழிந்திட இறையருள் வேண்டுவோம்.

புனிதரின் இவ்விழா எமக்கும் எம் நாட்டுக்கும் அமைதியையும் இறை அருளையும் பெற்றுத் தரும் நாளாகவும் விழாவாகவும் சிறப்பாக தம் ஆலய பாதுகாவலரின் விழாவில் அக மகிழும் இப்பாஷையூர் பங்கு திருச்சபையைத் தொடர்ந்தும் புனிதரின் பரிந்துரை கற்று வழி நடத்த இறைவனிடம் வேண்டுவதுடன் எம் விழா வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

தூயவரின் அருளும் ஆசியும் உங்களோடு இருப்பதாக.

அருட்திரு சி.விஜின்ரஸ் அடிகள், யாழ் ஆயரின் செயலாளர்.

**இவ்வருட ஆலயப் பெருவிழா 04.06.2010 ஆரம்பமாகியது. இறுதி நாளான இன்று 13.06.2010 ஞாயிற்றுக்கிழமை புனித அந்தோனியாரின் திருச்சொருபப் பவனியை மக்கள் அனைவரும் கண்டு களித்து இறைஆசீர் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.**

**மலரமைப்பு: நந்தன், கதிர்.**

செல்வம் நகைத் தொழிலகம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்குக் குறித்த காலத்துக்குச் செய்து தரப்படும்.
12, செல். அல்ரலிஸ், பாஷையூர் வீதி.

தேவராசா ரெம்சி
பல்பொருள் வாணிபம்
2ஆம் குறுக்குத் தெரு, பாஷையூர், யாழ்ப்பாணம்.

பிருந்தா ஜுவெல்லர்ஸ்
22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் ஓடருக்குச் செய்து தரப்படும்.
501, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஐஸ்கட்டி உற்பத்தித் தொழிற்சாலை
இல,34(18), ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2226496

...கபூஷணி ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்
...கலவிதமான பொருள்களையும் ...மாகவும் சில்லறையாகவும் நியாய ...லைக்குப் பெற்றுக்கொள்ளலாம்
...ழும்புத்துறை வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

ஜீவா பேக்கரி
பாண், பணிஸ் வகைகள், கேக் வகைகள் பிஸ்கற் வகைகள் ஓடருக்குக் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்.
173, 189, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம்.

அனைவரது அபிமானத்தைப் பெற்ற OMEX HOTEL
சுத்தம், சுவை, தரம், நியாய விலை
OMEX HOTEL
இல, 572, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே: 021 222 9926

லிங்கம் கூல்பார்
சுவையான ஐஸ்கிறீம், ஐஸ்பழ வகைகள், பழரசங்கள் சுவையான உணவு வகைகள் ஓடருக்கு குறித்த நேரகாலத்தில் செய்து தரப்படும்.
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சிறீஸ் கோப்பி
...தமான குளிர்பான வகைகள், சைவஉணவு ...ள் ஓடர்களுக்கும் பெற்றுக் கொள்ளலாம்.
...33, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 2226906
...கிளை: சிறீமுருகன் ஸ்ரோஸ் ...பொருள் வாணிபம், ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 321 0396

ஆகாஸ் பான்சி குட்ஸ்
தையல் தொழிலகம்
ஆண், பெண்களுக்கான ஆடைகள் குறித்த நேர காலத்தில் ஓடருக்குத் தைத்துக் கொடுக்கப்படும்.
ரீச் றோட், ஈச்சமோட்டை.

யாழ். பாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
கடற்றொழில் உபகரணங்கள், வலைகள் என்பன நியாய விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
புனித அந்தோனியார் கோயிலடி பாஷையூர், யாழ்ப்பாணம்.

வஸ்தியான் பேக்ஹவுஸ்
பாண், பிஸ்கற், கேக் வகைகள் நியாய விலைக்கு நிறைவான நிறையுடன் விற்பனை செய்யப்படும்.
வஸ்தியான் சந்தி, கண்டிக்குளி.

தேவி ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்
புதினப் பத்திரிகை முகவர்
பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.


...முகன் ஹாட்வெயர்ஸ்
...டடப் பொருள்கள், பெயின்ற் ...கள் யாவும் நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
..., 147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நெல்சன் வீடியோ டிஜிற்றல் அன் போட்டோ
அல்பங்கள் வடிவமைப்பாளர் அரங்கேற்றம், மேடை நேரடித் தொகுப்பு அஞ்சல். அனைத்து வேலைகளுக்கும்,
பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0776788207

சாந்தன் களஞ்சியம்
பல்பொருள் வாணிபம்
பாண்டியன் தாழ்வு, கொழும்புத்துறை.

சரவணபவன் அரைக்கும் ஆலை
51, பழைய பூங்காவீதி, கொய்யாத்தோட்டச் சந்தி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானங்களில் தலையாயது இரத்ததானம்; தாமாக முன்வந்து இப் பணியில் இணைதல் சிறப்புடைத்து

**நாளை ஜூன் 14ஆம் திகதி உலக குருதிக்கொடைத் தினமாகும் இதனையொட்டி வெளியாகும் சிறப்புப் பகுதி இது.**

## உயிர்காக்கும் உன்னத பணி குருதிக்கொடை



ஜூன் 14ஆம் திகதி ஒரு புனிதமான நன்நாளாகும். தன்னலம் கருதாது பிறர்நலம் பெரிது என எண்ணித் தம்முடைய உதிரத்தைக் குருதிக் கொடை மூலம் உவந்தளிக்கும் குருதிக் கொடையாளர்களுக்கு மதிப்பளிக்கும் நாளாகும். அத்துடன் குருதிக் கொடையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் நாளாகவும் இந்த நாள் உலகம் முழுவதிலும் நினைவு கூரப்படுகின்றது. இம்முறை 'உலகத்திற்கு புதிய இரத்தம்' எனும் தொனிப்பொருளில் உலகக் குருதிக்கொடையாளர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

'தானங்களில் சிறந்தது இரத்த தானம்'. இவ்வுயரிய செயலை தற்செயலாகவோ, சுய கௌரவத்திற்காகவோ அல்லது விளம்பரத்துக்காகவோ செய்யாது, இது ஒரு சமூகக் கடமை எனக் கருதி இப்புனித தானத்தில் தம்மை இணைத்துக் கொண்டவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள், போற்றப்பட வேண்டியவர்கள்.

குருதி உயிர்காக்கும் உன்னதமான பொருளாகும். மருத்துவத்துறையில் அதீத விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டும் மனித குருதிக்கு மாற்றீடாக செயற்கையாக ஒன்றைத் தயாரிக்க முடியாதுள்ளது. குருதிக்கு மாற்றீடு குருதியே. ஆகவே எவரேனும் ஒருவர் தாமாகவே முன்வந்து குருதிக்கொடை செய்வதன் மூலம்தான் குருதி இழப்பால் ஏற்படுகின்ற உயிரிழப்பைத் தடுக்க முடியும். இச் செயற்பாடு குறிப்பிட்ட ஒரு கால இடைவெளியில் தொடர்ச்சியாக நடைபெற்றால்தான் நாம் உயிர்காக்கும் பணியினை வைத்தியசாலையில் சிறப்பாக மேற்கொள்ள முடியும்.

ஒருவரின் உடலிலுள்ள மொத்தக் குருதியில் இருபது வீதத்துக்கும் அதிகமான குருதி சடுதியாக வெளியேறுமாயின் அது அவரை மரணத்துக்கே இட்டுச் செல்லும். இவ்வாறான பாரிய குருதி இழப்புகள், வீதி விபத்துக்கள், யுத்த காலத்தில் ஏற்படும் காயங்கள் மூலம் வெளியேறுதல், பிரசவத்தின்போது ஏற்படும் குருதி இழப்பு என்பவற்றின் மூலம் ஒருவரின் உடலிருந்து குருதி இழக்கப்படுகின்றது. பொதுவாக இவை இளம் பாரம்பரியத்தினரது உயிர்களையே பறிக்கின்றது. ஆகவே இரத்த வங்கியில் தேவையான வகை குருதி கையிருப்பில் இருந்தால்தான் இவற்றைத் தவிர்க்க முடியும்.

அத்துடன் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் புற்றுநோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. அவ்விதம் சிகிச்சை அளிக்கப்படும்போது அவர்களுக்கு இரத்தம் ஏற்ற வேண்டியுள்ளது. மற்றும் குருதிச் சோகையுடையவர்களுக்கும் இரத்தம் தேவைப்படுகின்றது. ஆகவே இவற்றிற்கு இரத்த வங்கியின் குருதி இருப்பு உயர்ந்தளவில் இருக்க வேண்டும். இதற்குத் தன்னார்வ குருதிக் கொடையாளர்களின் பங்களிப்பு முக்கியமாக உள்ளது. ஏற்கனவே பலர் குருதிக்கொடை செய்து உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறார்கள். அவர்களுக்கு இந் நன்னாளில் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பலர் முன்வந்து குருதிக்கொடை செய்வதன் மூலம்தான் இரத்த வங்கியின் இரத்தத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யலாம். குருதிக்கொடை செய்வதினால் உடலுக்கு ஒரு போதும் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

Dr.S. ஸ்ரீபவானந்தராஜா
*பணிப்பாளர்,*
*போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.*

## மற்றோருக்கு உதவும் மனப்பாங்கையும் வளர்க்கும் இரத்ததானம்



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் அதிபராக இருக்கின்றேன். கடந்த வருடம் நடந்த இரத்ததான நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட 210 பேர் இரத்ததானம் செய்துள்ளார்கள். இது தேசிய மட்டத்தில் பாடசாலைகளில் நடைபெற்ற இரத்ததான நிகழ்வுகளில் அதிகூடிய எண்ணிக்கையென இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி அவர்களால் எமக்கு அறிவிக்கப்பட்டது. ஆகவே ஏனைய பாடசாலைகளும் இரத்ததானத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து இரத்தான முகாம்களை ஒழுங்குபடுத்தி இரத்ததானம் வழங்கி உதவினால் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் இரத்தத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும்.

இரத்ததானமானது மனித உயிர்களைக் காப்பாற்றுவது மட்டுமன்றி மற்றவர்களுக்கு உதவுகின்ற மனப்பான்மையையும் வளர்ப்பது ஆகும். மக்களிடையே இரத்த தானம் வழங்குவோரின் எண்ணிக்கை அதிகரிப்பது மகிழ்ச்சியான விடயமாகும். இரத்ததானம் செய்வது குறித்த அச்ச மனநிலையில் மாற்றம் ஏற்பட்டு மக்கள் தன்னார்வக் குருதிக் கொடையாளர்களாக இரத்ததானம் செய்கின்றனர். இம்மாற்றத்தை ஏற்படுத்தியமைக்கு இரத்தவங்கி உத்தியோகத்தர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். இரத்த தானம் செய்யும் பாடசாலை மாணவர்களைக் கௌரவப்படுத்தி ஊக்கப்படுத்த வேண்டியதும் எமது கடமையாகும்.

திரு.N. தெய்வேந்திரராஜா
*அதிபர்,*
*ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.*

## தன்னார்வத்துடன் முன்வந்து இதுவரை 19 தடவைகள் குருதிக்கொடை வழங்கியுள்ளேன்



2004ஆம் ஆண்டில் ஒரு சமயம் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு குருதி தேவைப்படுவதாகப் பத்திரிகையில் செய்தி வெளிவந்தது. அப்போது நான் கல்வியியல் கல்லூரியில் முகிழ்நிலை ஆசிரியராக இருந்தேன். நானும் ஏனைய 12 முகிழ்நிலை ஆசிரியர்களும் உடனே சென்று குருதி வழங்கினோம்.

இதுவரையும் 19 தடவைகள் குருதி வழங்கியிருக்கின்றேன். முதல் முறை குருதி வழங்கியபோது எனக்கு ஏற்பட்ட ஆத்ம திருப்தியே தொடர்ந்தும் குருதி வழங்குவதற்கு என்னைத் தூண்டியது. தற்போது நான்கு மாதங்களுக்கு ஒருதடவை குருதி வழங்கி வருகிறேன். அமரர் அருட்பணி கருணாரட்ணம் அடிகளார் மற்றும் அருட்பணி ராஜசிங்கம் அடிகளார் ஆகியோரின் ஊக்குவிப்புக் காரணமாகவே எமது பகுதியான நாவாந்துறையின் பங்கு மக்களில் அதிகளவான மக்கள் குருதி வழங்கி வருகின்றனர்.

நாம் எமது கிறிஸ்தவத் திருவிழா நாள்களில் குருதி வழங்குவது வழமை. எமது பங்கு மக்கள் இந்த விடயத்தில் அதிக ஆர்வமாக இருக்கின்றனர். யுத்தம் முடிந்து விட்டதுதானே. எனவே குருதிக்குத் தற்போது தட்டுப்பாடு ஏற்படாது என எவரும் நினைக்கக் கூடாது. தற்போது வன்னிப் பகுதியிலுள்ள மக்கள் பலருக்கு சத்திர சிகிச்சை வழங்க வேண்டியிருக்கிறது. அதேசமயம் குடாநாட்டில் அடிக்கடி வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன. எனவே குருதிக்குத் தொடர்ந்தும் தேவை நிலவுகின்றது.

வி.ஆர்.அகிலநாயகம் *(வயது - 29)*
*(ஆசிரியர், கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்).*

## குருதிக்கொடை உயிர்காக்கும் உன்னத பணிகளில் தனித்துவம் மிக்கது



சர்வதேச குருதிக் கொடையாளர் தினமாகிய இன்று குருதிக்கொடை மூலம் உயிர்காக்கும் உன்னதப் பணியினை ஆற்றிவரும் ஒவ்வொருவரையும் பாராட்டிக் கௌரவிக்க வேண்டிய நன்னாள் இது.

எமது மண்ணில் பல இடர்களுக்கு மத்தியில் குருதித்தேவை அதிகரித்த காலங்களில் பிறர் நலமே பெரிதெனக் கொண்டு குருதிக் கொடை மூலம பல உயிர்களைக் காத்த, இன்றும் காத்துக் கொண்டிருக்கின்ற மதிப்பிற்குரிய குருதிக்கொடையாளர்களை ஒன்று சேர்த்து பாராட்டி வாழ்த்த வேண்டிய நாள் இது.

எனவே இரத்ததானத்தின் முக்கியத்துவத்தை அனைவரும் அறிந்து உங்களுடைய பிள்ளைகளையும், அயலவர்களையும் இரத்ததானம் செய்ய ஊக்குவியுங்கள். இவ்வாறு குருதிக்கொடையில் ஒவ்வொரு தடவையும் இணையும்போது அவர்களும் உயிர்காக்கும் உன்னத பணியில் இணைந்து கொள்கிறார்கள். உயிர்காக்கும் உயர்ந்த தொண்டில் ஈடுபடுபவர்கள் வளம்மிக்க உன்னத சமூகத்தை கட்டியெழுப்புவார்கள் என்பது உறுதி. எனவே இன்றைய தினத்தில் குருதிக்கொடையாளர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

வைத்திய கலாநிதி கிருஷ்ணன் சிவராமன்
*பொது வைத்தியநிபுணர்,*
*ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.*

## குருதிக்கொடை வழங்குவதுடன் அதற்கான ஒழுங்கமைப்பாளராகவும் செயற்பட்டு வருகிறேன்



எனது 17ஆவது வயதில் முதற் தடவையாக குருதி வழங்க ஆரம்பித்து இதுவரையில் மொத்தமாக 8 தடவைகள் இரத்ததானம் செய்துள்ளேன்.

குருதி வழங்க முன்வரும் தன்னார்வக் கொடையாளர்களை ஒன்றிணைத்து குருதிக் கொடை வழங்க ஒழுங்கு செய்யும் ஒழுங்கமைப்பாளராகவும் இருக்கிறேன். பாடசாலை மட்டத்தில் இரத்தம் வழங்குவதற்காக ஒரு தடவை 32 மாணவர்களை ஒழுங்கிணைத்து குருதிக் கொடை வழங்கச் செய்திருந்தேன். இதற்கு எமது பாடசாலை அதிபர் இராஜசேகரம் அவர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்கினார்.

பிறரது உயிகைக் காப்பதற்காக என்னாலான சேவைகளை வழங்கி வருகின்றேன். குருதி வழங்கினால் உடல் மெலிவடையும், பலவீனப்படும் என்ற தப்பான அபிப்பிராயத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். இவ்விடயத்தில் எனது குடும்ப உறுப்பினர்கள் என்னை ஊக்குவித்து வருகின்றனர்.

உடல் பருமனாக உள்ளவர்களாலேயே குருதிக்கொடை வழங்க முடியும், மெல்லிய உடல்வாகு கொண்டவர்களால் குருதிக்கொடை வழங்க முடியாது என வாதிப்போரும் எம் மத்தியில் இருக்கின்றனர். அது தவறானதொரு கருத்தாகும்.

பிறருக்கு உதவ வேண்டும் என்ற மனநிலை உடையவர்கள் உதவிக் கொண்டே இருப்பார்கள். யுத்தம் நிறைவடைந்த நிலையில் தற்போது வீதி விபத்துக்கள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளன. எனவே தொடர்ந்தும் குருதிக்கான தேவை நிறையவே உள்ளது.

பாலசிங்கம் தனிகாசலம்
*(கலைப்பிரிவு உயர்தர வகுப்பு மாணவன் - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)*

## இரத்ததானம் ஒரு மகத்தான சமூகப்பணி



தானங்கள், அன்பளிப்புக்கள் பரவலாகப் பரிமாறும் சமூகப் பிராணி நாம். ஆலயங்களிலும், திருவிழாக்களிலும் இதற்குப் பஞ்சம் இருப்பதில்லை. இவ்வாறான பணிகள் சில வேளைகளில் சுயநலப் போக்குடன் மேற்கொள்ளப்படுவதுண்டு. சுயநலச் சிந்தனைகளின்றி சமூகப் போக்குப் பார்வையும் செயற்பாடும் மிக அவசிய, அவசர தேவை. இவ்வாறான சமூகப் பார்வையை இளையோர் மத்தியில் மட்டுமல்லாது பெற்றோர் மத்தியிலும் சமூக - சமயத் தலைவர்கள் மத்தியிலும் உருவாக்க இரத்ததான முகாம்களை சிறியளவில் ஒரு சில இடங்களில் உருவாக்கும் அனுபவம் அற்புதமானது. புதியவர்களையும் இவ் இரத்ததானப் பணியில் இணைத்தது மகிழ்ச்சியானது. நிறைவும் தருகின்றது. அதிலும் கணவன் மனைவியாக, பெற்றோர் பிள்ளைகளாக, குடும்பங்களாக இணைத்து இரத்ததான நிகழ்வில் பங்கெடுக்க வைத்தது அற்புதமே. சமூகநலன் சார்ந்த பார்வை இவ்வகையான இரத்ததான நிகழ்வு மூலம் இலகுவாக இதில் பங்கெடுப்போர் மத்தியில் உருவாக்க முனைகின்றது. எனது சமயப் பணிகளுடன் சமூகம்சார் பணிகளில் இரத்ததானப் பணிகளுக்கும் முன்னுரிமை கொடுத்து வருவது எனது அர்ப்பணத்தையும் ஆழப்படுத்துகின்றது.

**தொகுப்பு: சங்கர்**

அருட்பணி சி.லீயோ ஆம்ஸ்ரோங்
*பங்குத்தந்தை, புங்குடுதீவு*
*புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம்.*

## தானத்தில் சிறந்ததானம் இரத்ததானம்



யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரி தாதிய மாணவர்கள் மற்றும் மருத்துவமாது மாணவிகள் தாமாகவே முன்வந்து யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்ததானம் செய்கிறார்கள். வருடா வருடம் உலக தாதியர் தினம், எமது தாதியர் கல்லூரி ஸ்தாபக தினம் மற்றும் குருதிக் கொடையாளர் தினம் என்பவற்றை முன்னிட்டு எமது கல்லூரி மாணவர்களால் இரத்ததானம் செய்யப்படுவதுடன் இரத்த வங்கியில் இரத்தத்துக்குத் தட்டுப்பாடு நிலவும்போதெல்லாம் இரத்த தானம் செய்வது பாராட்டுக்குரியது. புதிதாக வரும் மாணவர்களும் இதைப் பின்பற்றிக் குருதிக்கொடை வழங்குவதில் ஆர்வமாக உள்ளனர். இரத்ததானமானது தானங்களில் மிகவும் சிறந்த தானமாகும். நோயாளர்களின் உயிரைக் காப்பதற்காகத் தமது இரத்தத்தைத் தானமாக வழங்குவது மிகவும் உன்னதமான தானம் என்றால் அது மிகையாகாது. பொது மக்களும் தாமாகவே முன்வந்து தமது குருதியைத் தானமாக வழங்குவதன் மூலம் பல உயிர்களைக் காக்க முடியுமென அவர்களை அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம். இத்தானத்ந்த மேற்கொள்வதென்பது இறைவனால் அருளப்பட்ட ஆசீர்வாதமாகும்.

திருமதி தே.அருளானந்தம்
*அதிபர்,*
*தாதிய பயிற்சிக் கல்லூரி,*
*யாழ்.போதனா வைத்தியசாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புறொயிலர் விற்பனை

நிறை கூடிய புறொயிலர், கல்பேட் மற்றும் முட்டை என்பன மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். புறொயிலர் விலை 20/- வால் குறைக்கப்பட்டுள்ளது. மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும்.
தொடர்பு : மஸ்ரி பாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி. (99413) T.P. : 0217912783


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்
27
★
12
★
1946



விண்ணில்
14
★
05
★
2010

### அமரர் குட்டித்தம்பி பாலசுப்பிரமணியம்

கடந்த 14.05.2010 அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் குட்டித்தம்பி பாலசுப்பிரமணியம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தும், கண்ணீர் அஞ்சலிகள் பிரசுரித்தும், மலர் வளையங்கள் வைத்தும் இறுதிச் சடங்கில் அஞ்சலி செலுத்தி ஒத்துழைத்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வ நன்றிகள். மற்றும் அன்னார், சென்றல் நேர்சிங் ஹோம், யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்தபோது அவருக்குச் சிகிச்சையளித்த வைத்தியர்கள், தாதிமார், ஊழியர்கள் அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகளைக் கூறிக்கொள்கிறோம். வீட்டுக்கிருத்தியம் இன்று (13.06.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதுடன் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

" எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லைச் செய்நன்றி கொன்ற மகர்க்கு"

44, பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம். (99256) குடும்பத்தினர்.


## காணி விற்பனைக்கு

இல.43,அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தில் 8 பரப்பு வெறுங் காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டவோ, தோட்டம் செய்யவோ உகந்தது.
தொடர்புக்கு: 0714102174/0771622770

## வீடு விற்பனைக்கு

கே.கே.எஸ்.றோட்டுக்கு அண்மையில் கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் சந்திக்கும் இணுவிலுக்கும் இடையில் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-
071 4946056, 0777 406087, 077 4854576

## காணி விற்பனைக்கு

இணுவில் மேற்கு, பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் றோட்டுக் கரையோரமாக கிணற்றுடன் கூடிய 10 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவை இல்லை.
நேரடித் தொடர்புகளுக்கு:-0779789534

## விசேட விலைக்கழிவு

★அல்பம் கட்டுதல்
CD நெகற்றிவ் இல் தந்தால்
Digital அல்பம் (10 x15)
ஒரு சீற் - 200/= மட்டுமே!
(உ+ம்) 50 சீற் அல்பம் கட்டுவதற்கு
50 x200 = 10,000
கட்டும் கூலி = 3 000
13,000

★"ஹரிஸ்மா"அல்பம் (10 x30)
ஒரு சீற் - 600/= மட்டுமே!
(உ+ம்) 30 சீற் அல்பம் கட்டுவதற்கு
30 x 600 = 18,000
கட்டும் கூலி = 3 000
21,000

★நிகழ்வுகளைப் படம் பிடித்துத் தருவதற்கு
30/= மட்டுமே!

மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (சி/563324)

## காணி விற்பனைக்கு

நாவற்குழி, கோயிலாக்கண்டியில் 12 பரப்பு நெற்காணி விற்பனைக்குண்டு. பரப்பு 25000/=.
தொடர்பு: இராசலிங்கம் (அதிபர்) , முதியோர் இல்லம், கைதடி.
தொ.பே: 0776203909, 0779177145, 0213213526

## சேவை

குறைந்த செலவில், குறுகிய காலத்தில், உயர்ந்த தரத்தில், நினைவு மலர் மற்றும் நினைவு மலர்களுக்கான படங்கள் அச்சிட்டுக் கொடுக்கப்படும்.
பிள்ளையார் அச்சகம் - நல்லூர்.


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அந்தோனிப்பிள்ளை மேரி கொன்செப்ரா

ஆறவில்லை அம்மா எங்கள் இதயம்
ஆற்றொணா துயர் நிறைந்த காயம்
மூன்றாண்டுகள் சென்றாலும் நீங்கள் எம்மோடு வாழ்ந்த வாழ்வு
முகிழ்த்தெழும் பசுமையாய் எம் கண்முன்னே தெரியுதம்மா!
ஆசையாய் எம்மோடுகூட இருந்து கதைபேசி
நாம் வாழ வழியெல்லாம் காட்டி
மௌனமாய் இடைவழியில் எமை பிரிந்து சென்ற அம்மாவே!
நீங்கள் அன்பு என்ற சொல்லுக்கே அணிகலனாய் வாழ்ந்த வாழ்வு
எங்கேயம்மா?

கவிதையாய் எம் உள்ளத்தில் நிறைந்து
விலைகூற முடியாத உம் அன்புக்கு நிகர் நீதானம்மா!
மலைபோல் துயரங்கள் வந்துற்ற போதும்
பனியாகக் கலைந்துவிடத் துணைநில் அம்மா
நிலையில்லா இவ்வுலகில் நிம்மதியாய் நாம் வாழ
நிலையான உன் ஆசி நிதம் வேண்டும் அம்மா!

தோற்றம்
14.05.1960
மறைவு
13.06.2007

இல.137, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
என்றும் நினைவுடன்: குடும்பத்தினர். (99408)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் சங்கரப்பிள்ளை கந்தசாமி (கலைமான்)

(முன்னாள் முகாமையாளர், எரிபொருள் நிரப்பு நிலையம், கைதடி)
திதி: 13.06.2010

தோற்றம் 22.11.1947 மறைவு 14.05.2010

கண்ணீரால் முப்பத்தொருநாள்
மறைந்ததுவே அப்பா!
வாசல் கடந்து எப்படி நீங்கள் போனீர்கள்
அப்பா!
கட்டிய மனைவியின் வயிறு பற்றிஎரிவது
தெரியவில்லையா?
பிள்ளைகள் கண்ணீர்விட்டு அழுவது
தெரியாதா அப்பா?
உங்களது கடமைகள் சரிவரச்
செய்துவிட்டு
எப்படி அப்பா மனைவி, பிள்ளைகளைத் தவிக்கவிட்டுப் போனீர்கள்?
ஆலமரம் போல எங்களுக்கு நிழல் தந்தீர்கள் அப்பா!
அந்த ஆலமரம் திடீரென ஏன் அப்பா சாய்ந்தது?
எரிபொருளை நிரப்புவது போல எமது ஆசைகளையும்
தேவைகளையும் ஆனந்தமாய் நிறைவுசெய்து வளர்த்தீர்கள் அப்பா!
இயற்கையின் நியதியிலே எமையெல்லாம் தவிக்கவிட்டு
எங்கு போனீர்கள் மறையுமா உங்கள் பிரிவின் சோகம்?
அகலுமா உங்கள் நினைவின் பாசம்! விட்ட கண்ணீர் காயவில்லை அப்பா!
இனி வழிகளில் நீரும் இல்லை அப்பா!
கண்ணீரில் வாழ்வதனால் கடல்நீரும் காரமில்லை!
ஆயிரம் உறவு இருந்தாலும் அப்பா என்ற மூன்று
எழுத்துக்கு ஈடாகுமா அப்பா அப்பா அப்பா!
பிறப்பவர் இறப்பது நியதி. ஆனால் உங்களிற்கோ
இப்படி ஒரு நோய் வந்தது தாங்க முடியவில்லை!
அப்பா மறக்க முடியவில்லை அப்பா தவிக்கிறோம்.

கடந்த (14.05.2010) வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சங்கரப்பிள்ளை கந்தசாமி அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (13.06.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"[illegible]கிரி", கைதடி கிழக்கு.
021 222 5747 (99403)
தகவல்: குடும்பத்தினர்.

### மாதாந்த ஒன்று கூடல்

யாழ்.மாவட்டதிலுள்ள பிரதேச செயலகங்களில் கடைமை புரியும் சமூக சேவை அலுவலர்கள் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் ஆகியோருக்கான மாதாந்த ஒன்று கூடல் நாளை செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெறவிருப்பதாக சமூக சேவைத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலர் ஆ.ஞானவேல் அறிவித்துள்ளார்.
(க-228)

### ஆலய திருப்பணி வேலைகள்

தென்மராட்சி, மீசாலை வடக்கு, இராமாவில் கந்த சுவாமி தேவாலய திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

ஆலயத்தின் உள்வீதியின் சுற்றுப்புற மண்டபம் அமைக்கப்பட்டு வருவதாக ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர்.
(201-131)

## 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23
★
10
★
1926



மறைவு
22
★
05
★
1993

### அமரர் வல்லிபுரம் சங்கரப்பிள்ளை
(விவசாய நண்பன், கைதடி கிழக்கு, கைதடி)

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசத்தின் பிறப்பிடமாய் அன்பின் இருப்பிடமாய் வாழ்ந்து
எங்கள் வாழ்வை வளப்படுத்தியவரே!
எமக்காக அல்லும் பகலும் அயாராது உழைத்த
எம் வாழ்வின் வழிகாட்டியே!
உயர்ந்த பண்புடனும், சாந்தமான குணத்துடனும்,
வாழ்ந்த எம் குடும்பத்தின் தந்தையே!
ஒரு நொடிப்பொழுதில் எம்மையெல்லாம்
கதிகலங்க விட்டு எங்கே சென்றீர்கள்?
உங்களைப் பிரிந்து ஆண்டுகள் பதினேழு ஆகியும்
ஆறவில்லை எம் துயரம்!
உங்கள் நினைவும், அன்பும் அகவை பல சென்றாலும்
ஆலமரவிழுது போல் எம் ஆயுள்வரை தொடரும்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் ஆசியில் வாழும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
கைதடி கிழக்கு,
கைதடி. (99410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# STUDY IN UK WITHOUT IELTS

**UK** அரசாங்கத்தால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் **UK Visa** நடைமுறை தொடர்பான இலவச கருத்தரங்கும் **UK**யில் பிரபல முன்னணி பல்கலைக்கழகமான **University of Portsmouth** மற்றும் **The City College** க்கான உடனடி அனுமதிகளும் வழங்கப்படும்.

## இந்த வருடம் UK Visa கிடைத்து பயணமானவர்களில் சிலர்



| | The University of Portsmouth | The City College |
|---|---|---|
| காலம் | 23rd June 2010-10.00a.m. | 17th June 2010 - 12.30p.m. |
| வழங்குபவர் | Mr.Saf Jeevanjee (International Officer-South Asia) | Mr.J.C.Sandy Lloyd (Principal-The City College) |
| இடம் | தலைமை காரியாலயம் (Exponet) Colombo | |

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் முன் கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

**பதிவுகளுக்கு**

**Colombo - 0117 555514 Jaffna - 021 7538395 Hotline - 0714150995**

பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

September/February மாதங்களுக்கான அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

**Free IELTS Class**

பல நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு வளமான எதிர்காலத்தை உருவாக்கிய எமது நிறுவனத்துடன் நீங்களும் இணையுங்கள்

EXPONET
Overseas Consultants

Head office -
379-1/2, Galle Road,
Colombo 6, Sri Lanka.

Jaffna Branch -
102 2/2, Navalar Road,
Jaffna.

Hotlines:
071 415 0995,
011 755 5511/12,13,14

www.expogroup.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

## புத்தகக் கண்காட்சியும்-விற்பனையும்

**(10.06.2010 முதல் 19.06.2010 வரை)**

கோப்பாய் தெற்கு வீரபத்திர கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு வலி.கிழக்கு சைவ சமய அருள் நெறி மன்றத்தினரால் நடத்தப்படும் புத்தகக் கண்காட்சி மேற்படி ஆலயத்துக்கு அண்மையில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

காலை 9 மணிமுதல் மாலை 7 மணிவரை நடைபெறும் இக்கண்காட்சியில் புத்தக விற்பனையும் இடம்பெறும்.

**ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(சி/568342) வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றம்.


**IELTS இன்றி UK இல் உயர் கல்வி**



*VISA பெற்றுக்கொள்ள முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.*

**எமது சேவை முற்றிலும் இலவசம்**

**O/L உடன் குறைந்த கட்டணத்தில்!**

flex Institute
Step Towards a Bright Future

4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk
(A Subsidiary of Flex Graphic)
FLEX Graphic





**STUDY MBA IN THE UK From Rs. 1.3 Milion**

UNDERGRADUATE AND POSTGRADUATE COURSES
MBA,Bsc,BA,HND,PgADMS
Business Administration
Hospitality & Tourism Management
Finance & Accounting
Health & Social Care Management
Computing & IT Management

**ADMISSION OPEN For August/October Intake 2010**

networth CONSULTANTS
No. 298, R.A.De Mel Mawatha, Colombo 03
Ph 011 2573393 M 077 2313955
E mail : colombo@networthedu.com

EThames Graduate School
www.etgs.org.lk



## யாழ் மண்ணில் CBC

13 வருடங்களுக்கு மேல் தலைநகர் கொழும்பில் இயங்கி வரும் CBC முதன் முறையாக யாழ் மாணவர் நலன் கருதி அரச மற்றும் தனியார் வெளிநாட்டு பல்கலைக்களகங்கள் மற்றும் College போன்றவற்றிற்கான மாணவர்களை சேர்ப்பதற்கான நேர்முக தெரிவினை நடாத்துகிறது.



Member of UCAS (One & Only Private College in Sri Lanka)

எதிர்பாராத புதிய அனுபவமும் அரியவாய்ப்பும்
**STUDY + WORK OFFER**

UK - "A - Rated" Government Collegeகளில் உயர்கல்வியை தொடரும் சந்தர்ப்பம் உங்கள் காலடிக்கு கொண்டுவருகிறது Colombo Business College.

200க்கும் அதிகமான பாடநெறிகள் உங்கள் விருப்பம்போல் பாடநெறிகளை தெரிவுசெய்யலாம். இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

யாழ்ப்பாணத்தில்.. Knowledge Universe, No: 75, Temple Road, Jaffna என்ற இடத்தில் இம்மாதம் 26, 27ம் திகதிகளில் August 2010 Intake கான நேர்முகப்பரீட்சை இடம்பெறும்

நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்க விரும்புவோர் 0714938848 / 0714550055 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு SMS செய்து அல்லது Call செய்து உடன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

SAVE TIME ! & SAVE MONEY !

தலைநகரில்...

Approved By Foreign Colleges & Universities

PROFESSIONAL OVERSEAS EDUCATIONAL CONSULTANTS

**COLOMBO BUSINESS COLLEGE**

379-1/5 (1st Floor) Galle Road, Wellawatte, Colombo-06
Tel: 0114-518580, 011-2362052 FAX:0114-519130
E-mail: colbuco@yahoo.co.in Web site: cbceducation.com
(Opposite to Delmon Hospital & Nations Trust Bank)


### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இல.133, நாவலர் வீதி முஸ்லிம் வட்டாரத்தில் அமைந்துள்ள நில. பர. 01 குளி 2.09 விஸ்தீரணம் கொண்ட காணியும் கட்டடமும் கிணறும் விற்பனைக்குண்டு.

விவரங்களுக்கு: தொ.பே -0779103740

### தவறிவிட்டது

குட்செட் வீதி, கோண்டாவில் என்னும் முகவரியுடைய கமலசிங்கம் நிர்மலகாந் என்பவரின் தேசிய அ.அ (850161895V) கோண்டாவிலுக்கும், யாழ்ப்பாணத்திற்குமிடையில் பேசுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0772203092 எனும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### அலுவலக உதவியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் கணனிசார் சேவைகளை வழங்கும் அலுவலகமொன்றிற்கு அலுவலக உதவியாளர் தேவை.

தொடர்பு -0777563144

### காணி விற்பனைக்குண்டு

உரும்பிராய்ச் சந்திக்கு அண்மையில் 5 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 222 6944

### விற்பனைக்குண்டு

பேக்கறி நடத்துவதற்குத் தேவையான மின்சார இயந்திரங்களும் அதனுடன் இணைந்த ஏனைய உபகரணங்களும் உடன் விற்பனைக்குண்டு. தொ.பே.: 077 6916839 (99282)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட No 1 தரமான Broiler கோழிக்குஞ்சுகள் 21.06.2010 காலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

★ நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். தொ.பே: 021 222 6944.

★ சூட்டி பாம், வட்டுக்கோட்டையிலும் பதிவு செய்யலாம். தொ.பே: 021 3216290

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1978, சுவாதி முதலாம் பாதம், செவ்வாய்க் குற்றமில்லாத, Software Engineer, 5'9" உயரம் உள்ள மணமகனுக்கு படித்த அரசாங்கத்தில் அல்லது வங்கியில் கடமை புரியும் மணமகள் தேவை.

விளம்பர இல. 4034,
மே/பா. உதயன்.

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1984 இல் பிறந்த உத்திராடம் - 1ஆம் பாதம், 8 இல் செவ்வாய் (மொ.கி. பா 38 ½), உயரம் 5' 4" உடைய மெல்லிய, அழகிய பட்டதாரி மணமகளுக்கு வெளிநாட்டில் PR உள்ள தகுந்த மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர்.

தொடர்பு :0776139307

### விற்பனைக்கு

யாழ். பருத்தித்துறை வீதிக்கு அண்மையில் கோப்பாய் தெற்கு பழைய வீதியில் இரண்டரைப் பரப்புக் காணி சகல வசதிகளுடன் கூடிய வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு :0770259697

### வேலையாள்கள் தேவை

டீசல் லொறி மெக்கானிக், வெல்டர், வீட்டு வேலை, பெயின்ரிங் தெரிந்த வேலையாள்கள் தேவை. கராச்சும் வாடகைக்குக் கொடுக்கப்படும். க.சிவலிங்கம், 77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 3212

### காணி விற்பனைக்கு

பிரம்படி லேன், கொக்குவிலில் சுமார் 3 ¾ பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779496948

### கல்வி

தரம் 1இலிருந்து 8வரை கல்வி பயிலும் யாழ்ப்பாண மாணவர்களுக்கு அனைத்துப் பாடங்களும் திறமையான பெண் ஆசிரியையினால் உங்கள் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு: 0779626030

### வீட்டுப் பணிப்பெண் தேவை

கொழும்பில், கௌரவமான சிறிய ஆசிரியர் குடும்பம் ஒன்றிற்கு தங்கியிருந்து வீட்டுவேலை செய்வதற்கு 40 வயதுக்குட்பட்ட பெண் வேலையாள் தேவை. (யாழ்ப்பாணத்திலிருந்து பாதுகாப்பாகக் கூட்டிச் செல்லப்படுவார். தொடர்பு: 0714980324

### விற்பனைக்கு



EXK 2800S மொடல் ஜெனரேற்றர் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

ரஞ்சனாஸ்

383,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (99430)

## DANISH DEMINING GROUP

Danish Demining Group (DDG) has been in operation in Sri Lanka since 2003. Presently the work force consists of 600 personnel which is expected to increase to 700, including deminers, administrative staff and a Management group, mainly built upon national capacity supported by expatriate Programme Manager, Operations Manager and Technical Advisors. DDG presently operates in Jaffna, Vavuniya, Killinochchi districts.

DDG is an active participant in the global effort to reduce the effects of landmines. The objective of DDG is to contribute towards the goals and objectives of the National Mine Action Program in Sri Lanka, which aims to reduce the threat of mines and other unexploded ordnance from priority areas. The Demining project in Sri Lanka is scheduled to run upto December 2010, with the possibility of extension upto 2011, depending on funding.

### VACANCY FOR A LOGISTICS OFFICER
**(Jaffna based)**

GCE A/L qualified with at least 2 years experience in similar capacity. He should be fully conversant with planning and procurement of all supplies, maintenance of inventory and quality control of stores. Should be a team player. A diploma from the Institute of Suppfies and Materials Management is not a must but would be a definite advantage.

- Be fluent in English, Tamil and fair knowledge in Sinhala
- Be computer literate.

**How to Apply**

Application for this position should submit a letter to DDG, stating why and how they fit the selection criteria and attach a copy of CV with contact details and names of two non-related referees to the following address by **20th June 2010.**

Only candidates who meet all the above requirements will be invited for an interview/test. The Job description could be obtained on request.

**DANISH DEMINING GROUP**
**456, Main Street, Chundikuli, Jaffna**
**E-mail: jafofficemgr@ddg.lk**

## மரண அறிவித்தல்கள்

### தம்பு ஸ்ரீபத்மநாதன் (ஸ்ரீ)

மணல்தறை வீதியைப் பிறப்பிடமாகவும், முடமாவடியை வதிவிடமாகவும் கொண்ட தம்பு ஸ்ரீபத்மநாதன் (ஸ்ரீ) 08.06.2010 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் புஸ்பராஜேஸ்வரியின் (மணி) அன்புக் கணவரும் ஸ்ரீஜெயப்பிரபா (ஜெயா), மோகனஹாசன் (மோகன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரமேஸின் அன்பு மாமனாரும் ஜெயன், ஜேயஸ், ஜெஸ்ரன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான தம்பு-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் பாக்கியநாதன், கணநாதன் (குணம்), குருநாதன் (குரு), சொர்ணலட்சுமி (சொர்ணம்), அன்னலட்சுமி (அன்னம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2010) ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8/5, சிவன் புதுவீதி,
திருநெல்வேலி. (99417)

தகவல்:
ந.பாக்கியநாதன்
(சகோதரன்)

### திருமதி நடராசா பத்மாவதி (பேபி)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் 3ஆம் கட்டை, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா பத்மாவதி 10.06.2010 வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா- தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பற்குணானந்தன் மற்றும் இராமுனானந்தன் ஆகியோரின் சகோதரியும் நித்தியவரதன் (சுவிஸ்), நித்தியவேணி, பத்மராஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் பவானி, கணேஸ்வரன், சுமதி ஆகியோரின் மாமியாரும் பிரசன்னா, பிரசன்னியா, நிருஜா, சிந்துஜா, வினோஜா, நிரேசன், கிமேஸ், அனுநந் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (99424)

தகவல்
க. நித்தியவேணி (வேணி)
(மகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முத்து - இது நவரத்தினங்களில் ஒன்று

முத்துச் சிப்பிக்குள்ளிருந்தே முத்துக் கிடைக்கிறது. சிப்பிக்குள் முத்து உருவாகும் விதம் வியப்பளிக்கும் ஒன்றாகும்.

கடலிலுள்ள சிப்பிக்குள் ஏதாவதொரு பொருள் உட் சென்று விட்டதென்றால் அது அச் சிப்பிக்கு ஒருவித உறுத்தல் உணர்வை ஏற்படுத்துகிறது.

உடனே அது தன் உடலிலுள்ள 'நாக்கர்' என்ற ஒருவித திரவத்தை தன்னுள்ளே வந்த பொருளின் மீது சொரிந்து விடுகிறது. சிப்பியின் வயிற்றுப்பாகத்துள் சென்று விட்ட அப்பொருள் காலப்போக்கில் பெறுமதிமிக்க முத்தொன்றாகப் பரிணாம வளர்ச்சிபெற்று விடுகிறது.

இந்த இரகசியத்தைத் தெரிந்து கொண்ட சீனர்கள், சிற்பியொன்று தனது வாயைத் திறந்து வைத்துக் கொண்டிருக்கும் போது ஈயத்தால் செய்யப்பட்ட மிகச்சிறிய பொருளொன்றை சிப்பியின் வாய்க்குள் திணித்து விடுகின்றனர். உரிய காலம் கடந்த பின்னர் அந்தச் சிப்பியைத் திறந்து பார்த்தால் முத்துத் திரவத்தால் பொதியப்பட்ட முத்துக் காணப்படும்.

கடலில் வாழும் சில புல்லிருவிகள் சில சமயங்களில் முத்துச் சிப்பியின் வாய் வழியாக தவறுதலாக உள்ளே சென்று விடுகின்றன. உடனே முத்துச் சிப்பி உறுத்தல் உணர்வு காரணமாக உள்ளே வந்த புல்லுருவியின் மீது 'நாக்கர்' திரவத்தைச் சொரிந்து விடும். அதன் காரணமாக முத்துச் சிப்பியினுள் வந்த புல்லுருவி இறந்து போய்விடும். அதன்மீது 'நாக்கர்' திரவம் பல அடுக்குகளில் சொரிந்துவிட அது விலையுயர்ந்த முத்தாக மாறும். மண் போன்ற வேறு பொருள்கள் முத்துச் சிப்பியினுள் சென்றாலும் 'நாக்கர்' திரவம் அவற்றின் மீது சொரியப் படுவதால் அவையும் முத்தாக மாறும். இவ்விதம் முத்து ஒன்று சிப்பியினுள் முழு வளர்ச்சியடைய ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகள் தேவைப்படும்.★★★★★★★★






# கிரேக்க தத்துவஞானி - சோக்கிரட்டீஸ்



கி.மு. 500 ஆம் ஆண்டுகளில் கிரேக்க நாட்டில் இருந்த நகர அரசுகளில் ஒன்று ஏதென்ஸ் அரசு. அங்கு கி.மு 469ஆம் ஆண்டில் சிற்பத் தொழிலை மேற்கொண்ட தந்தைக்கும் மருத்துவிச்சியான தாய்க்கும் மகனாகப் பிறந்தார் சோக்கிரட்டீஸ். தந்தையின் வழியில் சிற்பியாக இருந்த சோக்கிரட்டீஸ் பின்னர் போர் வீரனாகப் படையில் சேர்ந்தார். களம் பல கண்ட அவர் 'பொட்டிடேயப்' படையெடுப்பில் பங்குபற்றிப் பாராட்டும் பெற்றவர்.

தாய் நாட்டில் பொது வாழ்வில் அக்கறை காட்டாத அவர் மனித இயல்பு, மனித நடத்தை என்பவை பற்றி அறிவதில் சிரத்தை காட்டினார். மக்களைப் பகுத்தறிவுப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டுமென்புதே அவரது குறிக்கோளாக அமைந்தது. நேர்மையும் துணிச்சலும் கொண்ட அவர் சட்டத்தையும் நீதியையும் மதித்தார். திறந்த மேலுடம்புடனும், வெறும் காலுடனும் தெருவோரங்களிலும் விளையாட்டு அரங்குகளிலும் அங்காடிகளிலும் தமது கருத்துக்களைப் பொதுமக்களுக்குத் துணிச்சலுடன் எடுத்து விளக்கி வந்தார். இவரது கருத்துக்களில் கவரப்பட்ட பலர் இவருக்கு உற்ற நண்பர்களாயினர். இவர்களுள் பேரறிஞர் பிளேட்டோ, தத்துவஞானி செபீஸ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இவரது கருத்துக்களை ஏற்க மறுத்த பிறிதொரு தரப்பினர் இவர் இளைஞர்களின் மனத்தை கெடுப்பதாகவும், கடவுளைப் பழிப்பதாகவும் குற்றஞ்சாட்டி இவரை நீதிமன்றத்தில் நிறுத்தினர். ஆனால் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை சோக்கிரட்டீஸ் மறுத்து வாதம் செய்தாரில்லை. கடைசியில் இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இவரது உற்ற நண்பர்களான லிசியஸ் மற்றும் கிரிட்டோ போன்றோர் சிறையில் இருந்து இவரைத் தப்பிக்க வைக்க முயன்ற போதும் அதனை ஏற்க மறுத்து சட்டமும் நீதியும் போற்றப்பட வேண்டியவை என்ற கருத்தை அவர்களுக்கு எடுத்துக் கூறி அவர்களது முயற்சியைத் தடுத்து விட்டார்.

கடைசியில் மரணதண்டனை நிறைவேற்றப்படவிருந்த நாளன்று அக்கால வழக்கப்படி அவருக்குக் கொடுக்கப்பட்ட நஞ்சுப் பானத்தை வாங்கி அருந்தி உயிர் நீத்தார்.

தமது குறிக்கோளில் உறுதியாக வாழ்ந்த அறிஞர், பகுத்தறிவுப் பாதையின் தந்தை, தமது எண்ணம், சொல், செயல் மூன்றும் ஒன்றென வாழ்ந்தவர், தமது எழுபதாவது வயதில் தமக்கான மரணதண்டனையை மகிழ்ச்சியுடன் ஏற்று உயிர் துறந்த சோக்கிரட்டீஸ் எதனையுமே எழுதாமல் எல்லாவற்றையும் பேசியே விளங்க வைத்தவர். அத்தகு பேரறிஞர் சோக்கிரட்டீஸ்ஸின் கருத்துக்களைப் பிற்காலத்தில் அவரது நண்பனும் மாணவனுமான பிளேட்டோ தமது எழுத்து மூலம் உலகறிய வைத்தார்.★★

# முதலை கண்ணீர் வடிப்பதேன்?

முதலையின் மூக்குத் துவாரங்கள், செவிகள் என்பவற்றுள் நீர் புகுந்துவிடாது தடுப்பதற்காக அதனது உடலிலுள்ள மெல்லிய தோல் மடிப்புக்கள் உதவுகின்றன. முதலையால் மீனினத்தைப் போன்று தண்ணீருக்குள் சுவாசிக்க இயலாது. காற்றைச் சுவாசிக்க வேண்டுமானால் அது நீர் மட்டத்துக்கு மேலே வந்தாக வேண்டும். கண்களில் மேல் இமை மற்றும் கீழ் இமை என்பவற்றோடு அவற்றுக்கு அடியில் மெல்லிய இமைப் படலமொன்றும் முதலைக்கு உண்டு. நீரினுள் இருக்கும் போது அப் படலத்தால் முதலை தன் கண்களை மூடிக் கொள்ளும்.

ஒரு தவறான காரியத்தைச் செய்து விட்டுப் பின்னர் அதற்காக வருந்துவதாக போலியாக நடிப்பவர்களை முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள் எனக் கூறுவதுண்டு. முதலை



தனது இரையை விழுங்கிய பின்னர்தான் அதன் கண்களில் ஓரமாக நீர் வடிக்கின்றது. அதுவே முதலைக் கண்ணீர் எனக் குறிப்பிடப்படுகிறது. உண்மையில் முதலை இரையை உண்ணும்போது இரையிலும் தண்ணீரிலும் உள்ள உப்புக்கள் முதலையின் உடலுக்கு மேலதிகமான தொன்றாக ஆகும் வேளையில், அதன் கண்களின் அருகிலுள்ள உப்புச் சுரப்பி நீருடன் வெளியேறுகின்றது. இதுவே முதலைக் கண்ணீர் எனக் குறிப்பிடப்படுகின்றது.★★★★

# மழையே! மழையே! மெத்தப்பெய்!

மழை பொழிய வேண்டுமானால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு குளிர்ச்சியை மேகங்கள் பெற்றாக வேண்டும். இவ்வித குளிர்ச்சியைப் பெற மரங்களும் ஒரு காரணம். நாம் குளிர்ச்சியைப் பெறப் பல வழிகளைக் கையாள்கின்றோம். ஆனால் மரங்கள் தரும் குளிர்ச்சியை வேறெவையும் தரமுடியாது. ஒரு சிறு செடியின் நிழல் தரும் குளிர்ச்சியை நூறு விசிறிகளால் கூடத்தர முடியாது. சூரியனின் கதிர்கள் எல்லாப் பொருள்களையும் தாக்கவே செய்கின்றன. கல்லும் மண்ணும் சூடேறிக் கொதிக்கின்றன. நீர் நிலைகளில் கூடத் தண்ணீரின் மேற்பகுதி வெந்நீராக மாறிவிடுகின்றது. ஆனால் மரம், செடி, கொடிகளின் இலைகளிலோ சிறிதளவும் சூடும் காணப்படுவதில்லை என்ற உண்மையை நாம் உணரவில்லை. நம்மைச் சூழ உள்ள காற்று வெப்பமாக உள்ள காலத்திலும் கூட மரங்கள் நிறைந்த சோலைகள் குளிர்ச்சி தரும் மாளிகையாகவே உள்ளன. காடுகளின் குளிர்ச்சியால் தூண்டப்படும் மேகங்கள் பெருமளவில் மழையைப் பொழிகின்றன. பெரும்பாலும் உயர்ந்த மலைகள் குறுக்கிடும் போது மிதந்து செல்லும் மேகங்கள் அவற்றைக் கடப்பதற்காக உயர்ந்து எழுகின்றன. பூமியிலிருந்து மேலே உயர உயரக் காற்று மண்டலத்தின் வெப்பம் குறைவதால், குளிர்ச்சியால் தாக்குண்ட மேகங்கள் மலைச் சரிவுகளை எல்லாம் வெள்ளக் காடாக மாற்றுகின்றன. எனவே உயர்ந்த மலைகளின் சாரலில் அதிக மழையை எதிர் பார்க்கலாம்.★★★★★



# காலணி அணியும் வழக்கம் ஏற்பட்டது இப்படித்தான்



ஆதிகால மனிதன் கல்லும் முள்ளும் நிறைந்த பாதைகளில் பயணிக்க வேண்டி நேர்ந்தது. தனது கால்களைப் பாதுகாத்துக் கொள்ள தோல், பட்டை என்பவற்றை வைத்துத் தோல் வாரினால் கணுக்காலுடன் கட்டிக் கொண்டு பயணங்களை மேற்கொண்டான். நாகரிகமடைந்த மக்களில் முதன் முதலில் செருப்பைத் தயாரித்தவர்கள் எகிப்தியர்களே. அவர்கள் தோல், நாணற்புல் என்பவற்றால் செய்த பட்டிகளை இரண்டு தோல் வார்களினால் கால்களில் சேர்த்துக் கட்டிக் கொண்டனர். இவ்விதம் வளர்ந்த காலணி அணியும் வழக்கமே இன்று நவீன மோஸ்தர்களில் உலகெங்கும் வாழும் மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.★★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்து – இது நவரத்தினங்களில் ஒன்று



முத்துச் சிப்பிக்குள்ளிருந்தே முத்துக் கிடைக்கிறது. சிப்பிக்குள் முத்து உருவாகும் விதம் வியப்பளிக்கும் ஒன்றாகும்.

கடலிலுள்ள சிப்பிக்குள் ஏதாவதொரு பொருள் உட் சென்று விட்டதென்றால் அது அச் சிப்பிக்கு ஒருவித உறுத்தல் உணர்வை ஏற்படுத்துகிறது. உடனே அது தன் உடலிலுள்ள 'நாக்கர்' என்ற ஒருவித திரவத்தை தன்னுள்ளே வந்த பொருளின் மீது சொரிந்து விடுகிறது. சிப்பியின் வயிற்றுப்பாகத்துள் சென்று விட்ட அப்பொருள் காலப்போக்கில் பெறுமதிமிக்க முத்தொன்றாகப் பரிணாம வளர்ச்சிபெற்று விடுகிறது.

இந்த இரகசியத்தைத் தெரிந்து கொண்ட சீனர்கள், சிற்பியொன்று தனது வாயைத் திறந்து வைத்துக் கொண்டிருக்கும் போது ஈயத்தால் செய்யப்பட்ட மிகச்சிறிய பொருளொன்றை சிப்பியின் வாய்க்குள் திணித்து விடுகின்றனர். உரிய காலம் கடந்த பின்னர் அந்தச் சிப்பியைத் திறந்து பார்த்தால் முத்துத் திரவத்தால் பொதியப்பட்ட முத்துக் காணப்படும்.

கடலில் வாழும் சில புல்லிருவிகள் சில சமயங்களில் முத்துச் சிப்பியின் வாய் வழியாக தவறுதலாக உள்ளே சென்று விடுகின்றன. உடனே முத்துச் சிப்பி உறுத்தல் உணர்வு காரணமாக உள்ளே வந்த புல்லுருவியின் மீது 'நாக்கர்' திரவத்தைச் சொரிந்து விடும். அதன் காரணமாக முத்துச் சிப்பியினுள் வந்த புல்லுருவி இறந்து போய்விடும். அதன்மீது 'நாக்கர்' திரவம் பல அடுக்குகளில் சொரிந்துவிட அது விலையுயர்ந்த முத்தாக மாறும். மண் போன்ற வேறு பொருள்கள் முத்துச் சிப்பியினுள் சென்றாலும் 'நாக்கர்' திரவம் அவற்றின் மீது சொரியப் படுவதால் அவையும் முத்தாக மாறும். இவ்விதம் முத்து ஒன்று சிப்பியினுள் முழு வளர்ச்சியடைய ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகள் தேவைப்படும்.★★★★★★★★★



## பஞ்சாமிர்தம்



# கிரேக்க தத்துவஞானி - சோக்கிரட்டீஸ்



கி.மு. 500 ஆம் ஆண்டுகளில் கிரேக்க நாட்டில் இருந்த நகர அரசுகளில் ஒன்று ஏதென்ஸ் அரசு. அங்கு கி.மு 469ஆம் ஆண்டில் சிற்பத் தொழிலை மேற்கொண்ட தந்தைக்கும் மருத்துவிச்சியான தாய்க்கும் மகனாகப் பிறந்தார் சோக்கிரட்டீஸ். தந்தையின் வழியில் சிற்பியாக இருந்த சோக்கிரட்டீஸ் பின்னர் போர் வீரனாகப் படையில் சேர்ந்தார். களம் பல கண்ட அவர் 'பொட்டிடேயப்' படையெடுப்பில் பங்குபற்றிப் பாராட்டும் பெற்றவர்.

தாய் நாட்டில் பொது வாழ்வில் அக்கறை காட்டாத அவர் மனித இயல்பு, மனித நடத்தை என்பவை பற்றி அறிவதில் சிரத்தை காட்டினார். மக்களைப் பகுத்தறிவுப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டுமென்புதே அவரது குறிக்கோளாக அமைந்தது. நேர்மையும் துணிச்சலும் கொண்ட அவர் சட்டத்தையும் நீதியையும் மதித்தார். திறந்த மேலுடம்புடனும், வெறும் காலுடனும் தெருவோரங்களிலும் விளையாட்டு அரங்குகளிலும் அங்காடிகளிலும் தமது கருத்துக்களைப் பொதுமக்களுக்குத் துணிச்சலுடன் எடுத்து விளக்கி வந்தார். இவரது கருத்துக்களில் கவரப்பட்ட பலர் இவருக்கு உற்ற நண்பர்களாயினர். இவர்களுள் பேரறிஞர் பிளேட்டோ, தத்துவஞானி செபீஸ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இவரது கருத்துக்களை ஏற்க மறுத்த பிறிதொரு தரப்பினர் இவர் இளைஞர்களின் மனத்தை கெடுப்பதாகவும், கடவுளைப் பழிப்பதாகவும் குற்றஞ்சாட்டி இவரை நீதிமன்றத்தில் நிறுத்தினர். ஆனால் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை சோக்கிரட்டீஸ் மறுத்து வாதம் செய்தாரில்லை. கடைசியில் இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இவரது உற்ற நண்பர்களான லிசியஸ் மற்றும் கிரிட்டோ போன்றோர் சிறையில் இருந்து இவரைத் தப்பிக்க வைக்க முயன்ற போதும் அதனை ஏற்க மறுத்து சட்டமும் நீதியும் போற்றப்பட வேண்டியவை என்ற கருத்தை அவர்களுக்கு எடுத்துக் கூறி அவர்களது முயற்சியைத் தடுத்து விட்டார்.

கடைசியில் மரணதண்டனை நிறைவேற்றப்படவிருந்த நாளன்று அக்கால வழக்கப்படி அவருக்குக் கொடுக்கப்பட்ட நஞ்சுப் பானத்தை வாங்கி அருந்தி உயிர் நீத்தார்.

தமது குறிக்கோளில் உறுதியாக வாழ்ந்த அறிஞர், பகுத்தறிவுப் பாதையின் தந்தை, தமது எண்ணம், சொல், செயல் மூன்றும் ஒன்றென வாழ்ந்தவர், தமது எழுபதாவது வயதில் தமக்கான மரணதண்டனையை மகிழ்ச்சியுடன் ஏற்று உயிர் துறந்த சோக்கிரட்டீஸ் எதனையுமே எழுதாமல் எல்லாவற்றையும் பேசியே விளங்க வைத்தவர். அத்தகு பேரறிஞர் சோக்கிரட்டீஸ்ஸின் கருத்துக்களைப் பிற்காலத்தில் அவரது நண்பனும் மாணவனுமான பிளேட்டோ தமது எழுத்து மூலம் உலகறிய வைத்தார்.✱✱

# முதலை கண்ணீர் வடிப்பதேன்?

முதலையின் மூக்குத் துவாரங்கள், செவிகள் என்பவற்றுள் நீர் புகுந்துவிடாது தடுப்பதற்காக அதனது உடலிலுள்ள மெல்லிய தோல் மடிப்புக்கள் உதவுகின்றன. முதலையால் மீனினத்தைப் போன்று தண்ணீருக்குள் சுவாசிக்க இயலாது. காற்றைச் சுவாசிக்க வேண்டுமானால் அது நீர் மட்டத்துக்கு மேலே வந்தாக வேண்டும். கண்களில் மேல் இமை மற்றும் கீழ் இமை என்பவற்றோடு அவற்றுக்கு அடியில் மெல்லிய இமைப் படலமொன்றும் முதலைக்கு உண்டு. நீரினுள் இருக்கும் போது அப் படலத்தால் முதலை தன் கண்களை மூடிக் கொள்ளும்.

ஒரு தவறான காரியத்தைச் செய்து விட்டுப் பின்னர் அதற்காக வருந்துவதாக போலியாக நடிப்பவர்களை முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள் எனக் கூறுவதுண்டு. முதலை



தனது இரையை விழுங்கிய பின்னர்தான் அதன் கண்களில் ஓரமாக நீர் வடிக்கின்றது. அதுவே முதலைக் கண்ணீர் எனக் குறிப்பிடப்படுகிறது. உண்மையில் முதலை இரையை உண்ணும்போது இரையிலும் தண்ணீரிலும் உள்ள உப்புக்கள் முதலையின் உடலுக்கு மேலதிகமான தொன்றாக ஆகும் வேளையில், அதன் கண்களின் அருகிலுள்ள உப்புச் சுரப்பி நீருடன் வெளியேறுகின்றது. இதுவே முதலைக் கண்ணீர் எனக் குறிப்பிடப்படுகின்றது.★★★★

# மழையே! மழையே! மெத்தப்பெய்!

மழை பொழிய வேண்டுமானால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு குளிர்ச்சியை மேகங்கள் பெற்றாக வேண்டும். இவ்வித குளிர்ச்சியைப் பெற மரங்களும் ஒரு காரணம். நாம் குளிர்ச்சியைப் பெறப் பல வழிகளைக் கையாள்கின்றோம். ஆனால் மரங்கள் தரும் குளிர்ச்சியை வேறெவையும் தரமுடியாது. ஒரு சிறு செடியின் நிழல் தரும் குளிர்ச்சியை நூறு விசிறிகளால் கூடத்தர முடியாது. சூரியனின் கதிர்கள் எல்லாப் பொருள்களையும் தாக்கவே செய்கின்றன. கல்லும் மண்ணும் சூடேறிக் கொதிக்கின்றன. நீர் நிலைகளில் கூடத் தண்ணீரின் மேற்பகுதி வெந்நீராக மாறிவிடுகின்றது. ஆனால் மரம், செடி, கொடிகளின் இலைகளிலோ சிறிதளவும் சூடும் காணப்படுவதில்லை என்ற உண்மையை நாம் உணரவில்லை. நம்மைச் சூழ உள்ள காற்று வெப்பமாக உள்ள காலத்திலும் கூட மரங்கள் நிறைந்த சோலைகள் குளிர்ச்சி தரும் மாளிகையாகவே உள்ளன. காடுகளின் குளிர்ச்சியால் தூண்டப்படும் மேகங்கள் பெருமளவில் மழையைப் பொழிகின்றன. பெரும்பாலும் உயர்ந்த மலைகள் குறுக்கிடும் போது மிதந்து செல்லும் மேகங்கள் அவற்றைக் கடப்பதற்காக உயர்ந்து எழுகின்றன. பூமியிலிருந்து மேலே உயர உயரக் காற்று மண்டலத்தின் வெப்பம் குறைவதால், குளிர்ச்சியால் தாக்குண்ட மேகங்கள் மலைச் சரிவுகளை எல்லாம் வெள்ளக் காடாக மாற்றுகின்றன. எனவே உயர்ந்த மலைகளின் சாரலில் அதிக மழையை எதிர்பார்க்கலாம்.★★★★★



# காலணி அணியும் வழக்கம் ஏற்பட்டது இப்படித்தான்



ஆதிகால மனிதன் கல்லும் முள்ளும் நிறைந்த பாதைகளில் பயணிக்க வேண்டி நேர்ந்தது. தனது கால்களைப் பாதுகாத்துக் கொள்ள தோல், பட்டை என்பவற்றை வைத்துத் தோல் வாரினால் கணுக்காலுடன் கட்டிக் கொண்டு பயணங்களை மேற்கொண்டான். நாகரிகமடைந்த மக்களில் முதன் முதலில் செருப்பைத் தயாரித்தவர்கள் எகிப்தியர்களே. அவர்கள் தோல், நாணற்புல் என்பவற்றால் செய்த பட்டிகளை இரண்டு தோல் வார்களினால் கால்களில் சேர்த்துக் கட்டிக் கொண்டனர். இவ்விதம் வளர்ந்த காலணி அணியும் வழக்கமே இன்று நவீன மோஸ்தர்களில் உலகெங்கும் வாழும் மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.★★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஒரே குட்டையில் ஊறிய இரு மட்டைகள்!

அதிகௌரவ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியாவுக்கான தமது மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு தமது பரிவாரங்களுடன் கொழும்பு திரும்பிவிட்டார். இத்தகைய உத்தியோகபூர்வ விஜயங்களின் இறுதியில், சம்பந்தப்பட்ட இரு நாடுகளின் தலைவர்களும் தமக்கிடையே நடைபெற்ற பேச்சுக்களின் விவரங்களை, மேற்கொண்ட முடிவுகளை கூட்டு அறிக்கையாக வெளியிடுவதுதான் ராஜீக ஒழுங்குமுறை, நடைமுறை. ஆனால் அத்தகைய மன்மோகன் சிங் - மஹிந்த கூட்டறிக்கை எதுவும் வெளியாகவில்லை.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு ஒப்பந்தங்கள் ஏழு, புதுடில்லியில் கைச்சாத்திடப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் வெள்ளிக்கிழமை கொழும்பில் வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் போது ஜனாதிபதி இந்த நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தமது உத்தேசத் திட்டத்தை, அது தவறின் தம்மிடம் உள்ள எண்ணத்தையாவது இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் எடுத்து சொல்லுவார் என்று பரவலாகப் பேசப்பட்டது. அதற்கு முத்தாய்ப்பு வைக்கும் அம்சமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கடந்த திங்கட்கிழமை அழைத்துப் பேசினார் என்றும் அரசியல் ஆரூடங்களும் ஊகங்களும் பரவின.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில், அதற்கான ஆயத்த நடவடிக்கையில் அக்கறையுடன் செயற்படுவதில் தாம் ஆர்வத்துடன் உள்ளதாக இந்தியாவுக்குக் காட்டிக்கொள்வதற்கான ஓர் ஏற்பாடே அந்தச் சந்திப்பு என்று அரசியல் அவதானிகள் கருதினர்; அது மெய்யாகிவிட்டது.

புதுடில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் பேசும்போது -

சிறுபான்மை இன மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் விதத்தில் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக அவர்களின் பிரதிநிதிகளுடன் தாம் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளதாக - ஜனாதிபதி ராஜபக்ஷ கூறினார் என்று புதுடில்லியில் உத்தியோகப் பற்றற்ற வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

அதன் மூலம் வெகு தந்திரோபாயமாக, கெட்டித்தனமான ராஜதந்திரத்துடன் இனப்பிரச்சினை தொடர்பான முக்கிய விவகாரத்தை முடக்கிவிட்டார் ஜனாதிபதி ராஜபக்ஷ.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கோ -

இலங்கையில் நீடித்த தமிழர் கிளர்ச்சிக்கு கடந்த வருடம் மே மாதத்தில் முடிவு கட்டப்பட்டுவிட்டதால், நேர்மையான தேசிய நல்லிணக்கத்துக்கான அரிய சகாப்தம் உருவாகியுள்ளது. ஆகையால் இந்தச் சரித்திரபூர்வ சந்தர்ப்பத்தைத் தக்கவாறு பயன்படுத்தி தேசிய நல்லிணக்கத்தை இலங்கை அரசு முன்னெடுக்கவேண்டும் என்றும் -

இத்தகைய சந்தர்ப்பத்தில் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு முறையை 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் முன்னெடுத்தால் தேசிய நல்லிணக்கம் இலகுவில் சாத்தியமாகும் என்றும் - சொல்லி முடித்து தனது பங்கை 'கச்சிதமாக' முடித்துக்கொண்டார்.

மன்மோகனின் உள்ளூர்ந்த இந்தப் ''போதனை'', அதனை தலை மேற்கொள்வதான மஹிந்தவின் வாக்குறுதி ஆகியன ''நான் அடிப்பதுபோல் மெதுவாகத் தட்டுகிறேன், நீ நொந்ததுபோல் மெதுவாக அழுதுகொள்'' என்ற அரசியல் நடிப்பாக - நாடகமாகவே - தென்படுகிறது.

இந்த அரசியல் நடிப்பு மேடையேறிய நாடகத்தின் அடுத்த காட்சியாக, மேடைக்குப் பின்னால் இருந்து இன்னொரு பின்னணிக் குரலும் எழுந்திருக்கிறது.....!

இலங்கையின் வடக்கு, கிழக்கு இணைப்பு உடனடியாகச் சாத்தியமில்லை என்பதனை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது என்பதே அந்தக் குரலாகும். இலங்கையின் வடக்கில் வெவ்வேறு போர்வைகளில் சிங்கள மக்களைக் குடியமர்த்தி அதனைக் கிழக்குப் போன்று தமிழர்களின் தனிப் பிரதேசம் என்ற நிலையிலிருந்து மாற்றுவதற்கு மஹிந்தருக்கு அவகாசம் தேவைப்படுகிறது.

தமிழர்களுக்கு (உள்ளக) சுயநிர்ணய உரிமை வழங்குவதை இந்தியா விரும்பவில்லை. இலங்கையில் அதற்குத் தான் உடந்தையாக இருந்தால், தனது தலையில் தானே மண் அள்ளிக்கொட்டியதாகிப் போய்விடும் - அங்குள்ள மாநிலங்கள் உடைந்து சுயநிர்ணய உரிமைக்கு குரல் எழுப்பத் தொடங்கிவிடும் - என்பது அந்த நாட்டு அரசின் அச்சம்.

ஆகவே வடக்கு, கிழக்கு இணைப்பை ஒத்தி வைத்து தள்ளிப்போட இலங்கைக்கு உதவவேண்டும் என்பதும், தங்கள் நாட்டில் உள்ளது போன்ற அரை குறை / பூரணமற்ற சமஷ்டி முறைக்கு இலங்கையிலும் வழிவகுக்க வேண்டும் என்ற வஞ்சக நோக்கம் இந்தியாவின் ஆட்சியாளர்களின் பெரு விருப்பம் என்பதும் இதிலிருந்து புலப்படு கிறது.

மொத்தத்தில் புதுடில்லியும், கொழும்பும் 'ஒரே குட்டையில் ஊறிய 'இரு மட்டைகள்' என்பதை எவ்வித கலங்கல் தன்மையும் இன்றித் தெளிவாகத் தெரியவைத்துள்ளது ஜனாதிபதி மஹிந்தவின் இந்திய விஜயம்!

# நாகபூஷணியின் கொடியேற்றம் காணத் திரண்டது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூட்டம்!

## 'உயிர் பாதுகாப்பு அங்கி' அணிந்தே அனைவரும் பயணிக்க அனுமதி





நயினாதீவு, ஜூன்13

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழா பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் 'அரோகரா...' கோஷத்தின் மத்தியில் நேற்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் பக்தி பூர்வமாக ஆரம்பமானது.

கொடியேற்ற நிகழ்வில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தென்னிலங்கையில் இருந்தும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

ஆலயத்துக்கு திரண்டு வந்த பக்தர்களுக்கு நேற்று சிறந்த முறையில் போக்குவரத்துச் சேவைகள் இடம் பெற்றன. குறிகாட்டுவான் இறங்கு துறையில் முப்பதுக்கும் அதிகமான படகுகள் சேவையில் ஈடுபட்டிருந்தன.

பக்தர்களுக்கு குறிகாட்டுவானிலும் நயினாதீவிலும் கடற்படையி னர், கிராம அலுவலர்கள், பொலிஸார் மற்றும் தொண்டர் படையினர் சிறப்பாக சேவைகளை வழங்கினர்.

இதேவேளைநேற்றுக் காலை 5 மணி தொடக்கம் யாழ்.பஸ் நிலையத்தில் பக்தர்கள் நயினாதீவு செல்லக் காத்திருந்த போதும் 7 மணிக்கே பஸ் குறிகாட்டுவான் செல்லும் என அதிகாரி ஒருவர் கூறியதால், பக்தர்கள் தனியாரின் பஸ்களில் முண்டியடித்துப் பயணித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பக்தர்களுக்கு அமுதசுரபி அன்னாத சபையும் வழமைபோல் சிறந்த சேவையை வழங்கியது. படகுகளில் பயணித்த பக்தர்கள் அனைவரும் உயிர் பாதுகாப்பு அங்கிகளை அணிந்தே படகுகளில் ஏற அனுமதிக்கப்பட்டனர். (ஒ-6-111)

## நயினைக் கொடியேற்ற திருவிழாவில் ஆலயத்தினுள் 18 பவுண் நகைகள் 'அபேஸ்'

நயினாதீவு, ஜூன்13

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவம் ஆரம்பமான நேற்றையதினம் கொடியேற்றத்தைக் காண்பதற்காக ஆலயத்தினுள் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கூடியிருந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தை சாதகமாக்கிக் கொண்ட திருட்டுப் பேர்வழிகள் பக்தர்களின் நகைகளை அபகரித்துக் கொண்டு நழுவிவிட்டனர்.

ஒரு தாலிக்கொடி உட்பட சங்கிலி, காப்பு என சுமார் 18 பவுண் நகைகள் திருட்டுப் போய்விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திருட்டுக்களை அடுத்து ஆலயத்தின் உள்ளே பொலீஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். திருட்டுத் தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை. (ஒ-111)

## 'யாழ்ப்பாணத்தில் ஜேர்மன் வாரம்' நாளை முதல் ஐந்து நாள்கள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன்13

ஜேர்மன் வாரத்தை ஒட்டி யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகள் நாளை ஆரம்பமாகி தொடர்ந்து ஐந்து நாள்கள் நடைபெறவுள்ளன.

கொழும்புக்கு வெளியே முதன் முறையாக ஜேர்மன் வார நிகழ்வுகள் யாழ்ப்பாணத்திலே இடம்பெறவுள்ளன.

இந்த விழாவையொட்டி ஜேர்மன் தூதுவர் ஜென்ஸ் புளொட்னர் நாளை முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணம் கோவில் வீதியிலுள்ள ஜி.ரி.இசற் விருந்தினர் விடுதியில் பத்திரிகையாளர்களுடன் விசேட சந்திப்பொன்றை நடத்தவுள்ளார்.

நாளை மாலை 5 மணியளவில் யாழ். பொது நூலக மண்டபத்தில் 'யாழ்ப்பாணத்தில் ஜேர்மன் வாரம்' நிகழ்வுகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

நாளைமறுதினம் 15ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரையான நிகழ்ச்சிகள் யாவும் யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள கலைத்தூது கலையகத்தின் வளாகத்தில் நடைபெறவிருக்கின்றன.

நாளை மறுதினம் செவ்வாய் மாலை 5 மணிக்கு தமிழ் மொழியிலான அரங்க நிகழ்வும், 16ஆம் திகதி மாலை 4 மணிக்கு 'ஜேர்மனியில் கல்வி கற்றல்' என்னும் தலைப்பில் 'டாட்' நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதியான ஹெய்டி ஸ்ரெயினரின் உரையும் இடம்பெறவிருக்கின்றன.

அதே தினம் மாலை 5 மணிக்கும், 17ஆம் திகதி மாலை 6 மணிக்கும் 18ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கும் ஜேர்மன் மொழியிலான திரைப் படங்கள் திரையிடப்படும்.

18ஆம் திகதி 4.45 மணிக்கு தென்னாபிரிக்காவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் ஜேர்மன் சேர்பிய அணிகளுக்கிடையிலான போட்டி ஆறு மீற்றர் நீளமான திரையில் ஒளி பரப்பப்படும் - இந் நிகழ்வுகளுக்கான அனுமதி திரையில் ஒளிபரப்பப் படும் .

இந் நிகழ்ச்சிகளுக்கான அனுமதி இலசவம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-க)

## 'குமுதினி'யின் தற்போதைய நிலை காரணமாக ஒரு தடவையில் 100 பேரே பயணிக்கலாம்

### அதனாலேயே 'டோக்கன்' முறை அறிமுகம்

யாழ்ப்பாணம், ஜூன்13

குறிகாட்டுவான் - நெடுந்தீவு இடையே சேவையில் ஈடுபட்டுவரும் குமுதினி படகில் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பயணிகள் ஏற்றப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

குமுதினிப் படகு அடிக்கடி பழுதடைந்து வருகின்றது. அளவுக் கதிகமான பயணிகள் ஏற்றப்படுவதும் இதற்கு ஒரு காரணம். இதுவரை காலமும் இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகள் ஒரே தடவையில் ஏற்றப்பட்டு வந்தனர். ஆனால் குமுதினி படகின் தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டு இனி மேல் மட்டுப்படுத்திய அளவிலேயே பயணிகள் ஏற்றப்படுவார்கள்.

இதற்காக 'டோக்கன்' வழங்கப்படும் நடைமுறை அமுல் படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு தடவையில் 100 பயணிகளுக்கு 'டோக்கன்' வழங்கப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-224)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 31 14.06.2010 | |
| திங்கட்ழமை | |
| திதி | : துதியை |
| | பி.ப. 01.57 வரை |
| நட்சத்திரம் | : திருவாதிரை |
| | மு.ப. 08.46 வரை |
| சுபநேரம் | : 11.53 - 01.23 |
| ராகுகாலம் | : 07.23 - 08.53 |

## முன்னாள் அதிபருக்கு சேவைநலன் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 13

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் கி.மகேந்திர ராசாவின் சேவையைக் கௌரவிக்கும் முகமாக கனடா பழைய மாணவர் சங்கத்தினர் நடத்தும் சேவை நலன் பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளைமண்டபத்தில் அருணோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ந.சிவபாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-6)

(சிறப்பிதழ் 14ஆம், 15ஆம் பக்கங்களில்.)

## பாஷையூர் புனித அந்தோனியார் திருச்சொரூப பவனி இன்று

யாழ்ப்பாணம்,ஜூன்13

பிரசித்திபெற்ற யாழ். பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் பெருவிழாவின் இறுதிநாளான இன்று ஞாயிற்றுக்கிழமை தூய அந்தோனியாரின் திருச்சொரூப பவனி வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

160 ஆண்டுகள் நிறைவில் இன்று நடைபெறும் புனிதரின் திருச்சொரூப பவனியைக் கண்டு களிக்க குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலுமிருந்து பல்லாயிரக்கணக் கானோர் திரண்டு வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-6)

*(சிறப்பிதழ் 10-19ஆம் பக்கங்களில் )*

## முல்லை. ஆசிரியரின் ஜூன் மாதச் சம்பளம்

முல்லைத்தீவு, ஜூன் 13

யாழ்.மாவட்டத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றும் முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரியர்கள், ஜூன் மாத சம்பளப் பத்திரத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் மறுநாள் புதன்கிழமையும் -

யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் கையொப்பம் இடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் மா.தேவேந்திரன் அறிவித்துள்ளார். (ஒ)

## வீணியவரையில் நாளை பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

மாவிட்டபுரம் வீணியவரை இராஜ ராஜேஸ்வரி ஆலயத்தில் பாலஸ்தாபன கும்பாபிஷேக பெருவிழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாலஸ்தாபன கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் இன்று இரவு ஆரம்பமாகும். இந்தக் கிரியைகளில் பக்தர்கள் கலந்துகொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது என்றும் பக்தர்கள் தமது சொந்த வாகனங்களில் ஆலயத்துக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் ஆலய நிர்வாகி அ.துரைச்சாமி ஐயர் தெரிவித்துள்ளார். (ஒ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டில் கடும்காற்று தொடர்ந்து வீசும்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். மாவட்டத்தில் அடுத்த இரு தினங்களுக்கு மழை பெய்யும் சாத்தியம் குறைவாக இருக்கும். அதேசமயம் கடும் காற்று வீசும் என்று வானிலை ஆராய்ச்சி நிலைய யாழ். அலுவலகம் நேற்றிரவு தெரிவித்தது.

நாடுமுழுவதும் அடுத்த இரு தினங்கள் கடும் காற்று வீசுவதுடன், கடல் கொந்தளிப்பு காணப்படும் என்றும் -

மலையகத்தில் தொடர்ந்து மழை பெய்வதால் காற்று குளிர்த்தன்மையுடையதாக இருக்கும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-1)

## தரம் 5 புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை

கொழும்பு, ஜூன் 13

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களைப் பரீட்சைக்குத் தயாரப்படுத்துவதற்கான முன்னோடிப் பரீட்சையை காயத்திரி பப்ளிகேஷன் நிறுவனம் நாடளாவிய ரீதியில் நடத்தவுள்ளது.

இரண்டு பகுதி வினாத்தாள்களைக் கொண்ட இப் பரீட்சை அனுமான வினாக்களைக் கொண்டதாக இருக்கும். இப் பரீட்சையில் திறமையாகச் சித்தியடையும் மாணவர்களுக்கு பரிசில்களும் சித்தியடையும் அனைவருக்கும் சான்றிதழும் வழங்கப்படும்.

கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கண்டி, நுவரெலியா, ஹற்றன், பலாங்கொடை, பாணந்துறை,நீர்கொழும்பு, புத்தளம், கல்முனை போன்ற முக்கிய நகரங்களில் பரீட்சை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

இப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் காயத்திரி புத்தகசாலை, இல. 257/1F காலி வீதி, வெள்ளவத்தை என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-1)

## யாழ். வந்த மட்டு. பஸ் அரியாலையில் விபத்து

கைதடி, ஜூன் 13

மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் அரியாலை நெடுங்குளம் சந்திக்குச் சமீபமாக - திறந்த வெளி அரங்குக்கு அருகில் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 9 மணிக்கு இடம்பெற்றுள்ளது. மேற்படி பஸ் மட்டக்களப்பில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு யாழ்.நகர் நோக்கி வந்த தாகவும் எதிரே வந்த வாகனத்திற்கு வழிவிட ஒதுங்கிய வேளையில் முதல்நாள் பெய்தந்த கடும் மழையின் ஈரம் காரணமாக பாதையை விட்டு விலகி அருகே இருந்த பள்ளத்தில் சரிந்து விபத்துக்குள்ளானது. தெய்வாதீனமாக உயிராபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை. (க-288)

## அதிபர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் புதிதாக நியமனம் பெற்ற அதிபர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். வலயக் கல்வி அலுவலகத்தின் முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (6-72)

# 'அலுக்கோஸ்' பதவி ஜனாதிபதியின் குடும்பத்தவருக்கு வழங்கப்பட்டுள்ளதா?

### ஜெனரல் பொன்சேகாவுக்கு வந்துள்ள சந்தேகம்

கொழும்பு,ஜூன்13

மரணதண்டனையை நிறைவேற்றும் 'அலுக்கோஸ்' பதவிக்கு நாட்டில் வெற்றிடம் நிலவி வருகின்றது. ஜனாதிபதி குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளாரோ என்று கருத வேண்டியுள்ளது.

பி.பி.ஸியின் 'ஹார்ட் டோக்' நிகழ்ச்சிக்கு வழங்கிய பேட்டியில் முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெனரல் சரத்பொன்சேகா மேற்கண்டவாறு கூறினார்.

''இலங்கையில் கடந்த வருடம் நடந்த இறுதி யுத்தத்தின்போது இராணுவத்தின் உயர் அதிகாரிகள் சிலர் எல்லை மீறிய உத்தரவுகளை (போர்க் குற்றங்களை) விடுத்தார்கள் என்று சரத் பொன்சேகா தொடர்ந்து கூறிவந்தால் அவர் தூக்கிலிடப்படுவார் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஏற்கனவே 'ஹார்ட் டோக்' நிகழ்ச்சியில் தெரிவித்திருந்தார்.

அவருக்கு பதில் அளித்து அதேநிகழ்ச்சிக்கு அளித்த செவ்வியிலேயே சரத்பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போரின் இறுதிக்கட்டத்தில் நானோ எனக்குக் கீழ் பணிபுரிந்த அதிகாரிகளோ போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை. இந் நிலையில் நாங்கள் போர்க்குற்ற விசாரணைகளுக்கு முகம் கொடுக்க எப்போதும் தயாராகவே இருக்கின்றோம்.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றவிசாரணைக்கு முகம் கொடுக்க மறுப்பது, அவர் ஏதோ பாரதூரமான விடயத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பதையே காட்டுகிறது - என்றும் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-1)

# மகாஜனக் கல்லூரி நூற்றாண்டு விழா; 18 இல் முத்திரை வெளியீட்டு நிகழ்வு

### தபால் அமைச்சர் ஜீவன் குமார ணதுங்க பிரதம அதிதி

யாழ்ப்பாணம், ஜூன் 13

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி முத்திரை ஒன்று எதிர்வரும் 18ஆம் திகதி வெளியிடப்படவிருக்கின்றது.

இது தொடர்பான நிகழ்வு அன்று முற்பகல் 10 மணிக்கு பாவலர் துரையப்பாப்பிள்ளை மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்த சயனன் தலைமையில் நடைபெறும்.

தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் ஜீவன் குமாரணதுங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு முத்திரையை வெளியிட்டு வைப்பார்.

இந் நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக தபால் மா அதிபர் எம்.கே.பி. திசாநாயக்க, அஞ்சல் திணைக்கள முத்திரைப் பணியக பணிப்பாளர் ஜே. எம்.டி.என்.அஸ்நேசன் ஆகியோர் கலந்துகொள்வர். (ஒ-1)

## நெடுந்தீவு மீனவர் இருவர் கரை திரும்பவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 13

நெடுந்தீவில் இருந்து நேற்றுமுன்தினம் மாலை ''பிளாஸ்ரிக்'' படகில் தொழிலுக்குப் புறப்பட்டுச் சென்ற இரு மீனவர்கள் நேற்று மாலைவரை கரை திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

அம்புறோஸ் அருள்தாஸ் (வயது 49), அந்தோனி டானியல் (வயது 37) ஆகியோரே தொழிலுக்காகப் பிளாஸ்டிக் படகில் புறப்பட்டவர்கள். அவர்கள் நேற்றுக் காலை கரை திரும்பாததையடுத்து சக தொழிலாளர்கள் படகுகளில் சென்று தேடுதல் நடத்தினர்.

அவர்கள் தொடர்பாகத் தடயம் எதுவும் கிடைக்காத நிலையில் தேடிச் சென்றவர்கள் கரை திரும்பினர்.

நேற்று இரவுவரை இரு மீனவர்களும் கரை திரும்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-1)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

✱ அதற்குப் பதிலாக கிராமிய மட்டத்தில் பரவலான கனதியான கூடுதல் அதிகாரங்கள் கொண்ட மக்கள் சபைகள் (ஜன சபாக்ககள்) நிறுவப்படும்.

✱ இந்தியாவில் இயங்கும் பஞ்சாயத்து சபையை ஒத்தவையாக மக்கள் சபைகள் இருக்கும். எனினும் பஞ்சாயத்து சபைகளுக்கு உள்ள அதிகாரங்களை ஒத்த அதிகாரங்கள் வழங்கப்படமாட்டா.

உத்தேச புதிய நிர்வாக முறை தொடர்பான சட்டநகல் இப்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது.

கொழும்பில் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அமைச்சர் வீரவன்ஸ இந்தத் தகவலைத் தெரிவித்திருக்கிறார். (அ-1)

## நிக்கோபார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு, கண்டி, அனுராதபுரம் , மட்டக்களப்பு மாவட்டங்களில் நிலஅதிர்வுகள் உணரப்பட்டதாகவும் கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்தது.

இந்தோனேஷிய சுமாத்திராத் தீவுகளுக்கு வடமேற்கே இந்து சமுத்திரத்தை அண்டிய நாடுகளில் சுனாமி ஆபத்து உண்டு என்று இன்று அதிகாலை 2.15 மணிக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

சுனாமித் தாக்குதல் அச்சம் இருப்பதால் கரையோரப் பகுதிகளில் வாழும் மக்களை அவதானமாக இருக்குமாறு கொழும்பு வானிலை அவதான நிலையம் மேலும் அறிவித்துள்ளது.

கடலுக்குச் செல்வதை தவிர்க்குமாறும் கடலுக்குச் சென்றவர்களை உடன் திரும்புமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-1-6)

## விரும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டி.ஐ.ஜி. லத்திகா சரண் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டி ருப்பதாவது:-

ஆரம்பகட்ட விசாரணைகளில் இதனை மாவோயிஸ்டுகள் செய்யவில்லை என்றும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்பினரே செய்துள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது. இதற்காக உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வெடிபொருள்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. இதுகுறித்து கியூப்பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்வர் - என்று தெரி[illegible] (அ-6)

## புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகளை ஒடுக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை சட்டத்தை நிலைநாட்டும் அமைப்புகள் எடுக்கும் என்றும் அவர் கூறினார்.

பயங்கரவாதத்தின் வேர் நாட்டில் எங்கும் முளைவிட அனுமதிக்கக் கூடாது. சகல அரசியல் கட்சிகளும் பயங்கரவாதத்தை ஒழிக்க ஒன்றிணைந்து செயற்படவேண்டும் பங்கரவாதமோ பயங்கரவாதிகளோ நாட்டில் எந்தப் பகுதியிலும் வேர் விட அனுமதிக்கக் கூடாது என்றும் அமைச்சர் வி.நாரயணசாமி வலியுறுத்தினார்.(அ-1)

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடுகதி நெடுஞ்சாலை, மாத்தறை - கதிர்காமம் ரயில்பாதை, நுரைச்சோலை அனல் மின் நிலையம், அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி, மாத்தறை சர்வதேச விமான நிலையம், கொழும்பு கலைக் கூடம் போன்ற திட்டங்களை விரைவாகப் பூர்த்தி செய்ய சீனா தனது பங்களிப்பை வழங்கும் என்றும் துணைப்பிரதமர் சியாங் தெரிவித்தார்.

போருக்குப் பின் நாட்டைக் கட்டி எழுப்ப சீனா வழங்கிவரும் உதவிகளுக்காக ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். இலங்கையுடன் தொடர்ந்தும் நட்புறவு பேணப்படும் என்று சீனாவின் துணைப் பிரதமர் கூறினார்.

**மேலும் ஒப்பந்தங்கள்**

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் மேலும் ஆறு ஒப்பந்தங்கள் நேற்றுக் கைச்சாத்தாகின.

பொருளாதார மற்றும் தொழில் நுட்ப ஒத்துழைப்பு, நெடுஞ்சாலை அபிவிருத்தி, தொடர்பாடல் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, துறைமுக அபிவிருத்தி, அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி 2ஆம் கட்டம், பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப அபிவிருத்தி ஆகியன தொடர்பாகவே உடன்பாடுகள் கைச்சாத்தாகின.

இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பஸில் ராஜபக்ஷ, டலஸ் அழகப்பெரும, கெஹலிய ரம்புக்வெல மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் பங்கேற்றனர். (ஒ-1)


## தச்சு வேலையாள்கள் தேவை

தச்சுவேலை தெரிந்த வேலையாள்கள் உடன்தேவை. பழக விரும்புபவர்களும், தொடர்பு கொள்ளலாம். கூடிய சம்பளம், உணவு வசதிகளும் செய்து தரப்படும். தொடர்ச்சியான வேலையும், மேலதிகநேர வேலையும் செய்யலாம். மேலதிகநேரக் கொடுப்பனவும் வழங்கப்படும்.
தொடர்பு : விப்ரா மரத்தளபாட நிலையம், 61, இராமநாதன் வீதி, கலட்டி. (நாச்சிமார் கோவில் முன்பாக)
T.P. : 0217912783

## விற்பனைக்கு

நெல்லியடி - பருத்தித்துறை பிரதான வீதியில் அமைந்துள்ள நவிட்டலி என்னும் இரண்டு பரப்புக் காணியும், அதில் அமைந்துள்ள பூர்த்தியாகாத மாடி வீடும் உடன் விற்பனைக்குண்டு. தற்பொழுது அதில் மருத்துவமனை நடைபெறுகின்றது.
தொடர்புகளுக்கு : சி.சங்கரப்பிள்ளை ஆசிரியர், குருந்தட்டி, நெல்லியடி, கரவெட்டி
தொ.பே.இல. :-0212262066

## Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
**Vivekananda Academy**
**(Centre for International language Studies)**
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்
குறிப்பு: ஒக்டோபர் மாத ஜேர்மன் எம்பஸி பரீட்சைகளுக்கான Deutsch புதிய வகுப்புக்கள் தற்போது நடைபெறுகின்றன.
GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 0779927117


## மரண அறிவித்தல்

*செல்லப்பா சுப்பிரமணியம்*
**(ஓய்வுபெற்ற காசாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)**



அராலியைப் பிறப்பிடமாகவும் அம்மன் வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவரு மாகிய செல்லப்பா சுப்பிரமணியம் கடந்த 09.06.2010 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பானுப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகனும், பாக்கியத்தின் அன்புக் கணவரும், மணிமேகலா (பிரான்ஸ்), சங்கதேவ் (கனடா), அனந்தராஜ் (கனடா), சித்திராங்கன் (பிரான்ஸ்), சாந்திலால் (கனடா), ரவிச்சந்திரன் (கனடா), துஸ்யந்தி (பிரான்ஸ்), கிரிஷாந்தி (கனடா) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
*அம்மன் வீதி,பண்டத்தரிப்பு.* (99452) மனைவி, பிள்ளைகள்.

## சேவைநலன் பாராட்டு



பிரியாவிடை பெற்றுச்செல்லும் எம் முகாமையாளர்
**திரு. மாணிக்கம் சந்திரகாந்தன்**
அவர்கள் தெளிந்த நதியெனத் தொடரும் வாழ்வில் மகிழ்ந்த மதியினை எப்போதும் கொண்டு
நிறைந்த செல்வமும் நிலையான இன்பமும்
நீங்காது பெற்று வாழ்ந்திருக்க, உளம் கனிந்து; நிறைந்து வாழ்த்துகின்றோம். வாழ்க...!

மனம் நிறைந்து வாழ்த்தும்
மக்கள் வங்கி
சுன்னாகக் கிளையினர்.
(99444)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்
உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கும் மங்களகரமான நிகழ்வுகளுக்கு...
திருமண அழைப்பிதழ் காட்சியறை
இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 300ற்கு மேற்பட்ட பல வர்ண புத்தம் புதிய டிசைன்களுடன் மலிந்த விலையில் பிறின்டிங் வசதியுடன் பெற்றுக்கொள்ளலாம்.
MATHI COLOURS PRINTERS
WEDDING CARD SHOW ROOM
15/2, முருகேசர் லேன், நல்லூர்.
T.P: 021 2229285, 077 7222524
e-mail: mathicolours@gmail.com
web : www.mathicolours.com



திறப்பு விழா
AKI
Beauty Care


இன்று (13.06.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு உள்ள சுபவேளையில் திறந்துவைக்கப்படவுள்ளது. எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
எமது சேவைகள்:
மணப்பெண் அலங்காரம், ஐசிங், கேக்,தையல், சிகை அலங்காரங்கள், சாறி வேலைப்பாடுகள் இவை அனைத்தும் செய்துகொடுக்கப்படும்.
No.214,
Kasthuriyar Rd, Jaffna.
0771559113, 0114916316.


## பிள்ளை மனம் கல்லு

அன்று
வயிற்றில்
இருந்தபோதும்
என்னை
நீ
உதைத்தாய்

இன்று
வளர்ந்தவன்
ஆனபின்பும்
என்னை நீ
உதைத்தாய்

வயிற்றில்
இருந்து கொண்டு
நீ
உதைத்தபோது
பரவசப்பட்டேன்
வளர்ந்து
வந்தபின்
மகனே
உதைத்தாயே.....
அம்மா
உயிரையே
விட்டேன்.

— யோ.புரட்சி.


இரு வழி ! ஒரு வழி
பயணத்திற்கு
சர்வதேச அங்கீகாரம் பெற்ற...


SPICE TRAVELS & TOURS (PVT) LTD®
IATA Accredited Agent
யாழ் மண்ணில் நம்பமுடியாத
விலைக்குறைப்பில் விமான டிக்கட்டுகள்

| | |
|---|---|
| Colombo / Chennai / Colombo<br>கொழும்பு / சென்னை / கொழும்பு | Rs. 12,400/- |
| Colombo / London<br>கொழும்பு / லண்டன் | Rs. 56,500/- (OW) Direct<br>Rs. 39,500/- (OW) |
| Colombo / Dubai<br>கொழும்பு / டுபாய் | Rs. 16,000/- (OW) Direct |
| Colombo / Singapore / Colombo<br>கொழும்பு / சிங்கப்பூர் / கொழும்பு | Rs. 29,200/- (OW) |
| Colombo / Milan<br>கொழும்பு / மிலான் | Rs. 63,000/-<br>Rs. 41,000/- (OW) |
| Colombo / Paris<br>கொழும்பு / பரிஸ் | Rs. 54,800/- (OW) Direct<br>Rs. 95,500/- |

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®
இல. 412, (முதலாம் மாடி). வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(Sangeetha Mobile Links (Pvt) Ltd. ஊடாக)
தொலைபேசி : 021-2228591 தொலைநகல் : 021-2228546
24 Hrs Fly Cool Line : 0773 916 416
FLEX Graphic



MeadJohnson


மூளைக் கலங்களின் தொடர்பாடலுக்கும்
அறிவைக் கிரகிக்கும் ஆற்றலுக்கும்
DHA* உதவுகின்றது


1-3 வயது குழந்தைகளுக்கு 3 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு

4 மடங்கிற்கு மேல் அதிகமான DHA கொண்ட
புதிய என்ஃபாகுரோ A+ மற்றும் என்ஃபாகிட் A+

உங்கள் பிள்ளையின் வளரும் பருவத்தில், மூளைக் கலங்கள் வலிமையடைந்து ஒன்றுடனொன்று தொடர்பாடுவதற்கு உதவும் பல்வேறு தூண்டுதல்களுக்கு அவன் முகம்கொடுக்கிறான். மூளைக் கலங்களின் நேர்த்தியான தொடர்பாடல் மூலமே அறிவைக் கிரகிக்கும் ஆற்றல் விருத்தியடைகின்றது. எனவே, இந்த முக்கியமான பருவத்தில் மூளைக் கலங்களின் தொடர்பாடலை ஊக்குவிக்கும் DHA போன்ற ஊட்டச்சத்துக்கள் உங்கள் குழந்தைக்கு அவசியம்.

4 மடங்கிற்கு மேல் அதிகமான DHA* மற்றும் நார்த் தன்மையை (Inulin & FOS) கொண்ட புதிய என்ஃபாகுரோ A+ மற்றும் என்ஃபாகிட் A+ பாலுணவை உங்கள் குழந்தைக்குக் கொடுங்கள்.

இன்றே, உங்கள் குழந்தையின் அறிவு திரட்டும் ஆற்றலை அதிகபட்சம் விருத்திசெய்யுங்கள்.

SUSTAGEN® தயாரிப்பாளர்களின் மற்றுமொரு உன்னதமான தயாரிப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலியலிலும் நடத்தையியலிலும் தென்படும் அறிகுறிகளைக் கொண்டு மன அழுத்தத்துக்கு உள்ளானோரை இனம் காண இயலும்

மன அழுத்தத்தின் முக்கிய அறிகுறிகள் குறித்து கடந்த வாரத்தில் பார்த்தோம். அத்தகைய மன அழுத்தத்துக்கு உட்படுவோரது நடத்தையியலில் ஏற்படும் மாறுதல் அறிகுறிகள் குறித்து தொடர்ந்து கவனிப் போம்.

1. கதைக்கும் போதும் உச்சரிக்கும் போதும் ஏற்படும் தடுமாற்றமும் தெளிவற்ற தன்மையும் (Stuttering)



2. தேவையற்ற அழுகையும் சோர்வும் (Crying)
3. திடீர் உணர்ச்சிவசப்படல் (impulsively)
4. நரம்புத் தளர்வு அல்லது சோர்வான நிலை (Nervous)
5.அவசர செயற்பாடுகள் (Snapping)
6. பற்களை நெருடுதல் (Teeth Grinding)
7. எண்ணங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் புகைத்தல், மது அருந்துதல், போதைப் பொருள் பாவனை போன்றவற்றை நாடுவதனூடாக மனத்தை சாந்திப்படுத்த முயலுதல்.

## மன அழுத்தங்களும் அதன் இயலாமையைத் தூண்டும் எண்ணங்களும் 2

8. தரையில் முகம்குப்புறப் படுத்தல் (Prone)
9. உணவில் நாட்டம் இன்மை, பசியின்மை, சில சந்தர்ப்பங்களில் அளவுக்கு அதிகமான பசி ஏற்படுதல்.

**மன அழுத்தம் மனித எண்ணங்களில் ஏற்படுத்தும் மாறுதல் அறிகுறிகள்**

1. தாழ்வு மனப்பான்மை (Self- criticism): தங்களைத் தாங்களே எண்ணங்களின் ஊடாகக் குறைத்து மதிப்பிடல்.
2. சரியான, பொருத்தமான தீர்மானங்களை எடுக்கமுடியாது குழப்பம் அடைந்த மனம். நடைமுறைச் செயற்பாடுகளைக் கிரகிக்க முடியாத தன்மை.
3. மறதிநிலை அதிகரித்துக் காணப்படுதல்.
4. எதிர்காலத்தை நோக்கிய தன்னை மறந்த அளவுக்கதிகமான சிந்தனை.
5. நடந்து முடிந்த, மறக்கமுடியாத துன்பச் சம்பவங்களை அடிக்கடி நினைவுபடுத்தலும் அதனை பலமுறை பலருக்குக் கூறுதலும்.
6. ஒரு அர்த்தமற்ற பயம் கலந்த, தோற்றுப் போய்விட்டதாக ஒரு தேவையற்ற சிந்தனை.

**மன அழுத்தம் மனித உடலியலில் ஏற்படுத்தும் அறிகுறிகள்**

1. திடீர் இறுக்கமடையும் தசைநார்கள்
2. குளிர்ச்சியான வியர்வையுடன் கூடிய கைகள்
3. கழுத்து, நாரிப்பகுதித் தசைகளில் ஏற்படும் பிடிப்புக்கள்
4. அமைதியான ஆழ்ந்த உறக்கம் அற்ற நிலை.
5. வயிற்றுப்பகுதியில் ஏற்படும் சமிபாடு சார்ந்த குழப்பங்கள்.
6. குளிர் காய்ச்சல் போன்ற அறிகுறிகள்
7. சோர்வடைந்த நிலை.
8. அதிகரித்த இதயத்துடிப்பு வீதம்
9. தள்ளாடிய அல்லது சமநிலை குழப்பமடைதல்.
10. வரட்சியடைந்த நாக்கும். உதடுகளின் ஓரங்களும்.

மனத்திலே ஒரு சுமை தொடர்ச்சியாக இருக்கும் போது மேற் கூறப்பட்ட அறிகுறிகள் படிப்படியாக வெளிக்காட்டப்பட்டு மன அழுத்த நிலை வெளிப்படுத்தப்படுகின்றது. இதன் ஆரம்பக்கட்ட நிலைகளில் தன்னிச்சையாக மீள முயலுகின்றன. பெரும்பாலும் மீண்டும் விடுகின்றன. ஆனால் ஒருசிலரில் மட்டும் சரியான முறையில் சிகிச்சை பெறாத உயிராபத்துக்களை ஏற்படுத்துகின்றது.

மனிதன் தனது அன்றாட செயற்பாடுகளில் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது. இவற்றை சவால்களாக எடுக்கும் போது அவன் அதிலிருந்து இலகுவில் மீண்டு விடுவதோடு வாழ்க்கையின் அனுபவங்களையும் நெளிவு சுழிவுகளையும் அறிந்து இதன் மூலம் எதிர்கால வாழ்க்கையை வளப்படுத்தவும் முடிகின்றது. அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் சாதாரண மன அழுத்தத்தை பின்வரும் அறிகுறிகள் எடுத்துக்காட்டுகின்றன.

1. இலகுவில் குழப்பமடைதல்.
2. சிறிய, சிறிய விடையங்களுக்குக் கூட குழப்பம்.
3. ஒரு தனிமை உணர்வு.
4. சந்தோசமற்ற மனநிலை.
5. உறக்கமின்மை.
6. ஒழுங்கற்ற உணவுப்பழக்கம்.
7. சுவாச இடர்பாடுகள்.
8. கிரகிக்கும் ஆற்றல் குறைவு.
9. எதிலும் ஒரு ஆர்வமற்ற நிலை.
10 அளவுக்கு மிஞ்சிய களைப்பு, உடல் களைக்காத போதும் உள்ளம் களைத்து இயலாமை என்னும் உணர்வு உந்தப்படுதல்.

**மன அழுத்தத்தை ஏற்படுத்தும் காரணிகள்:**

மனிதர்களில் இந்த மன அழுத்தம் பொதுவாக அக,புற, சூழலியல் மாற்றம் என்பவற்றின் ஊடாகவே தூண்டப்படுகின்றது. உதாரணமாக இங்கே நாம் சில முக்கிய காரணிகளை மட்டும் ஆராய்ந்து பார்ப்பது போதுமானதாக இருக்கும் என நம்புகிறேன்.

1. மாணவர்கள் எதிர்நோக்கும் தடைதாண்டல் பரீட்சைகள்:

பொதுவாகப் பாடசாலை மாணவர்கள் என்றாலும் சரி. உயர் கல்விக்கூட மாணவர்கள் என்றா லும் சரி வாழ்க்கையில் அவரவர் தமது இலட்சியத்துடன் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் இந்த பரீட்சைகளை எதிர்நோக்கி அதிலே அவர்கள் தோல்வியடையும் போது ஒருசிலர் மட்டும் தாம் இந்த உலக வாழ்க்கை யில் ஏதோ தோற்றுவிட்டதாக ஒரு மாயத்தை தம்முள்ளே வளர்த்து அதைப் பெருக்கி மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது வெளியில் மற்றவர்களுடன் பகிரவும் மனம் இன்றி இறுதியில் தங்களைத் தாங்களே தண்டித்துக் கொள்கிறார்கள்.

அண்மையில் கூட ஒரு சிறிய கால இடைவெளியில் அடுத்தடுத்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் தற்கொலை செய்து கொண்ட செய்திகளை நாம் பத்திரிகைகளிலேயே படித்துள்ளோம். இது ஒரு துன்பகரமான நிகழ்வு என்றே கூற வேண்டும். உண்மையில் இவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்களாதலால், அவர்களிடம் ஏதோ ஒரு திறமை இருந்திருக்கிறது. அப்பிடி என்றால் ஏன் அவர்கள் அவ்வாறான ஒரு பிழையான முடிவுக்குத் தள்ளப்பட்டார்கள். காரணம் அளவுக்கு அதிகமான மன அழுத்தம். உண்மையில் அவர்களின் பின்புலக் காரணங்களை சற்றே ஆய்ந்து பார்த்தால் அவர்கள் வன்னியில் இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்டவர்கள் கடந்த காலப் போர்ச் சூழலில் ஓடி, ஓடி இளைத்து பிணங்களையும்,

## வாழ்க்கையின் அக, புறச் சூழலியல் மாற்றங்களே மன அழுத்தத்தை ஏற்படுத்தக் காரணிகள் ஆகின்றன

சதைப்பிண்டங்களையும், இரத்தக் கறைகளையும் கடந்து, உறவுகளை இழந்து உற்றாரைக் கைவிட்டு உயிரைக்கையில் ஏந்தி முகாம்களிலே சித்திரவதைப் பட்டு மிக அண்மையில் விடுவிக்கப்பட்டவர்கள். மீண்டும் ஏதோ ஒரு உந்துதலில் தாம் கற்ற பல்கலைக்கழகத்தில் ஒரு இலட்சியத்தோடு, புதிய உத்வேகத்தோடு கற்கப் புறப்படுகிறார்கள். வந்ததும் வராததும் அவர்களுக்குள் காத்திருந்தது தடை தாண்டல் பரீட்சைகளே. அந்தோ பாவம் அடிமுடி தெரியாமல் வந்தவர்களுக்கு தடைதாண்ட முடியவில்லை.

ஏற்கனவே துன்பப்பட்டு, துயரப்பட்டு, புண்பட்ட அவர்களின் மனம், தமது இலட்சியங்கள் தோற்றுப்போய்விட்டனவே என்ற அந்த இயலாமை எண்ணம் அடிமனதில் அடிக்கடி உறுத்தும்போது இவர்கள் தற்கொலை; இனி வாழமுடியாது என்ற போலியான எண்ணத்தினால் அடித்துச் செல்லப்பட்டு விடுகிறார்கள். இதுவே யதார்த்த நிகழ்வுகள். உண்மையில் பல்கலைக்கழகங்களில் ஒவ்வோர் பீடத்திற்கும் ஒரு மாணவ ஆலோசகர் (students counsellor) நியமிக்கப்படுகிறார்கள். அவர்களது கடமைகளில் ஒன்று மாணவர்களைத் தனிப்பட்ட முறைகளில் அவர்களின் நடத்தைகளை அவதானித்து வேறுபாடானவர்களைத் தனிப்பட்ட முறையில் சந்தித்து அவர்களுடன் நட்பாகப் பழகி அவர்களுடைய பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றை உரிய முறையில் இயலுமான வரை தீர்த்து வைப்பதன் ஊடாக மாணவர்களின் வாழ்க்கையை வளப்படுத்தும் அற்புதமான பணி. ஆனால் தற்போதைய சூழலில் உண்மையில் இந்த மாணவ ஆலோசகர் எந்த அளவு உளவியல் அறிவு படைத்தவர் (Psychology) என்பது கேள்விக்குறி. அத்துடன் இது ஒரு சுழற்சி முறைப் பதவியே. எனவே எதிர்காலத்தில் கல்விக்கூடங்களில் கல்வியை மட்டும் நோக்காது அவர்களது உளநல்லிய லையும் கருத்தில் எடுப்பது சாலவும் சிறந்தது என்பது எனது கருத்து.

2. மன அழுத்தத்தைத் தூண்டும் மற்றைய காரணிகளில் ஏதோ ஒன்றை இழந்து விட்டோம். என்ற தொடர்ச்சியான எண்ணம், அது அன்புக்குரியதாகவோ அல்லது தொழில் துறைசார்ந்தோ, கல்வி சார்ந்தோ இருக்கலாம்.

3. அளவுக்கு அதிகமான மிதமிஞ்சிய பொறுப்புக்களும், சுமைகளும் ஒரே சமயத்தில் மூளையில் கிரகித்தல் (over loading)

4. காலவரையறை குறித்த அளவுக்கு அதிகமான வேலைப்பழு

5. வாழ்க்கைச் சக்கரத்தில் ஏற்படும் திடீர் மாற்றங்கள், மீளமுடியாது என்ற எண்ணங்களும்.



6. பொருளாதார ரீதியிலான வறுமை எதிர்கொள்வதில் சிரமம்

7. மது, போதைப்பொருள், புகைத்தல் பழக்கங்களிலினால் ஏற்படும் நரம்புத்தளர்வு

8. பாலியல் ரீதியிலான ஆண், பெண் இயலாமை எண்ணங்களும் திருப்தியின்மையும்.

9) வாழ்க்கையில் மாற்ற முடியாத தொடர்ச்சியான நோய்கள் (Chronic disease)

10) வாழ்க்கையில் நடந்த மறக்க முடியாத துன்பியல் சம்பவங்களும் உள ரீதியான பாதிப் புக்களும், உடல் உறுப்புக்களின் இழப்புகளும்.

மன அழுத்தம் படிப்படியாக அதிகரித்து இறுதியில் மனநோயாளியாக மனிதன் மாறலாம். இவ்வாறு மன அழுத்தம் (mental Stress) அதிகரித்துச் செல்லும்போது குறித்த பாதிப்புக்கு உட்பட்ட நோயாளி பின்வரும் இயல்புகளையும் காட்டக்கூடும்.

1). அழுத்த அதிகரிப்பால் ஏற்படும் தொடர்ச்சியான தலையிடி.
2) அதிகளவு தனிமையை விரும்புதல்.
3) தனியறையில் அனைத்தையும் மூடி தனியே உறங்க முற்படல்.
4) இரவு வெளிச்சங்களில் இருந்து விலகி இருக்க அதிக நாட்டம்.
5) நித்திரையின்மை.
6) உணவில் நாட்டம் குறைதல்.
7) எதிர்ப்பட்டவர்களைக் காரணமின்றி ஏசுதல்.
8) தன்னைச் சூழ உள்ள அனைவரும் தனக்கு எதிராகவே செயற்படுகிறார்கள் என்ற ஓர் உள் உணர்வு.
9) எதிலும் நாட்டம் கொள்ளாது ஒரு மூலையாகப் படுத்தோ அல்லது இருந்தோ வெறுமையான ஆழ்ந்த சிந்தனை.
10) சில சந்தர்ப்பங்களில் இரவில் எழும்பியிருந்து காரணமின்றி அழுதல் அல்லது கூச்சலிடுதல்.

இவ்வாறு மன அழுத்தங்களுக்கு உட்பட்டவர்கள் இதிலிருந்து விடுபடுவதற்குப் பொருத்தமான மருத்துவச் சிகிச்சை முறைகளையோ அல்லது மனப் பயிற்சிகளையோ பின்பற்றுவதன் ஊடாக இலகுவாக விடுதலை அடையலாம். இறைவனால் இந்த மனித குலத்திற்கு வழங்கப்பட்ட இந்த ஆறு அறிவு படைத்த மூளை சிந்திப்பதற்கு என்றே உருவாக்கப்பட்டது. எனவே சிந்தனைகளும் செயற்பாடுகளும் மனித முன்னேற்றத் தின் தூண்கள். ஆனால் சிந்தனைகள் ஒரு குறித்த மட்டத்தைத் தாண்டும் போதும், அதன் மீள்திறன் அதிகரிக்கும் போதும் மன அழுத்தம் உருவாகி மனநோயோ அல்லது இயலாமையோ சம்பவிக்கின்றது.

*(வளரும்)*



**ஆ. சிவானந்தம்,**
*(முதுகலைமாணி, சமூகவிஞ்ஞானம் மற்றும் உளவியல் துறை)*
*மாவட்ட அலுவலர், ஐ.நா.உணவு விவசாய நிறுவனம், யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org